349



18 NOV 1954
MADRAS

# உலகம் சுற்றும் தமிழன்

ஏ. கே. செட்டியார்

U8.1
N54
108047

# உலகம் சுற்றும் தமிழன்

ஏ. கே. செட்டியார்

குமரி மலர் காரியாலயம்
ஆழ்வார்ப்பேட்டை – சென்னை-18

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| முதல் | பதிப்பு | — | விக்கிரம | – | சித்திரை |
| இரண்டாம் | ,, | — | ,, | – | புரட்டாசி |
| மூன்ரும் | ,, | — | பார்த்திப | – | ஐப்பசி |
| நான்காம் | ,, | — | விரோதி | – | சித்திரை |
| ஐந்தாம் | ,, | — | விக்ருதி | – | ,, |
| ஆரும் | ,, | — | ஜய | – | ஐப்பசி |

விலை ரூபாய் ஒன்று

குமரி மலர் அச்சகம் – சென்னை – 18

# பதிப்புரை

'உலகம் சுற்றும் தமிழன்' என்ற புத்தகத்தின் ஐந்து பதிப்புக்கள் இது வரை வெளிவந்துள்ளன.

அந்தப் புத்தகத்திலிருந்து, சில கட்டுரைகளைக் காலத்துக்கு ஏற்ற திருத்தங்கள் செய்து, ஆறுவது பதிப்பாக இதனை வெளியிடுகிறோம்.

இப் புத்தகத்திலுள்ள கட்டுரைகள் யுத்தத்திற்கு முன் எழுதப் பெற்றவை.

1-11-1954

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | உலகமெங்கும் ஒலிக்கும் பெயர் | 1 |
| 2. | கவிஞர் நோகுச்சி | 5 |
| 3. | ஹாவாய்த் தீவுகள் | 8 |
| 4. | அமெரிக்கா | 15 |
| 5. | சிவப்பு இந்தியர் | 22 |
| 6. | அயர்லாந்தில் மூன்று நாள் | 30 |
| 7. | உலகில் அழகிய பாரிஸ் | 37 |
| 8. | ரோமா ரோலா | 42 |
| 9. | பின்லந்தில் | 45 |
| 10. | கோப்பன்ஹேகன் மகாநாடு | 53 |
| 11. | ஜெர்மனியில் ஒரு தமிழ்ப் புலவர் | 60 |
| 12. | பிராஹா | 64 |
| 13. | இத்தாலியில் | 70 |
| 14. | பொருட்காட்சிக்குத் தக்க மாளிகை | 74 |
| 15. | தென்னப்பிரிக்காவில் | 76 |
| 16. | கப்பல் பிரயாணம் | 85 |
| 17. | கப்பல் ஞாபகங்கள் | 91 |
| 18. | பிரயாண நினைவுகள் | 93 |

# உலகமெங்கும் ஒலிக்கும் பெயர்

ஜப்பானில், ஒவ்ஞ என்னும் சிறிய ரயில் நிலையத்தில் ரயிலுக்காகக் காத்துக்கொண்டு நின்றேன். முன்பின் அறியாத இரண்டு ஜப்பானிய வாலிபர் வேகமாக வந்தனர்.

அவர்களில் ஒருவன் என் கையைப் பிடித்துக் குலுக்கி, "நீங்கள் காந்தியடிகளின் நாட்டிலிருந்து வந்தவர்தானே?" என்றான்.

"ஆம்" எனத் தலையசைத்தேன்.

"உலகத்தில் காந்தியடிகளைப் போன்ற மனிதர் யாரும் இடையாது. ஜப்பானில் எத்தனையோ வீரர் பிறந்திருக்கிறார்கள்; சக்கரவர்த்திகள் பிறந்திருக்கிறார்கள். ஆனால் காந்தியடிகள் போன்ற சிறந்த மனிதர் பிறந்ததேயில்லை" என்றான்.

சக்கரவர்த்தியையே கண்கண்ட தெய்வமாகக் கொண்டாடும் ஜப்பானியர் காந்தியடிகளைப் பாராட்டுவதைக்கண்டு ஆச்சரியமடைந்தேன்.

* * * *

தாக்கா வோக்கா என்பவர் ஜப்பான் பார்லிமெண்டு அங்கத்தினர். சில வருஷ காலம் அவர் கல்கத்தாவில் இருந்தாராம். இந்தியாவைப் பற்றியும் காந்தியடிகளைப் பற்றியும் அவர் இரண்டு புத்தகங்கள் எழுதியுள்ளார். ஜப்பானில், அப்பொழுது காங்கிரஸ் தலைவராக இருந்த ஆனந்தமோகன் ஷகாய் மூலம் அவருடைய அறிமுகம் எனக்குக் கிடைத்தது. ஒருநாள் அவரில்லம் சென்றேன். இந்திய முறைப்படி நமஸ்காரம் செய்து வரவேற்றார். அவர் வீட்டிலே காந்தியடிகளின் உருவச்சிலை, சர்க்கா முதலியன காட்சி யளித்தன.

டோக்கியோவில் ஒரு திரைப்படக் காட்சிசாலைக்குச் சென்றபொழுது, அங்கு உட்கார இடமில்லாது நின்று கொண்டிருந்தேன். அப்பொழுது வெளியில் செல்ல எண்ணிய ஒரு சீனப் பெண், "ஹலோ! இங்கே உட்காருங்கள். காந்திஜீ சௌக்கியமா?" என்ருள்.

* * * *

இரண்டாவது உலக யுத்தத்திற்கு முன் ஷாங்காய் நகருக்குச் சென்றிருந்தேன். ஒருநாள் சீனர் வசிக்கும் இடத்திற்குச் சென்றேன். அங்கே காந்தியடிகளின் பெரிய உருவப்படம் தென்பட்டது. உலகின் உள்ளங்கவர் உருவம்! சீனச் சித்திரக்காரன் திறமை! விலை என்ன என்று கேட்டேன். அவனுக்கு ஆங்கிலம் தெரியாது; எனக்குச் சீனம் தெரியாது. மனித மொழி—சைகைதான். கடைசியாக, பதினெரு ரூபாய்க்கு அந்தப் படத்தை விலைக்கு வாங்கினேன்.

* * * *

கொரியா மாணவர் கூட்டத்தில் பிரசங்கம் செய்து கொண்டிருந்தபொழுது, "காந்தியடிகள் அமெரிக்காவுக்குச் செல்ல நேர்ந்தால், ஜப்பானுக்கும் கொரியாவுக்கும் வரக்கூடும்" என்றேன். நீங்கள் நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி; அங்கிருந்த கொரியா மாணவன் ஒருவன் கூட்டத்தில் என்னைக் கட்டிப் பிடித்துக்கொண்டு ஆனந்தக் கூத்தாடினன்.

* * * *

பசிபிக் மகா சமுத்திரத்தின் மத்தியிலுள்ள அழகிய ஹாவாய்த் தீவில் ஹில்லோ என்னும் நகரத்துக்குச் சென்றேன். உண்மை இந்தியனெருவனைப் பார்க்க எல்லோரும் ஆச்சரியமடைந்தனர். அன்றைய தினம் 'ஹில்லோ டிரிபியூன்' பத்திரிகையின் முதல் பக்கத்தில் காந்தியடிகள், நாட்டிலிருந்து ஒரு பத்திரிகைக்காரர்

ஹில்லோவுக்கு வந்திருக்கிறார்' என்று பெரிய எழுத்துக்களில் பிரசுரிக்கப்பெற்றிருந்தது.

* * * *

அமெரிக்காவிற்குச் சென்றிருந்த சமயம் நியூயார்க் நகரத்தில் வானொலியில் பேசும் வாய்ப்புக் கிடைத்தது. 'கரண்ட் ஹிஸ்டரி' பத்திரிகை ஆசிரியர் கேள்விகள் கேட்டார். முதலாவது கேள்வி, "காந்தியடிகள் ஹரிஜனங்களுக்குச் செய்த நன்மைகள் என்ன?" என்பதுதான்.

* * * *

ஆண்டுதோறும் அமெரிக்காவில் காந்தியடிகளின் பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறார்கள். அன்று பல அமெரிக்கர் காந்திக் குல்லா அணிந்துகொள்வர்.

* * * *

பிராங்ஸ்வில் என்பது அமெரிக்காவில் பெரிய பணக்காரர் வசிக்குமிடம். அங்குள்ள பெண்கள் பள்ளிக்கூடமொன்றில் இந்தியாவைப் பற்றிய கேள்விகளுக்குப் பதில் சொல்லுவதாகக் கூறிச் சென்றேன். பதினான்கு முதல் இருபது வயதுவரையுள்ள சுமார் பதினைந்து பெண்கள், அத்தனை பேரும் சேலையணிந்து, தரையில் சமுக்காளம் விரித்து, அதில் உட்கார்ந்திருந்தனர். காந்தியடிகளின் பெரிய உருவப்படமும், தேசியக் கொடியும், சர்க்காவும் அங்கு காணப்பெற்றன. அன்றைய கேள்விகள் முழுவதும் காந்தியடிகளைப் பற்றித்தான்.

* * * *

ஒன்பது கோடி ரூபாய் செலவில் கட்டப்பெற்ற நியூயார்க் புத்தகசாலையில் காந்தியடிகளைப் பற்றிய புத்தகங்களைப் பார்க்கச் சென்றேன். அங்குள்ளவர் கூறினார்: "காந்தியடிகளைப்பற்றி ஆங்கிலத்தில் மட்டும் இருநூறு புத்தகங்கள் இருக்கின்றன. இன்னும் இருபத்தாறு மொழி

களிலும் புத்தகங்கள் உள்ளன. இவை தவிர காந்தியடிகள் எழுதிய புத்தகங்கள் வேறு இருக்கின்றன.''

* * * *

அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவிற்கு வருகையில், ஓர் ஆங்கிலக் கப்பலில் காந்தியடிகள் பிறந்த தினத்தைக் கொண்டாடினோம்; பல அமெரிக்கர் கலந்துகொண்டனர். அன்று எங்களுக்குக் கப்பலில் இந்திய உணவு கிடைத்தது.

* * * *

ஐரோப்பாவிலிருந்து ஆஸ்திரேலியா செல்லும் கப்பலில் போலந்து தேசப் பெண் ஒருத்தியைச் சந்தித்தேன். அவள் ஒரு பாட்டுப் பாடினாள். அதில் இருமுறை 'மகாத்மா காந்தி' என்றாள். கேட்டபொழுது, போலந்தில் உலகப் பெரியார்மீது கவி பாடுவதுண்டென்றும், அவர்களுள் காந்தியடிகள் முக்கியமானவரென்றும் குறிப்பிட்டாள்.

* * * *

உலகிற் பெரும்பான்மையோரால் புகழப்படும் தனிப் பெருமையுடையவர் காந்தியடிகள் ஒருவர்தாம். வாழ்க காந்தியடிகளின் நாமம்! அவரது புகழ் நீடூழி வாழ்க!!

# கவிஞர் நோகுச்சி

உலகப் புகழ்பெற்ற ஜப்பானியக் கவிஞர்களில் யோனே நோகுச்சி ஒருவர். ஜப்பானிய மொழியிலும் ஆங்கில மொழியிலும் கவி புனையும் ஆற்றல் பெற்றவர் இக்கவிஞர். இவர் இந்தியாவுக்கு விஜயம் செய்து பல சர்வகலாசாலைகளில் பிரசங்கம் செய்தார். காந்தியடிகளைச் சந்தித்து உரையாடினர். காந்தியடிகளின் வசீகர சக்தியால் கவரப்பெற்ற இக்கவிஞர், இந்தியாவைப்பற்றி ஜப்பானிய மொழியில் ஒரு புத்தகம் எழுதியுள்ளார்.

ஜப்பானிலிருந்தபோது இக்கவிஞரைச் சந்திக்கும்படியான சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. டோக்கியோ நகரில் சக்குராயாமா என்ற பகுதியிலுள்ள இவரில்லத்திற்குச் சென்றேன். இயற்கை வனப்பு நிறைந்த சிறு தோட்டமொன்றின் நடுவேயுள்ள அழகிய வீட்டிலே இக் கவிஞர் எளிய வாழ்க்கை நடத்திவந்தார். வீட்டினுள்ளே சென்றதும் வயது முதிர்ந்த ஓர் அம்மையார் வரவேற்றுச் சிறிய அறையொன்றிலே உட்காரும்படிக் கூறினர். கவிஞர் சில நிமிஷ நேரங்களில் அவ்வறைக்கு வருவார் என அறிவித்தார். அவ்வறையை ஒரு முறை சுற்றி நோக்கினேன். பனையோலையில் எழுதப்பெற்ற வரவேற்புரை ஒருபுறம்; வெள்ளித் தாம்பாளம், வெள்ளிக் கூஜா முதலிய சன்மானப் பொருள்கள் ஒரு புறம்; தாகுரின் அரிய நூல்கள் பிறிதொருபுறம்! இந்தியச் சர்வகலாசாலைகள் அளித்த வரவேற்புப் பத்திரங்கள் அறையிலிருப்போர் படிக்கத்தக்க நிலையில் வைக்கப் பெற்றிருந்தன.

சில நிமிஷங்களில் கவிஞர் நோகுச்சி ஜப்பானிய உடையுடன் அவ்வறைக்கு வந்தார்; இந்தியமுறையில் நமஸ்காரம் செய்து வரவேற்ருர்.

"சென்னையில் வெப்பம் அதிகமல்லவா? சென்னையைப் பற்றிய சந்தோஷ நினைவுகள் இன்னும் என்னுள்ளத்திலே தோன்றுகின்றன. சத்தியமூர்த்தியோடு காங்கிரஸ் பொருட்காட்சிக்குச் சென்றேன். சென்னை மாகாணத்தவர் பெரிதும் உணர்ச்சியுடையவர்கள் என்பதில் ஐயமில்லை" என்ருர்.

நான் சென்னை மாகாணத்தைச்சேர்ந்தவனென்பதும், பத்திரிகை நிருபன் என்பதும் கவிஞருக்கு ஏற்கெனவே தெரியும்.

இந்தியத் தலைவர்களோடு தாம் கொண்டிருந்த தொடர்பை எண்ணி எண்ணி, அவர் மகிழ்ச்சியடைந்தார். இந்தியாவைப் பற்றிக் 'காண்டெம்பொரரி ஜப்பான்' என்ற பத்திரிகைக்கு அனுப்புவதற்காக இருந்த கட்டுரையைப் படித்தார். இடையிடையே உரையாடினேம்.

"காந்தியடிகள் உலகிற் சிறந்த மனிதர். அவர் புன்சிரிப்பு உலகத்தைக் கொள்ளை கொள்ளும் தன்மையது. அவர் சொல்லும் ஒவ்வொரு சொல்லிலும் தத்துவம் அடங்கியிருக்கிறது. அவருக்கேற்ற காரியதரிசி மகாதேவ தேசாய். அவருடைய அடக்கத்தையும் உபசாரத்தையும் நான் மறக்கமுடியாது" என்ருர் கவிஞர்.

ஜப்பானில் இந்தியாவைப்பற்றிப் பிரசாரம் செய்தவர்களில் கவிஞர் குறிப்பிடத்தக்கவர்.

கவிஞர் நோகுச்சி, நகோயா நகருக்கருகேயுள்ள சுசிமா என்ற கிராமத்தில் பிறந்தார். பதின்மூன்ரும் வயதில் டோக்கியோ நகருக்கு வந்து கெய்யோ சர்வ கலாசாலையில் பயிற்சி பெற்ருர்; பதினெட்டாவது வயதில் அமெரிக்கா சென்ருர்; பதின்மூன்ருண்டுகள் அமெரிக்காவில் தங்கினர்.

இடையே ஐரோப்பா சென்று திரும்பினர்; ‘கண்டதும் காணுததும்’ என்ற ஆங்கிலப் பாடல்களை முதலில் அமெரிக்காவில் பிரசுரித்தார். இவருடைய நூல்கள் ஜெர்மன், பிரெஞ்சு முதலிய மொழிகளிலே மொழிபெயர்க்கப் பெற்றன. ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையாரின் அழைப்புக் கிணங்கி இங்கிலாந்திற்குச் சென்று பிரசங்கம் செய்தார். அப்பொழுதுதான் சரோஜினி தேவியை முதன் முதலாகச் சந்தித்தார். ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் செய்த பின் தாய்நாடு திரும்பினர். மீண்டும் அமெரிக்காவுக்குச் சென்று பல பிரசங்கங்கள் செய்தார். இந்தியா, இலங்கை, பர்மா முதலிய நாடுகளுக்குச் சென்று சொற்பொழிவு நிகழ்த்தினர்.

இவரிடம் நான் விடைபெற்றபொழுது, “இந்தியாவைப்பற்றிய என் எண்ணங்களை நான் என்றும் மறக்க முடியாது. அவ்வரிய நாட்டிற்கு மீண்டும் செல்லும் சந்தர்ப்பத்தை எதிர்பார்க்கிறேன். நான் இந்தியாவுக்குச் சென்றபொழுது பண்டித நேரு ஐரோப்பாவிலிருந்தார். அவரைச் சந்திக்கும் பாக்கியம் கிடைக்கவில்லை. என் கருத்துக்களைக் கவிகளாகப் புனைய எண்ணியுள்ளேன்” என்றுர் கவிஞர்.

# ஹாவாய்த் தீவுகள்

**ப**சிபிக் மகா சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ள இவ்வழகிய தீவுகளை, காப்டன் குக் என்பவர் 1788 ஆம் ஆண்டில் கண்டுபிடித்தார். பல நூற்றாண்டுகளாக இத்தீவுகள் உலகத்தின் மற்றப் பகுதிகளுடன் எவ்விதத் தொடர்புமில்லாதிருந்தன. ஆனால் இன்றைய நாகரிக உலகத்திலே ஹாவாய்த் தீவுகள் ஒரு ஸ்தானம் வகிக்கின்றன. பசிபிக் மகா சமுத்திரத்தில் செல்லும் பெரும்பாலான கப்பல்கள் இங்குள்ள ஹொனலுலு துறைமுகத்தில் தங்காமல் செல்வதில்லை.

அமெரிக்காவின் பசிபிக் கரையோரத்திலிருந்து சுமார் இரண்டாயிரத்து நூறு மைல் தூரத்திலும், ஜப்பானிலிருந்து சுமார் மூவாயிரத்து ஐந்நூறு மைல் தூரத்திலும் இத் தீவுகள் அமைந்திருக்கின்றன. ஹாவாய் என்பது பிரதம தீவு. மா ஊய், ஒ ஹா ஊ, கா ஊ ஆய், கலாவா ஓ முதலிய நான்கு தீவுகளும், இன்னும் மிகச் சிறிய தீவுகள் பலவும் சேர்ந்து ஹாவாய்த் தீவுகள் என்று பெயர். இத்தீவுக் கூட்டங்களின் விஸ்தீரணம் ஆறாயிரத்து நானூற்றைம்பது சதுர மைல்.

காப்டன் குக், இத்தீவுகளைக் கண்டு பிடித்தபொழுது இவை தனித்தனி அரசர்களின் ஆட்சியில் இருந்தன. பின்னர், காமிகா மேஹா என்ற வீரம் நிறைந்த மன்னன் மற்றத் தீவுகளையெல்லாம் வென்று, தனி அரசனாக விளங்கினான். இவன் சிறந்த நீதிமானாக இருந்ததோடு குடிகளின் நன்மைக்காகப் பாடுபட்டான். ஹாவாயர்கள் இவனைத் தெய்வமாகக்கொண்டாடினர். இவனைப்பற்றிய கதைகளும் பாட்டுக்களும் எண்ணில. இவை தேசியப் பொக்கிஷமாக

இருப்பதோடு ஹாவாயர்களுக்குத் தேசீய உணர்ச்சியையும் ஊட்டுவன. இவன் இறந்த பின்னர் நாட்டிலே குழப்ப முண்டாயிற்று. அமைதி யின்மை நிலவிற்று. மதப்பற்றுடைய சில ஹாவாயர்களுங்கூட மதத்தில் நம்பிக்கை யிழந்தனர். 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்று வாழத் தலைப்பட்டனர். காமிகா மேஹாவோடு ஹாவாயர்களின் தேசீய வாழ்க்கை முடிவடைந்தது என்று கூறலாம். இச்சிறந்த மன்னனின் பொன்னிறமுள்ள கம்பீரமான உருவச்சிலை ஹொனலுலு நகரை அலங்கரித்து நின்றது.

ஹாவாயர்களின் பூர்வீகத்தைப் பற்றிச் சரித்திர ஆசிரியர்களே இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. காட்டுத் தேவதைகளை வணங்கினார்களென்றும், பெருத்த மூட நம்பிக்கை கொண்டிருந்தார்களென்றும் தெரிகிறது. பெரும்பாலான மக்களுக்கு மதமே கிடையாது.

பலவிதக் குழப்பங்களுக்குப் பின்னர், 1898 ஆம் ஆண்டில், ஹாவாய்த் தீவுகள் அமெரிக்க ஐக்கிய நாடுகளோடு இணைந்தன. இத்தீவுகள் அமெரிக்காவின் குடியேற்ற நாடுகளல்ல; அமெரிக்காவின் ஆட்சியிலுள்ள நாடுகளுமல்ல. இவை அமெரிக்காவின் ஒரு பகுதியேயாகும். அமெரிக்காவின் எல்லையாகவும் இவை கருதப்படுகின்றன. ஆனாலும் அமெரிக்க 'ஸ்டேட்டு'களுக்குள்ள உரிமை போன்று ஹாவாய்க்கு உரிமை கிடையாது. ஹாவாய் மக்களில் தேர்ந்தெடுக்கப்பெற்ற ஒரு பிரதிநிதி 'செனெட்' சபையில் அங்கம் வகிப்பார். விவாதங்களில் கலந்து கொள்ளத்தான் இவருக்கு உரிமையுண்டு; ஓட்டுரிமை கிடையாது.

ஹாவாய்த் தீவுகளின் கவர்னரையும் நீதிபதிகளையும் அமெரிக்காவின் குடியரசுத் தலைவரே நியமனம் செய்வார். இக் கவர்னர் 'செனெட்' சபைக்குப் பொறுப்பாளி.

ஹாவாயில் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற ஜனப் பிரதிநிதி சபை ஒன்று உண்டு. இச் சபை இரண்டு ஆண்டிற்கொருமுறை அறுபது நாள் கூடும். இச்சபை செய்யும் தீர்மானங்களை நிராகரிக்கும் உரிமையும் கவர்னருக்கு உண்டு. ஜனப் பிரதிநிதி சபையின் சம்மதத்தோடு, பல இலாகாக்களின் தலைவர்களைக் கவர்னர் நியமனம் செய்வார். ஸ்தல ஸ்தாபனங்களெல்லாம் ஜனப்பிரதிநிதி சபையின் ஆட்சிக்கு உட்பட்டனவாகும்.

இத் தீவுகளின் ஜனத்தொகை சுமார் மூன்றேகால் லட்சம்தான். இவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் அமெரிக்கக் குடிகள். ஜனத்தொகையைப்பற்றிய புள்ளி விவரங்களை நோக்கினால் இத்தீவுகள் பல தேச மக்களையும் கொண்டவை என்பது விளங்கும்:

| | | |
|---|---|---|
| அமெரிக்க, பிரிட்டிஷ், ஜெர்மன், ரஷ்ய மக்கள் | 36 | ஆயிரம் |
| சீனர் | 25 | ,, |
| பிலிப்பைன் தீவுக்காரர் | 50 | ,, |
| ஹாவாயர் | 21 | ,, |
| ஜப்பானியர் | 128 | ,, |
| கொரியர் | 6 | ,, |
| ஹாவாயர்களுக்கும் மற்றவர்களுக்கும் பிறந்தவர்கள் | 22 | ,, |
| போர்த்துகீஸியர் | 27 | ,, |
| போர்ட்டோ ரிக்கன் | 6 | ,, |
| ஸ்பானியர் | 2 | ,, |

இத்தீவுகளிலே நிறத் திமிரோ, ஜாதித் துவேஷமோ கிடையாது. எல்லோரும் சமத்துவமாகவும், சகோதரப் பான்மையுடனும் சுதந்திரத்துடனும் வாழ்பவர்கள். ஜப்பானியர் அளவுக்கதிகமாக இங்கு குடியேறியிருப்பது குறிப்பிடத்தக்கது. இப்பொழுது ஜப்பானியர் இங்கு குடியேற அனுமதிக்கப் பெறுவதில்லை. ஹாவாயர் பழுப்பு நிறமுள்ள மக்கள்; அழகிய தோற்ற

முடையவர்கள். கலப்பு மணம் அதிகரித்துவிட்டபடியால் உண்மையான ஹாவாயர்களைக் காண்பதே கஷ்ட மானதாகும்.

ஹாவாயர்களின் மொழியில் பன்னிரண்டு எழுத் துக்களே உள்ளன. 'ட' என்ற எழுத்துக் கிடை யாது. அதற்குப் பதிலாக 'க' என்ற எழுத்தை உச்சரிப் பார்கள். இம்மொழிக்குப் போதுமான இலக்கணம் கிடை யாது. ஒரே வார்த்தைக்குச் சந்தர்ப்பத்தையொட்டிப் பல பொருள்கள் உண்டு. இக்காரணங்களால் இம்மொழி மறைந்து வந்தது. ஆங்கிலமே அனைவரும் பேசும் மொழியாகும். ஹாவாயின் தேசீய மொழி ஆங்கிலம் என்று கூறுவது மிகையாகாது. ஆனாலும் ஹாவாய் மொழி யில் மற்றவர்கள் பேசுவதைக் கேட்கும்பொழுது இனிமை யாக இருக்கும். சில வார்த்தைகள் :

| | | |
|---|---|---|
| அலோஹா | — | வந்தனம் |
| கேக்கிகனே | — | பையன் |
| கேக்கி மாஹினி | — | பெண் |
| விக்கி விக்கி | — | அவசரமாய் |
| ஹலே புலே | — | கோயில் |
| கூவி கூவி | — | நில்லுங்கள் |
| ஹுலா ஹுலா | — | தேசீய நாட்டியம் |
| மாலிஹினி | — | அந்நியர் |

ஹாவாய்த் தீவுகளில் *175* பள்ளிக்கூடங்கள் இருந்தன. *1,719* ஆசிரியர்கள் *55,044* மாணவ மாணவி களுக்குப் பாடங் கற்பித்தனர். இந்தப் பள்ளிக் கூடங்கள் அரசாங்கத்தாரால் நடத்தப் பெறுவனவாகும். தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களில் சுமார் பத்தாயிரம் மாணவ மாணவிகள் பயின்றனர்.

இந்நாட்டில் கரும்பு உற்பத்தி அதிகம். முதன் முதலாகக் காப்டன் குக் இந்நாட்டைக் கண்டுபிடித்த

பொழுது சில கரும்புச் செடிகளைக் கொண்டுவந்தார். வருடமொன்றுக்கு இருபது கோடி ரூபாய் பெறுமான எட்டு லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதியாகிறது என அங்கிருந்தபொழுது அறிந்தேன்.

அடுத்தபடியாக, அன்னாசிப்பழம். 1888 ஆம் ஆண்டு ஜான் கிட்வெல் என்பவர் முதலாவது அன்னாசிச் செடியைக் கொண்டு வந்தார். அன்னாசியை, பழமாகவும் சாறாகவும் பக்குவப்படுத்தி ஏற்றுமதி செய்தனர். வருடமொன்றுக்கு ஏழு கோடி ரூபாய் பெறுமான அன்னாசி ஏற்றுமதியாயிற்று என அறிந்தேன்.

மூன்றாவதாக, யாத்திரிகர்கள். யாத்திரையை ஒரு தொழிலாகக் கருதுவோமானால் இத் தொழில் இங்கு மூன்றாவது ஸ்தானம் வகித்தது. வருஷத்திற்குச் சுமார் இருபதினாயிரம் யாத்திரிகர்கள் இங்கு வருவார்கள். இங்கு சராசரி சீதோஷ்ணம் எழுபத்து நான்கு டிகிரிதான். மிகவும் ஆரோக்கியமான இடமாக இருப்பதால் பணக்காரர் பலர் உல்லாச யாத்திரையாகவும், சிலர் உடல் நலத்தின் பொருட்டும் இங்கு வருவார்கள். மிகச் சிறந்த அரண்மனை போன்ற உணவு விடுதிகள்; நீளமான தார் போட்ட சாலைகள் பல; போக்குவரத்து வசதிகள் நன்கமைந்திருந்தன. தினந்தோறும் மற்றத் தீவுகளுக்கு ஆகாய விமான வசதிகள் உண்டு. பெரும்பாலோர் சொந்த மோட்டார் வைத்திருந்தனர். ஒரு சில குதிரை வண்டிகளே தென்படும். துறைமுகத்தில் கப்பல்கள் தங்கும் பொழுது நூற்றுக்கணக்கான அழகிய இளம் ஹாவாய்ப் பெண்கள் 'ஹுலா ஹுலா' நடனமாடுவர். யாத்திரை வாசிகளின் கழுத்திலே அழகிய மலர் மாலைகளைப் போடுவார்கள். இம்மாலைகள் ஒரு ரூபாய் முதல் பத்து ரூபாய் வரை விலையுள்ளனவாகும். மாலைகள் அணிந்து கொள்வது இந்நாட்டு வழக்கம். மாலைகள் அணிய சமய சந்தர்ப்பங்கள்

பார்ப்பதில்லை; நினைத்த பொழுதெல்லாம் அழகிய மாலை களை அணிந்து ஆனந்தமாகப் பாடிக்கொண்டு ஆண்களும் பெண்களும் வேலை செய்வார்கள்.

தென்னை மரங்களும் பனை மரங்களும் இந்நாட்டில் ஏராளம். தேங்காய் மூடிகளைக் கொண்டு இவர்கள் தயாரிக்கும் பொருள்கள் கலை வனப்புடையன. இன்னும் பல தொழில்கள். காபி, மீன் பாடம் செய்தல், வாழைப் பயிர், விவசாயம் முதலியனவும் உண்டு. விவசாயம் படிப் படியாக க்ஷீணதசை யடைந்து வந்தது. ஜப்பானியர் ஜப்பானிலிருந்து அரிசி இறக்குமதி செய்தனர். விலை அதிகமாயிருந்தபோதிலும் அவர்கள் பொருட்படுத்துவ தில்லை. ஹாவாய்த் தீவுகளில் அமெரிக்கக் குடிகளாக வாழ்ந்தபோதிலும் ஜப்பானியர் ஜப்பானியராகவே யிருப்பார்கள்.

ஹாவாயர் மூட நம்பிக்கையின் அடிமைகள்; சில சமயங்களில் தன்னம்பிக்கை இழந்து விடுவார்கள். ஜனத் தொகையில் பதினாறில் ஒரு பங்குள்ள இந்த ஹாவாயர் பெரும்பாலும் கிராமங்களிலே—குடிசைகளிலேதான் வசிப் பார்கள். இயற்கையிலே இன்பம் காண்பதில் இவர்களுக் குப் பிரியமதிகம். களியாட்டங்களிலே அதிகக் கருத்துச் செலுத்துவார்கள். இவர்கள் வாழ்க்கை மிக்க எளிமை யானது. சோறும் மீனுந்தான் இவர்களின் முக்கிய ஆகாரம். சீன உணவு, ஜப்பானிய உணவு, அமெரிக்க உணவு முதலியவற்றையும் இவர்கள் உண்பார்கள். பெரும்பாலும் அமெரிக்கர்களைப் போன்றே ஆடை யணிவர். சங்கீதத்தில் இவர்களுக்கு எல்லையற்ற பிரியம்.

மோர்மன் என்ற மதத்தினர் இங்குள்ளனர். இவர் களுடைய அழகிய ஆலயம் ஹொனலுலு நகரில் அமைக்கப் பெற்றிருந்தது. இது முற்றிலும் சலவைக் கல்லாலாகிய கட்டிடம்.

'பிஷப் மியூசியம்' ஹொனலுலுவிலுள்ள பிரசித்தி பெற்ற பொருட்காட்சிசாலை. இது ஹாவாய்த் தீவுகளின் முன்னேற்றத்தை ஒருவாறு நன்கு விளக்கும். வைக்கிக்கி என்பது ஹொனலுலு நகரின் ஒரு பகுதி; நான்கு மைல் நீளமுள்ள அழகிய கடற்கரை. நாகரிக வசதிகளுள்ள பல வீடுகளும் உணவு விடுதிகளும் இங்குண்டு. வைக்கிக்கியிலுள்ள திரைப்படக்காட்சிசாலை உலகில்சிறந்தவைகளில் ஒன்று. காட்சிசாலையினுள்ளே இருந்தபோதிலும் வெட்ட வெளியில் இருப்பது போலத் தோன்றும், உண்மையான மரங்கள் மண்டபத்தின் இருபுறங்களிலும் இருக்கின்றன: கூரையை நோக்கினல் நீல நிறமுள்ள ஆகாயம். மேகங்கள் நகர்ந்த வண்ணமாய் இருக்கும்; நட்சத்திரங்கள் பிரகாசிக்கும். உண்மையான ஆகாயம் மப்பும் மந்தாரமுமாயிருந்த போதிலும் இந்தச் செயற்கை ஆகாயம் எப்பொழுதும் பிரகாசமாயிருக்கும்.

# அமெரிக்கா

ஜப்பானிலிருந்து சான்பிரான்ஸிஸ்கோவுக்கு இருபத்து நான்கு நாள் பிரயாணம். ஹாவாய்த் தீவில் தங்கிய இரண்டு மூன்று நாட்களைத் தவிர மற்ற நாட்களெல்லாம் கப்பலில்தான். சான்பிரான்ஸிஸ்கோ துறைமுகத்தைக் கப்பலில் நெருங்க நெருங்க, 'புது உலகத்தைப் பார்க்கப் போகிறோம்' என்ற உற்சாகம் அதிகரித்தது.

"அதோ! ஐம்பது அறுபது மாடிக்கட்டிடங்கள் தோன்றுகின்றனவே! அதுதான் சான்பிரான்ஸிஸ்கோ" என்றார் அருகில் நின்ற அமெரிக்கர்.

சில நிமிஷங்களுக்குள், உலகிற் பெரிய பாலமென்று கருதப்படுகிற 'கோல்டன் கேட்பிரிட்ஜ்' என்ற தங்கவாசல் பாலத்தின் கீழே எங்கள் கப்பல் சென்றது.

"இதோ தெரிகிற தீவும் கட்டிடமும் என்ன?" என்று கப்பலிலிருந்த ஜப்பானிய அதிகாரியைக் கேட்டேன்.

"அமெரிக்காவிலுள்ள, தப்பியோட முடியாத சிறைகளிலே இது ஒன்று. பேர்போன ஆல்கபோன் இங்கேதான் சிறை வைக்கப்பட்டிருக்கிறான்" என்று கூறினார்.

கப்பல் துறைமுகத்தை நெருங்கிற்று. அப்படியே கரையில் தாவிக் குதிக்கலாமா என்றுகூடத் தோன்றியது. வழக்கமான சடங்குகள் முடிந்தபின், கப்பலதிகாரிகளின் 'கருணை'யினால் கரைக்குச் சென்றேன். 'புதிய உலகின்' முதல் துறைமுகத்தின் இரவுக் காட்சிகள் எனக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தன. மூன்று வாரங்கள் ஜப்பானியக் கப்பலில் நிறையச் சாப்பிட்டதன் பயனாக எனது உடம்பு மெலிந்திருந்தது. ஆர்வத்தோடு ஓர் இந்தியரின் வியாபார நிலயத்துக்குச் சென்று இந்திய உணவை ருசித்தேன்.

மறு நாள், எங்கள் கப்பல் சான்பெட்ரோ துறை முகத்தை அடைந்தது. லாஸ் ஏஞ்சல்ஸ் நகரத்துக்கு இதுதான் துறைமுகம். கப்பல் ஏழு மணிக்குக் கரை சேர்ந்தது. எல்லோரும் சுலபமாகக் கரையிலிறங்கித் தங்களிஷ்டம் போல் சென்றனர். கப்பலில் இருந்த இந்தியன் நான் ஒருவன்தான். எனவே துரதிருஷ்டமும் தொந்தரவும் எனக்குத்தான் நேர்ந்தன.

ஆஜானுபாகுவான அந்நியர் பதிவு அதிகாரி முன்னே கொண்டுபோய் நிறுத்தப்பட்டேன். என்னுடைய 'பாஸ் போர்'டைப் பலமுறை பரிசீலனை செய்துவிட்டு, என்னை உற்றுப் பார்த்தார். அச்சடித்த பாரம் ஒன்றைக் கொடுத்து அதைப் பூர்த்தி செய்யும்படிக் கூறினர். அதில் 'உனக்குப் புத்திசுவாதீன மிருக்கிறதா?' என்றொரு கேள்வி இருந்தது. இதைப் படித்ததும் எனக்கே சந்தேக முண்டாயிற்று. அந்தப் பாரத்திலுள்ள மற்ற கேள்வி களைப் படித்தபொழுது என்னுடைய சந்தேகம் உறுதிப் பட்டது.

'உனக்கு எழுதப்படிக்கத் தெரியுமா?' என்பது மற்றொரு கேள்வி. அதைப்பற்றி எனக்குச் சந்தேகமே உண்டாகவில்லை. அந்தப் பாரத்தை முற்றிலும் படித்து மூளை குழம்பியதற்குக் காரணம் நான் படித்த பாவந்தா னல்லவா?

அந்தப் பாரங்களைப் பூர்த்தி செய்வது அந்நியர் எல்லோருக்கும் பொதுவான சடங்கு. கடைசியாக இரவு ஒன்பது மணிக்குக் கப்பலை விட்டிறங்கினேன்.

முன்பின் தெரியாத ஒரு நாட்டிலே, நிறவேற்றுமை நிறைந்த லாஸ் ஏஞ்சல்ஸ் நகரிலே, எனது நிலை பரிதாபமாய் இருந்தது. கையில் சிறு பெட்டியுடன், இளைஞர் கிறிஸ்தவச் சங்கத்துக்குச் (ஒய். எம். சி. ஏ.) சென்று அங்குள்ள அதிகாரியிடம் தங்குவதற்கு இடங்கொடுக்கும்படிக்

கேட்டேன். என்னைப் பார்த்ததும்—என் நிறத்தைப் பார்த்ததும்—அந்த அதிகாரிக்குக் கோபம் பொங்கிற்று. பாவம், அவர் என்னை நீக்ரோ என்று நினைத்துக் கொண்டார். அந்தக் காலத்தில் தலைப்பாகையின்றி அமெரிக்கா செல்லும் இந்தியர்களில் பலர் இக்கதிக்கு ஆளாயினர்.

"தங்குவதற்கு இங்கு இடமில்லை" என்றார்.

"வேறு தங்குவதற்கு ஏதாவது இடங்காட்டக் கூடுமா?" என்றேன்.

தம்மால் முடியாதென்று மறுத்துவிட்டார். எங்கள் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்த அமெரிக்க இளைஞரொருவர் என்னைத் தனியாக அழைத்துத் தங்குவதற்கு அங்கே இடமிருக்கிறதென்றும், காரியதரிசியைப் பார்க்கும்படியும் கூறினார்.

விரைந்து சென்று காரியதரிசியைப் பார்த்தேன். ரங்கூன், டோக்கியோ இளைஞர் கிறிஸ்தவச் சங்கக் காரிய தரிசிகளின் அறிமுகக் கடிதங்களையும் கொடுத்தேன். நடந்ததை மறந்துவிடுமாறு கூறி, நல்ல அறையொன்றை ஏற்பாடு செய்தார் காரியதரிசி.

லாஸ் ஏஞ்சல்ஸிலும் ஹாலிவுட்டிலுமாகப் பல தினங்கள் கழிந்தன. இரவு நேரங்களில் ஹாலிவுட் 'புல்வார்டு' களுக்குச் சென்றேன். மின்னுகின்ற நட்சத்திரங்கள் ஒன்றும் எனக்குத் தென்படவில்லை. "அங்குள்ள நட்சத்திரங்கள் மின்னுகின்ற பொருள்கள் அல்ல" என்றார் கூட வந்த நண்பர்.

லாஸ் ஏஞ்சல்ஸிலிருந்து நியூயார்க் சுமார் மூவாயிரத்து இருநூறு மைல்; ரயிலில் நான்கு நாள் பிரயாணம். இப்பிரயாணத்தில் கண்ட காட்சிகளை நினைக்கும்பொழுது இப்பொழுதுகூட மகிழ்ச்சி யுண்டாகிறது. அந்தப் பிரயாணத்தின் எதிர்பாரா அனுபவங்களிலே சிகரம் போன்றது ஒரு சம்பவம்.

டெக்ஸாஸ் என்பது அமெரிக்காவிலுள்ள 'ஸ்டேட்டு'களில் ஒன்று. அந்தப் பகுதியில்தான் நிறவேற்றுமை உச்ச நிலையை அடைந்திருந்தது. இந்த 'ஸ்டேட்டின்' வழியாக ரயில் சென்றபொழுது, டல்லாஸ் என்ற நிலயத்தில் பகல் உணவுக்காக முப்பது நிமிஷம் ரயில் தாமதித்தது. ரயில்வே உணவுச்சாலைக்குச் சென்றேன். நீக்ரோக்களுக்கென்று மறைவாக ஒரு தனியிடம் ஒதுக்கியிருந்தனர். வேலைக்காரப் பெண் என்னை நீக்ரோக்களுடன் உட்காரும்படிக் கூறினாள். எனக்கு முன்னே உட்கார்ந்த நீக்ரோக்களுக்கு ஒரு பெண் பரிமாறினாள். என்னை அவள் கவனிக்கவேயில்லை. பத்து நிமிஷமாயிற்று. பதினைந்து நிமிஷமுமாயிற்று. பசியொருபுறம்; அவமானம் ஒருபுறம்; ரயிலுக்கு நேரமாகிவிட்டதே என்ற திகில் மறுபுறம். இவற்றையெல்லாம் தாங்கமாட்டாது உணவுச்சாலை நிர்வாகியிடம் சென்று நான் ஓர் இந்துவென்றும் இம்மாதிரி நடத்தப்பட்டேன் என்றும் கூறினேன்.

அவர் நல்ல மனிதர்; வருத்தப்பட்டார்; மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். தமது அறைக்கு அழைத்துச்சென்று தனியாக உணவு பரிமாறும்படிச் செய்தார். அதுமட்டுமல்ல; ரயில்வே 'கார்டை' அழைத்து நான் சாப்பிட்டு ரயிலேறும்வரை ரயிலை நிறுத்தும்படிக் கூறினார். சில நிமிஷங்களுக்கு முன் நேர்ந்த அவமானத்தையும், இப்பொழுது ஓர் இந்திய மாணவனுக்காக அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஒரு ரயில் நிறுத்தப்படுவதையும் நினைத்தபொழுது எனக்கே ஆச்சரியமுண்டாயிற்று.

நான்காவது நாள் நியூயார்க் நகரத்தையடைந்தேன். ரயில் நிலயத்திலிருந்து வெளியே வருவதற்கே பல நிமிஷங்கள் ஆயின. 'எம்பயர் ஸ்டேட் பில்டிங்ஸ்' எங்கேயிருக்கிறதென்று ஒருவரைக் கேட்டேன். அவர் என்னைப் பார்த்துச் சிரித்தார். அவர் சிரித்ததன் அர்த்தம் எனக்குப்

பின்னர்தான் விளங்கிற்று. அதே வீதியிலிருந்த மிக உயரமான கட்டிடத்தைச் சுட்டிக் காட்டினர். அந்தக் கட்டிடத்திற்கு எதிரேதான் எனது பள்ளிக்கூடம். தலைமை ஆசிரியரைக் கண்டு விஷயங்களைத் தெரிவித்த பின்னர் 'எம்பயர் ஸ்டேட்' கட்டிடத்திற்குச் சென்றேன். அங்கு நின்ற வேலைக்காரன் உச்சிக்குச் செல்ல ஒரு டாலர் தான் கட்டணம் என்று கூறி, அந்தக் கட்டிடத்தைப் பற்றிய சிறு புத்தகமொன்றைக் கொடுத்தான்.

102 மாடிகள், 1,248 அடி உயரம், இருபதாயிரம் ஜனங்கள் வேலை செய்கிறார்கள், கட்டிடத்தின் மதிப்பு பதினைந்து கோடி ரூபாய், மேலே செல்ல முப்பத்திரண்டு 'லிப்டு'கள் என்றெல்லாம் அப்புத்தகத்தில் படித்தேன். உச்சிக்குச் சென்று கீழே நோக்கியபோது எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. ஏனென்றால் தலை சுழன்றது.

மனிதனுடைய சக்தியைப்பற்றி ஆச்சரியப்பட்டுக் கொண்டே பூமிக்குக் கீழ் ஓடும் ரயில் நிலயத்தை நோக்கி நடந்தேன். மணிக்கு அறுபது மைல் வேகமுள்ள அந்த ரயில் பத்து நிமிஷத்தில் 125-வது வீதியை அடைந்தது.

ராக்பெல்லர் என்பது உலகறிந்த பெயர். இவ் வள்ளல் கோடி ரூபாய் செலவில் நியூயார்க் நகரில் 'இண்டர் நாஷனல் ஹவுஸ்' என்ற சர்வதேச மாணவர் விடுதியை அமைத்துள்ளார். அங்குள்ள இந்திய சமூகத்தில் நானும் ஐக்கியமானேன். ஐம்பத்திரண்டு தேசங்களைச் சேர்ந்த முந்நூறு மாணவர்களும் முந்நூறு மாணவிகளும் அங்கு வசித்தனர். அவர்களுடைய தேசீய உடையும், மொழியும் வெவ்வேறு விதமானவை. ஆனால் அவர்கள் அனைவரும் அங்கு ஒரே மாதிரி உடையணிந்திருந்தனர், ஒரே மொழியைப் பேசினர்.

வெளியுலகில் நடைபெறாத சில 'அதிசயங்கள்' அந்த விடுதியிலே நிகழ்ந்தன. ஐப்பானியனும் கொரியாப்

பெண்ணும் கைகோத்துச் செல்வார்கள். ஜெர்மனும் யூதனும் அளவளாவுவார்கள். சீனரும் ஜப்பானியரும் அன்னியோன்னியமா யிருப்பார்கள். ஆங்கிலேயரும் இந்தியரும் இணைபிரியாதிருப்பார்கள். அமெரிக்கரும் நீக்ரோவும் சரியாசனத்தமர்வார்கள். இத்தாலியரும் எதியோப்பியரும் கைகுலுக்கி க்ஷேமம் விசாரிப்பர். ஆனால் அவர்களில் பெரும்பாலோர் சொந்த நாடுகளுக்குச் சென்றவுடன் சிறந்த தேசீயவாதிகளாகிவிடுவார்கள்.

நியூயார்க் வாழ்க்கை கொஞ்சநாள் வரை எனக்குப் பிரமிப்பைக் கொடுத்தது. மனிதர்கள் இயந்திரங்களின் அடிமைகளாகிவிட்டார்கள் போலத் தோன்றியது. வாரமுடிவொன்றில் அமெரிக்கக் குடும்பமொன்றுக்குச் சென்றிருந்தேன். அந்த வீட்டு அம்மையார் வீடு முழுமையும் காட்டினார். அமெரிக்கர் வீடு மிகவும் சுத்தமாக இருந்தது. துணிமணிகளைத் துவைப்பது மின்சாரம்; எச்சில் தட்டுக்களைச் சுத்தம் செய்வது இயந்திரம்; வீடு பெருக்கும் கருவிக்குத் துணை செய்வது மின்சாரம்; சமையல் செய்வதும் மின்சார அடுப்பில்தான்.

வீடுகளில்மட்டுமல்ல, அமெரிக்கர்களின் வாழ்க்கையே மின்சார மயமாகத்தான் இருந்தது. பூட்ஸ் துடைப்பது இயந்திரம்; காசைப் போட்டவுடன் ஜன்னல் வழியே உணவளிப்பது இயந்திரம்; ஜன நெருக்கமுள்ள வீதியைக் கடப்பதற்கு மக்களைத் தூக்கிச் செல்வது இயந்திரம்.

கொஞ்ச நாளில் நியூயார்க் நகர வாழ்க்கை 'புளித்து' விட்டது. ஒரு நார்வீஜியன், ஒரு ஜெர்மன், ஒரு ஹாலந்துக்காரன் ஆகிய மூன்று மாணவர்களுடன் சேர்ந்து அமெரிக்காவில் சுமார் பதினையாயிரம் மைல் மோட்டாரில் பிரயாணம் செய்தேன். ரயில் பிரயாணத்தைவிட மோட்டார் பிரயாணத்தில் எங்களுக்குச் செலவு குறைவு.

மோட்டாரின் நான்கு ஜன்னல்களுக்கும் எங்களுடைய நான்கு தேசீயக் கொடிகளையும், மத்தியில் அமெரிக்கக் கொடியையும் அமைத்து, ஐந்து கொடிகள் அலங்கரிக்க, அமெரிக்க நாட்டின் உன்னத சாலைகளிலே வானொலி சங்கீத மளிக்கும் புதிய மோட்டாரிலே, ஒன்பது வாரங்கள் பிரயாணம் செய்தோம். திறந்த வெளிகளில் கூடாரமடித்து உறங்கினோம். ஒரு சமயத்தில் ஒரே நாளில் 651 மைல் பிரயாணம் செய்தோம்.

பிரபலமான 'கோடக்' தொழிற்சாலை, நயாகரா நீர் வீழ்ச்சி, டிட்ராய்ட் போர்டு மோட்டார்த் தொழிற்சாலை, சிக்காகோ நகரம், போல்டர் அணைக்கட்டு, கிராண்டு கான்யன், அமெரிக்க இந்தியர்களின் வாசஸ்தலம், நியூ மெக்ஸிகோ சுரங்கங்கள், ஹாலிவுட், தேசீயப் பூங்கா முதலிய பலவற்றைப் பார்த்துக்கொண்டே சென்றதால் எங்கள் பிரயாணம் மிக உற்சாகமாக இருந்தது.

அமெரிக்காவின் தலைநகரான வாஷிங்டன் நகரம் தனியான அழகுடையது. ஆறு லட்சம் மக்கள் கொண்ட அந்நகரிலே ஒன்றரை லட்சம் மோட்டார்கள் இருப்பது அதற்குப் பெருமை யல்ல; 'மக்களால், மக்களுக்காக, மக்களுடைய அரசாங்கம்' என்ற கொள்கையை நிலைநாட்டிய ஆபிரகாம் லிங்கனின் ஜீவகளையுள்ள அந்தப் பிரமாண்டமான பளிங்கு உருவச்சிலையும், அதற்கு முன்னே ஆயிரக் கணக்கான யாத்திரிகர் தம்மை மறந்து தலைவணங்கி நிற்கும் உருக்கமான காட்சியுந்தான் வாஷிங்டன் நகருக்குப் பெருமையளித்தன.

# சிவப்பு இந்தியர்

அமெரிக்காவின் பூர்வ குடிகளுக்குச் சிவப்பு இந்தியர் என்று பெயர். இவர்களின் நிறம் சிவப்பல்ல; இவர்கள் இந்தியருமல்லர். ஆனால் பெயர் மட்டும் சிவப்பு இந்தியர்.

கொலம்பஸ் 1492 ஆம் ஆண்டில் இந்தியாவைக் கண்டுபிடிக்க யாத்திரை தொடங்கினர். இந்தியாவைக் காண்பதற்குப் பதிலாக அமெரிக்காவைக் கண்டார். அந் நாட்டுப் பூர்வ குடிகள் அவருக்குத் தொந்தரவு கொடுத்தனர். அவர்களிற் சிலரைக் கொலம்பஸ் கைது செய்து ஸ்பானியர்களின் நியாய ஸ்தலத்தின் முன் நிறுத்துகையில், அவர்களைச் 'சிவப்பு இந்தியர்கள்' என்று குறிப்பிட்டார். அது முதல் அவர்களுக்கு அப்பெயர் வழங்கலாயிற்று. கொலம்பஸ் தான் அமெரிக்காவை முதன் முதலில் கண்டார் என்பது சரித்திர ஆசிரியர்கள் கண்ட முடிவு. ஆனால் தம்முடைய பெயரை அந்நாட்டுக்குச் சூட்டும் பாக்கியம் கொலம்பஸுக்குக் கிடைக்க வில்லை. 1501 ஆம் ஆண்டில் அமெரிகோ வெஸ்புக்கி என்ற இத்தாலியர் தென்னமெரிக்காவிலுள்ள பிரேஸில் என்ற நாட்டைக் கண்டுபிடித்தார். பின்னர் ஐரோப்பா திரும்பியதும் தம்முடைய செயல்களைக் குறித்துப் புத்தகம் வெளியிட்டார். அது முதல் இந் நாட்டுக்கு 'அமெரிக்கா' என்று பெயரிடப்பட்டது. 'சிவப்பு இந்தியர்' 'அமெரிக்க இந்தியர்' ஆனர்கள்.

இவ் இந்தியர்களுடைய ஆதி வரலாறு சரித்திர ஆசிரியர்களின் எண்ணங்களுக்கு எட்டாத ஒரு மர்மமாக இருக்கிறது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வட அமெரிக்காவிலுள்ள அலாஸ்காப் பகுதியும் ஆசியாக்

கண்டமும் ஒரே நிலப்பரப்புடன் இருந்ததென்றும். இவ் இந்தியர் ஆசியாவைச் சேர்ந்தவர்களென்றும், சில ஆராய்ச்சியாளர் தக்க சான்றுகளுடன் கூறுகின்றனர். இவ் இந்தியர் மெக்ஸிகோ இந்தியர்களின் வம்ச பரம்பரை யென்றும், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் இங்கு குடியேறினர்கள் என்றும் வேறு சில ஆராய்ச்சி யாளர் தக்க சான்றுகளுடன் கூறுகின்றனர். நம்புவதானல் இரண்டையும் நம்பத்தான் வேண்டும். இல்லையேல் இரண்டையும் நம்புவதற்கில்லை.

முதலில் இந்நாட்டில் குடியேறிய வெள்ளையர்களுக்கும் அமெரிக்க இந்தியர்களுக்கும் பல பெரும் போர்கள் மூண்டன. இந்தியர்களின் ஆயுதம் வில்லும் அம்புந்தான். வெள்ளையர் ஏராளமான யுத்தக் கருவிகளை ஐரோப்பாவிலிருந்து கொண்டு வந்தனர். இப்போர்களில் சில வெள்ளையர் மாண்டனர். அதிகச் சேதம் அமெரிக்க இந்தியர்களுக்குத்தான். ஆயிரக்கணக்கான அமெரிக்க இந்தியர்களை வெள்ளையர் ஈவிரக்கமின்றிக் கொன்றதாகத் தெரிகிறது. நாட்டைப் பறிகொடுத்த அமெரிக்க இந்தியர்களில் எத்தனை லட்சம் பேர் வெள்ளையர்களால் கொல்லப்பட்டார்களென்பது ஆண்டவனுக்குத்தான் தெரியும். அரசாங்க அறிக்கையின்படி ஐக்கிய அமெரிக்காவில் மட்டும் இருநூற்றைம்பது பிரிவுகளைச் சேர்ந்த ஒன்றரை லட்சம் இந்தியர்கள் வசித்தார்களாம்.

பொதுவாக இவ் இந்தியர்களின் மொழி மிகவும் பிற்போக்கானது. அமெரிக்க இந்தியர் அகராதியில் மிகச் சில வார்த்தைகளே காணப்படும். பல பிரிவினர் பலவிதமாகப் பேசிய போதிலும் அவர்களுடைய மொழி ஒன்றுதான். நாம் பல வார்த்தைகளால் கூறும் ஒன்றை அவர்கள் ஒரே வார்த்தையில் கூறுவார்கள். உதாரணமாக 'ஏரிக்குச் சென்று மீன் பிடிக்க' என்பதை அவர்களால்

ஒரே வார்த்தையில் கூறமுடியும். அமெரிக்க இந்தியர்களில் சிலர் ஸ்பானிய மொழி பேசுவர். இளைஞர்கள், ஆண்களும் பெண்களும், ஆங்கிலம் நன்கு பேசுவார்கள்.

இவ்விந்தியர்கள் நகரங்களில் வசிக்க அனுமதிக்கப்படுவதில்லை. தெற்கிலும் வடக்கிலும் தனித்த இடங்களில் இவர்கள் வசித்தார்கள். காலின் ராஸ் என்ற பிரபல ஜெர்மானிய எழுத்தாளர் கூறுவது போல, நாட்டின் வளப்பமில்லாத பகுதி யொன்றிருக்குமானால் அது இந்தியர் வசிக்குமிடம் என்று கொள்ளலாம்.

1540 ஆம் ஆண்டிற்கு முன்னே இந்தியர்கள் நிலை எவ்வாறிருந்தது என்பது குறித்துப் பல ஆராய்ச்சிகள் நடைபெற்றன. நியூ மெக்ஸிகோவில் புயே என்றோர் இடமிருக்கிறது. ஆயிரம் வருடங்களுக்கு முன்னே இது ஒரு சிறந்த நகரமாகத் திகழ்ந்திருக்கவேண்டும். ஆனால் நான் கண்டபோது பாழடைந்த சின்னங்கள்தாம் இங்கே காணப்பெற்றன. வட்டமாகவோ அல்லது சதுரமாகவோ நான்கு அல்லது ஐந்து மாடிகளையுடைய கட்டிடம் இருந்திருக்கவேண்டுமென்றும், பல நூற்றுக் கணக்கான அறைகள் இருந்திருக்கக் கூடுமென்றும் பாழடைந்த சின்னங்களால் தெரிந்தது. குறைந்தது ஆயிரம் பேராவது இதில் வசித்திருக்கக் கூடும். மலையுச்சியில் அழகிய ஆற்றங்கரையோரத்திலே இந்நகர் அமைக்கப் பெற்றிருந்தது. இந்நகர் ஒரே வீடுதான். ஒரே சமயத்தில் ஒருவர் உள்ளே நுழையக் கூடியவாறு கதவு அமைக்கப்பெற்றிருந்தது. அறைகளுக்குக் கதவுகள் கிடையா. இரண்டாவது அல்லது மூன்றுவது மாடியிலுள்ள ஓர் அறைக்கு வந்து, பின்னர் அறையின் உச்சியிலுள்ள பெருத்த துவாரத்தின் வழியாக மற்ற மாடிகளுக்குச் சென்றிருக்கக் கூடுமென்று தெரிகிறது. இக்கட்டிடத்தில் பல இரகசிய இடங்கள் இருந்தன. இதற்குக் 'கிவாஸ்' என்று

பெயர். கூட்டங்கள் நடைபெறுவது இங்கேதான். பல அறைகளிலுமுள்ளவர்கள் சில சுரங்கங்களின் வழியாக இங்கு வந்து சேர்வார்கள். சுற்றித் திரியும் பல விரோதிகளிடமிருந்து தப்ப வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் தான் காற்றும் வெளிச்சமும் நுழையாத இக்கட்டிடங்கள் அமைக்கப் பெற்றிருத்தல் வேண்டும். இவற்றுக்கருகே உள்ள மலைகளில் பல குகைகள் உள்ளன. இக்குகைகளில் இந்தியர்கள் வசித்தார்கள் என்பதற்குப் பல சின்னங்கள் காணப் பெற்றன. ஏணியின் உதவியால் இவர்கள் தங்கள் குகை வீடுகளுக்குச் சென்றார்கள் என்றும், ஆபத்துக் காலங்களில் இவர்கள் பொதுக் கட்டித்திற்கு வந்தார்களென்றும் ஊகிக்கப்படுகிறது.

டவுஸ் என்ற இடத்திலுள்ள இந்தியர் புயோப்ளோ என்ற அழகிய கட்டிடங்களில் வசித்தார்கள். வடக்குப் புயோப்ளோ தெற்குப் புயோப்ளோ என்ற நான்கு மாடிக் கட்டிடங்கள் இரண்டில் நூற்றுக் கணக்கான குடும்பங்கள் வசித்தன. இரண்டு புயோப்ளோக்களையும் பிரிப்பது மத்தியில் ஓடும் சிறிய ஆறு ஒன்றுதான். இந்த இரண்டு வீட்டுக்காரர்களுக்கும் பல நூற்றுண்டுகளாகச் சில்லரைச் சண்டைகள் உண்டு. ஆனால் இந்தச் சச்சரவுகள் பொது விஷயங்களில் குறுக்கிடுவதில்லை. இங்கு நாள் தோறும் நூற்றுக்கணக்கான யாத்திரிகர் வருவார்கள். முதலில் இந்திய கவர்னரின் பிரதிநிதி இவர்களை வரவேற்கிருர். தனிப்பட்ட நபர்களைப் படம்பிடிக்க அனுமதிக்கப் படுவதில்லை. கட்டிடங்களைப் படம்பிடிக்க, கவர்னருக்கு ஒரு டாலர் கட்டணம் செலுத்த வேண்டும். இப்பணம் அவர்களின் பொது நிதியில் சேரும். தனிப்பட்டவர்களைப் படம் பிடிக்கப் பத்துக் காசு முதல் ஐம்பது காசுவரை பணம் கொடுக்கவேண்டும். நடனங்கள் நடைபெறும்போது படம் பிடிக்க யாரும் அனுமதிக்கப்படுவதில்லை.

லூகோனு என்பது இந்தியர் வசிக்கும் மற்ருெரு இடம். இது ஒரு புதிய நகரம். 'ஜானி' என்ற இந்தியர்கள் இங்கு வசித்தனர். இவர்கள் ஏனைய சில இந்தியர்களை விடச் சிறிது முற்போக்குடையவர்கள். வடக்கேயுள்ள இந்தியர் சிறந்த நிலைமையிலிருந்தனர். பல பள்ளிக்கூடங்கள் அவர்களுக்கெனத் தனியாக இருந்தன. நூற்றுக் கணக்கான இந்தியர் தனி மோட்டார் வைத்திருந்தனர்.

இந்தியர்களுக்குச் சொந்தமாகச் சில நிலங்கள்தான் அப்பொழுதிருந்தன. ஏனையவெல்லாம் அரசாங்கத்தாராலும் வெள்ளையர்களாலும் பங்கிட்டுக் கொள்ளப் பட்டன. அமெரிக்க இந்தியர் எவ்வித வரியும் செலுத்துவதில்லை. மோட்டார் வைத்திருந்தார்கள். அவற்றிற்கு லைசென்ஸ் தேவையில்லை. அவர்கள் மோட்டார் ஓட்டுவதற்கும் லைசென்ஸ் அவசியமில்லை. இத்தனை மைல் வேகந்தான் போகவேண்டும் என்ற நிபந்தனையும் அவர்களுக்குக் கிடையாது. ஏதாவது தவருக நடந்தால் அவர்களுக்குத் தண்டனையுமில்லை. அமெரிக்க சரித்திரம் ஆரம்பிப்பதற்கு முன்னமேயே இவ் இந்தியர் சிறிதளவு அரசியல் அறிவு பெற்றிருந்ததாகத் தெரிகிறது. வருடந்தோறும் நடைபெற்ற விருந்தில் தங்கள் தலைவனைத் தேர்ந்தெடுப்பார்கள். இத் தலைவர்களுக்குக் காரியாலயமோ அன்றிச் சம்பளமோ கிடையாது. அறிவு, அனுபவம், வயது முதலிய தகுதிகளைக் கொண்டே தலைவனைத் தேர்ந்தெடுத்தனர். ஓரளவு அவனுக்குக் கட்டுப்பட்டும் நடந்தனர். தற்பொழுது இந்திய கவர்னர்களுக்குக் காரியாலயம், காரியதரிசி, மோட்டார் முதலிய அனைத்தும் உண்டு. கவர்னர், பொது மக்களால் தேர்ந்தெடுக்கப் பெறும் நிர்வாக சபைக்குப் பொறுப்புள்ளவராவார்.

பண்டைக் காலத்தில் இந்தியர், நாட்டின் பல பகுதிகளிலும் பரவியிருந்தனர். அப்போது போக்குவரத்து

வசதிகள் மிகக் குறைவு; ஆதலினாலே, ஏராளமான குதிரைகளை உபயோகித்தனர். சாலை வசதிகள் கிடையாது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் மட்டும் சுமார் முப்பது லட்சம் சதுர மைல் கொண்டது. எனவே இந்தியர் ஒருவருக்கொருவர் அதிகத் தொடர்புடையவர்களாக இருந்திருப்பார்களென்று எண்ணுவதற்கில்லை.

அமெரிக்க இந்தியர்களின் வழக்கங்களில் சில விசித்திரமானவை. பல பகுதியினருள்ளும் வழக்கங்கள் மாறுபட்டிருந்தன. நினைத்தபொழுது விவாகம் செய்து கொள்வார்கள். பிள்ளைகள் பிறந்தவுடன் மனைவியை விரும்பாவிட்டால், மனைவி மக்கள் எல்லோரையும் விரட்டிவிட்டுப் புதிதாக மணம் செய்து கொள்வார்கள். பழைய மனைவி மக்களைப் பற்றிச் சிந்திக்கமாட்டார்கள். அவர்களுடைய சாதாரண வாழ்க்கையில் சடங்குகள் நிரம்பி இருந்தன.

ஒருவர் இறந்தால், பிணத்தை இரண்டு அல்லது மூன்று நாள் வீட்டில் வைத்திருந்து, பிணம்தான் என்று நிச்சயமாகத் தெரிந்ததும், வீட்டுக்கு முன்னாலோ அல்லது பின்னாலோ புதைப்பார்கள். புதை குழியில் பிணத்தை மூடியபின்னர், பிணத்தின் உருவம் அடங்கும் அளவில் சிறிய கட்டிடம் ஒன்றை எழுப்புவார்கள். இறந்த மனிதர் உபயோகித்த பழைய ஆடைகளை இக்கட்டிடத்தில் வைப்பார்கள். ஆறுவது நாள் இங்கு சென்று இவ்வாடைகளைக் கொளுத்தி இறந்தவருக்குச் சில உணவுகள் படைத்து அவரைக் கௌரவிப்பதற்காக உற்றார் உறவினர்களுடன் விருந்துண்பர். இறந்தவரின் ஆன்மா இக்கட்டிடத்தில் சாந்தி பெறும் என்பது இவர்களது நம்பிக்கை.

இவ் இந்தியர்கள் திடசரீரம் உடையவர்கள்; பொதுவாக அழகு வாய்ந்தவர்கள். ஆண்களும் பெண்களும் சமமாக வாழ்க்கை நடத்துவார்கள். நவஜோ பகுதியிலுள்ள இந்தியர் செல்வம் படைத்தவர்கள். இங்குள்ள

இந்தியப் பெண்கள் அழகிய ஆடைகள் அணிவதிலும் விலையுயர்ந்த ஆபரணங்கள் அணிவதிலும் விருப்பமுள்ளவர்கள். தங்கள் செல்வ நிலையை ஆபரணங்களின் மூலமாகவே இப்பெண்கள் காட்டிக்கொள்வர். இவர்களுடைய ஆபரணங்கள் வெள்ளி, செம்பு முதலிய உலோகங்களால் ஆனவை. முத்து, பவளம் முதலியனவும் அதிகம்.

நவஜோ இந்தியர் கைத்தொழிலில் பேர்பெற்றவர்கள். பலவிதமான கம்பளங்கள் நெய்வர். வெள்ளியினால் பல பொருள்கள் தயாரிப்பர். 1850 ஆம் ஆண்டு மெக்ஸிகோ வாசிகள் இத்தொழிலை இவர்களுக்குக் கற்பித்தனர். இவர்கள் உபயோகிக்கும் கருவிகள் மிகவும் சாதாரணமானவை. ஆனாலும் இவர்கள் திறமை பெரிதும் வியக்கத்தக்கது. அவசரமின்றி மெதுவாக இவர்கள் வேலை செய்வார்கள். அவ்வேலையின் தன்மையையும் இவர்கள் நன்குணர்வர். புயோப்ளோ இந்தியர், பானை சட்டிகள் செய்வதில் புகழ் பெற்றவர்கள்.

இந்தியர்களில் பெரும்பாலோர் கத்தோலிக்கக் கிறிஸ்வர்கள். இவர்கள் வசிக்குமிடங்களிலே இவர்களுக்கெனத் தேவாலயங்கள் அமைக்கப் பெற்றிருந்தன. ஆனால் இவர்கள் பெயரளவில்தான் கிறிஸ்தவர்களாயிருந்தனர். தங்களுடைய பழைய கடவுள்களைப் பூசிப்பதற்கு இவர்கள் மறப்பதில்லை. மூடநம்பிக்கைகளும் இவர்களை விட்டபாடில்லை. அன்னியர் யாரும் நுழையாத அந்தரங்க இடங்களிலே இவர்கள் கூடித் தங்கள் தேவதைகளைப் பூசித்து விருந்துண்டு, நடனமாடிக் களிப்பார்கள். இவர்களுடைய நடனங்கள் மிகவும் பேர்பெற்றவை. மான், எருமை. கரடி போன்ற மிருகங்களின் தலைகளை மாட்டிக்கொண்டு இவர்கள் நடனமாடுவது வேடிக்கையாகவும் கவர்ச்சியுள்ளதாகவும் இருக்கும். இளைஞர்கள் சந்தோஷமாக ஓரிடத்தில் கூடிவிட்டால், மணிக்கணக்காக, சில சமயங்களில் இரவு

முழுதும், ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் பொழுது போக்குவார்கள்.

பொதுவாக, இவர்கள் நல்ல சுபாவமுடையவர்கள். மற்றவர்களோடு அதிகமாகக் கலந்து பழகமாட்டார்கள். நகைச்சுவை குறைவு. சமூகக் கட்டுப்பாட்டை மீறமாட்டார்கள். இவர்களுக்குள் நேரும் சண்டை சச்சரவுகளை நிர்வாக சபையார் மூலம் தீர்த்துக் கொள்வார்கள்.

அமெரிக்கர், இந்தியர்களை முன்னேறச் செய்வதற்குக் கூடியவரை முயன்றனர். வடக்குப் பகுதியில் சில இந்தியர், நகரங்களில் வேலை பார்த்தனர். இந்தியர் சுதந்திரமுடையவர்கள்தாம். என்றாலும், நாளடைவில் மற்றத் தடைகளினின்று விடுதலை பெற்று அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பிரஜைகளாகிப் பூரண உரிமை பெறும் நாள் விரைவில் தோன்றக்கூடும்.

# அயர்லாந்தில் மூன்று நாள்

அயர்லாந்து! சுதந்தர அயர்லாந்து! இந்நாட்டைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் பல ஆண்டுகளாக என்னுள்ளத்தில் குடிகொண்டிருந்தது. 1937 ஆம் ஆண்டு அக்டோபர் மாதக் குளிரில், காலை மூன்று மணிக்கு, டப்ளின் துறைமுகத்தைச் சேர்வேனென்று நான் கருத வில்லை. முன்பின் தெரியாத ஊரில் காலை மூன்று மணிக்கு இறங்குவது நல்ல அனுபவமல்லவா? ஆனால் சுங்க அதிகாரிகள் எத்தகைய தொந்தரவும் கொடுக்க வில்லை. ஐந்து நிமிஷத்தில் சோதனை முடிந்தது.

புதிதாக ஒரு நகருக்குச் சென்றதும் அதனைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்று ஆர்வமுண்டாவது இயற்கை. நகரக் காட்சிகளைக் கண்டுகளிக்கப் பகலிலும் இரவிலும் நடந்து செல்வதுதான் சிறந்த முறை. இந்த முறையை லண்டன், நியூயார்க் போன்ற பெரிய நகரங்களில் கையாளு வது மிகவும் சிரமமான காரியம். ஆனால் அயர்லாந்தின் தலைநகரான டப்ளின் சுமார் ஐந்து லட்சம் ஜனங்களைக் கொண்ட அழகிய சிறு நகரம். அயர்லாந்தின் மொத்த ஜனத்தொகை, அப்போது, சுமார் முப்பது லட்சம். இதில் வட அயர்லாந்தைச் சேர்ந்த சிறு பகுதி பிரிட்டிஷ் நிர்வாகத் தில் உள்ளது. மற்றப் பகுதிகள் சுதந்திர ஐரிஷ் மாகா ணங்கள் (ஐரிஷ் ப்ரீ ஸ்டேட்ஸ்) என்று சொல்லப்படு கின்றன. இதன் தலைநகரம்தான் சரித்திரப் பெருமை வாய்ந்த டப்ளின் நகரம்.

டப்ளின் நகருக்கு நடுவே செல்லும் ஆறு, போக்கு வரத்து வசதிக்கு மிகவும் சௌகரியமானது. ஆற்றின்

குறுக்கேயுள்ள பாலங்கள் ஒரே மாதிரியாக அமைக்கப் பெற்றுள்ளன. இருகரைகளிலுமுள்ள வீடுகளின் தோற் றம் ஆற்றுத் தண்ணீரில் தலைகீழாகத்தோன்றுவது மிகவும் அழகிய காட்சி. நகரின் பிரதான வீதியில் சித்திர வேலைப் பாடமைந்த பல சிலைகளும், வெற்றிச் சின்னங்களும் அமைக்கப் பெற்றுள்ளன. அயர்லாந்து பாங்கி உள்ள கட்டிடம் பழமையும் வனப்பும் வாய்ந்த ஒன்று. அது; முன்னர் பார்லிமெண்டுக் கட்டிடமாக இருந்தது. டப்ளின் சர்வகலாசாலை, டிரினிடி கலாசாலை முதலியவை ஊருக்கு நடுவே யுள்ளன. அங்கு அப்பொழுது சுமார் பத்து இந்திய மாணவர் பயிற்சி பெற்று வந்தார்கள்; பெரும் பாலோர் மருத்துவத் துறையில்.

நகரைச் சேர்ந்தும், நகருக்கு அருகேயுமுள்ள சிறு கிராமங்களில் அழகும் அமைதியும் குடிகொண்டிருந்தன. பெரும்பாலான மக்கள் அங்கிருந்து வேலை பார்க்க நகருக்குச் சென்றனர்; மாலை நேரத்தில் வீடு திரும்பினர். மிகவும் நாகரிக வசதி நிறைந்த பஸ்கள் அங்கு ஏராளம். ஆனால் கட்டணம் சிறிது அதிகம். பெரும்பாலோர் டிராம் வண்டி களையே உபயோகித்தனர். ஆனால் டிராம் வண்டி செல்லாத இடங்களுக்கு அந்த பஸ்களைத் தவிர வேறு வகையில்லை.

பீனிக்ஸ் பூங்கா என்பது அயர்லாந்தில் மட்டுமல்ல, ஐரோப்பாவிலேயே மிகவும் பெரிய பூங்கா. அது டப்ளின் நகருக்கு அணித்தே யுள்ளது. ஐரிஷ் மக்களின் நேர்மையை விளக்குவதே போன்று அந்தப் பூங்காவின் மத்திய சாலை எவ்வித வளைவுகளுமின்றிப் பல மைல் தூரம் நேராக அமைந்திருந்தது. தனிமையின் இனிமையை விரும்பும் பலர் செடிகள் மறைவிலே நாற்காலிகளில் படுத் துக்கொண்டு பத்திரிகை படிப்பார்கள். புன்முறுவல் தவழும் ஐரிஷ் குழந்தைகள் விளையாடுவதற்குச் சில

பகுதிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. மருண்ட பார்வையுடைய மான்கள் பல அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருக்கும். அந்தப் பூங்காவின் ஒருகோடியில் மிருகக்காட்சிசாலை. யானைகளைக் கண்டால் சாதாரண ஐரிஷ்காரர் எவ்வளவு ஆச்சரியப்படு கின்றனர்! அவர்களுக்கு யானை ஒரு விநோதப் பிராணி!

கூட்டமும் இரைச்சலும் சேர்ந்த நகருக்கு மத்தியில் சென்றால், முதலில் பத்திரிகை விற்கும் பையன்களிட மிருந்து தப்புவது மிகவும் கடினம். தொந்தரவு கொடுக்க மாட்டார்கள்; ஆனால் ஒவ்வொரு பையனும் உங்களுக்குத் தன்னுடைய பத்திரிகையை விற்க முயலுவான். டப்ளின் நகரில் மட்டும் சுமார் பத்துத் தினசரிப்பத்திரிகைகள் வெளி வந்தன. அவற்றின் விலை ஒரு பென்னி. சில பத்திரிகைகள் மட்டும் இரண்டு பென்ஸ். அவற்றில் சில பத்திரிகைகள் மிகச் செல்வாக்குள்ளவை. 'டெய்லி வொர்க்கர்' போன்ற பிரிட்டிஷ் தினசரிப் பத்திரிகைகளும் அங்கு விற்கப் பட்டன. ஆனால் ஐரிஷ் அரசாங்கம் பிரிட்டிஷ் பத்திரிகை களுக்கு அதிகமான சுங்கவரி விதித்தது. ஐரிஷ் பத்திரிகை கள் சிறந்த முறையில் நடத்தப் பெற்றன. விஷயங்களை விரைவில் வெளியிடுவதில் அவை அதிக கவனம் செலுத்தின. ஐரிஷ் பத்திரிகைக்கு அதன் முக்கிய வருமானங்களில் ஒரு பகுதி, பத்திரிகையில் வெளியாகும் படங்களின் பிரதிகளை விற்பனை செய்வதால் கிடைத்தது.

சில நல்ல சிற்றுண்டிச்சாலைகள் டப்ளின் நகரில் உண்டு. ஆனால் பெரும்பாலானவை நடுத்தரமானவை தான். உணவு விடுதிகள் பல. ஒவ்வொரு திரைப்படக் காட்சிசாலையும் தன் சொந்த உணவு விடுதிகளை ஏற்படுத்தி யிருந்தது. அப்பொழுது அயர்லாந்தில் உணவுப் பொருள் களின் விலை மிக அதிகம். பகல் சாப்பாடு இரண்டு ஷில்லிங். வேலைக்காரருக்கு இனாம் மூன்று பென்ஸ். இரண்டும் சேர்ந்து ஏறக்குறைய ஒன்றே முக்கால் ரூபாய்.

அது ஒரு நடுத்தரமான உணவு விடுதியில்! பொதுவாக அந்த உணவு விடுதியில் சுகாதார வசதி போதாது. ஐரிஷ் வேலைக்காரப் பெண்கள் சுறுசுறுப்புள்ளவர்கள்; எப் பொழுதும் நகைமுகத்துடன் தோன்றுவர்; இல்லை யென்று கூறுவதையும் இனிமையாகக் கூறுவர்.

ஐரிஷ் மக்கள் அதிக நகைச்சுவை யுடையவர்கள். துன்பமடைய நேர்ந்தாலும், அதிலும் நகைச்சுவை காண் பார்கள். அறிவுக்கும் விருந்தளிக்கின்ற நகைச்சுவை அது. அத்தகைய நகைச்சுவை கொண்ட நாடகமொன் றைப் பார்ப்பதற்காக 'ஆபே' நாடகசாலைக்குச் சென்றேன். அது உலகப்பிரசித்தி பெற்றது. மிகச் சிறந்த நடிகர்களை அயர்லாந்தில் தோற்றுவித்தது அந்த நாடகசாலை தான். அதனுடைய சிறிய கட்டிடத்தைக் கண்டதும் வியப்புற் றேன். இரவு 8–15-க்கு நாடகம் ஆரம்பம் என்று விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. இரவு 7-40 வரை கதவு திறக்கப்பெறவில்லை. எத்தகைய வெளிச்சமு மில்லை. 7–45 மணிக்குக் கதவைத் திறந்தார்கள். இரண்டே வேலைக்காரர்கள்தான். குறிப்பிட்டபடி 8-15-க்கு நாடகம் தொடங்கியது. தியேட்டரில் 'சோடா' 'சாக்லெட்', மணிலாக்கொட்டை முதலியவற்றை விற்பனைசெய்வோர் இல்லாதது கண்டு பெரிதும் சந்தோஷ மடைந்தேன். ஆசனங்கள் மிகவும் சிறியனவாகவும் வசதி யில்லாதனவாகவும் இருந்தன. நாடகத்தைப் பார்ப்பதில் கவனம் சென்றமையால், ஆசனங்களைக் குறித்து நான் கவலை கொள்ளவில்லை. நாடகத்தின் பெயர் 'பாயிட்ஸ் ஷாப்' என்பது. அதாவது ஒரு சிறிய வியாபார நிலையத் தில் சிலர் எவ்வாறு வீண் பேச்சுப் பேசுகிறார்கள் என்ப தையும், அனுபவமில்லாத ஓர் இளைஞன் புத்தகப் படிப்பு ஒன்றின் துணை கொண்டு ஆரம்பித்த வியாபார நிலையத் தால் எவ்வாறு வீழ்ச்சியுற்றானென்பதையும், இன்னும்

சில நிகழ்ச்சிகளையும் நன்கு விளக்குவது. நான்கு அங்கங்களைக் கொண்ட இச்சிறு நாடகத்தில் ஐரிஷ் மக்களுக்கு இயற்கையான நகைச்சுவை ததும்பியிருந்தது என்று கூற வேண்டியதில்லை. ஐரிஷ் மக்களுக்குத் திரைப்படப் 'பித்து' இருந்தபோதிலும் நாடகக் கலையை அவர்கள் பெரிதும் ரசித்தனர். ஐரிஷ் நாடகக் கலையைக் குறித்து ஒவ்வொரு ஐரிஷ்காரனும் பெருமையடைந்தான். அந்தப் பழமையான நாடகசாலைக்கு அரசாங்கத்தார் ஆண்டு தோறும் பொருளுதவி செய்தனர்.

அழகிய, வசதியான திரைப்படக் காட்சிசாலைகள் பல டப்ளின் நகரில் உண்டு. அந்நகரில் முதன் முதலாகக் கட்டப்பெற்ற திரைப்படக்காட்சிசாலைக்குச் சென்றேன். ஒரு ஜன்னல்கூட இல்லாத காட்சிசாலை அது. அந்த லட்சணத்தில், ஜனங்கள் 'சிகரெட்டு' சுருட்டு முதலியன உபயோகிக்கவும் அனுமதிக்கப்பட்டனர். புதிய காட்சி சாலைகளில் ஒரு படமும், செய்தியும் காட்டியதோடு, நாட்டியமும் நடத்தினர்கள். பிற்பகல் இரண்டு மணி முதல் இரவு 11 மணிவரை படம் காண்பித்தனர். பெரும்பாலும் அமெரிக்கப் படங்கள்தாம். சில பிரிட்டிஷ் படங்களும் காண்பிக்கப்பட்டன. 'ஐரிஷ் மூவிடோன் நியூஸ்' என்ற செய்திப் படமும் காண்பிக்கப்பட்டது. இது அயர்லாந்தில் தயாரிக்கப்படுவதல்ல; ஐரிஷ்காரர்களால் தயாரிக்கப்படுவதுமல்ல. அமெரிக்க மூவிடோன் கம்பெனியின் தொடர்பு பெற்றுள்ள பிரிட்டிஷ் மூவிடோன் கம்பெனிப் படங்களின் மறுபெயரே ஐரிஷ் மூவிடோன் என்பது!

அயர்லாந்து சுதேசக் கைத்தொழில்களை விருத்திசெய்ய முயன்றது. 'ஐரிஷ் சாமான்களையே வாங்குங்கள்' என்ற குரல் எங்கும் கேட்டது. சில வியாபார நிலையங்கள் ஐரிஷ் சாமான்களை மட்டுமே விற்பனை செய்தன. சுதேசச் சாமான்களின் விலை அதிகமாயிருந்தபோதிலும் அவற்றையே உபயோகிக்க விரும்பினர் ஐரிஷ்காரர் பலர்.

கல்வித் துறையில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியது. நாட்டுப் பற்றை வளர்க்கும் வகையில் கல்விமுறை அமைக்கப்பட்டிருந்தது. கல்வி நிலையக் கட்டிடங்கள் மிக்க நாகரிக முறையில், சுகாதார வசதியோடு கட்டப்பெற்றிருந்தன. கட்டாயக் கல்விமுறை அமுலிலிருந்தது. ஐரிஷ் மக்கள் மிகவும் சுதந்திர உணர்ச்சியுடையவர்கள். அவர்களுக்குள் ஆயிரம் பிளவுகளிருக்கலாம்; ஆனால் அவர்களின் லட்சியம் ஒன்றே. அதாவது அந்நியரிடமிருந்து நாடு விடுதலை பெறவேண்டும். சில நூற்றாண்டுகளிலே, அவ்விடுதலைப் போர் அவ்வப்போது நிகழ்ந்தது. ஆனால், 1916 இல் அயர்லாந்து அதிகக் கஷ்ட நஷ்டங்களையடைய நேர்ந்தது. இளங் காளைகளான ஐரிஷ் வாலிபர்கள், பிரிட்டிஷாரின் துப்பாக்கிக் குண்டுக்கு இரையானார்கள். பிரிட்டிஷாரால் யார் கைதிகளாக்கப் பெற்றுக் கொடுமையாக நடத்தப்பட்டார்களோ, அவர்களே நான் அங்கு சென்றிருந்தபொழுது அயர்லாந்தை ஆண்டார்கள்.

அயர்லாந்தின் தலைவர் டி. வாலராவைப் பற்றி இந்தியர் நன்கறிவர். அவர் மூன்று முறை தலைவர் பதவி வகித்தவர். அவருடைய வாழ்க்கை வெகு ரசமானது; பல சம்பவங்கள் நிறைந்தது. அயர்லாந்தின் நன்மை யொன்றே அவருடைய கனவு; அவருடைய லட்சியம். அதற்காகத் தியாகம் செய்தவர் அவர். அதிகாரத்தில் இருந்தபோதிலும் அவர் சாதாரண மனிதராகவே நடந்து கொள்வார். காட்சிக்கு மிக்க எளிமையானவர். கத்தோலிக்கப் பாதிரிகளின் செல்வாக்கு நிறைந்த அயர்லாந்திலே, பிளவுகளும் சச்சரவுகளும் நிறைந்த அயர்லாந்திலே, அவர் பெரும்பாலோரின் நம்பிக்கையைப் பெற்று ஆட்சி செலுத்தியவர். இந்தியாவிடத்திலும், காந்தியடிகளிடத்திலும் அவருக்கு மாறாத அன்புண்டு. காலஞ்சென்ற வி. ஜே. படேலும், சுபாஷ் சந்திரபோஸும் அவருடைய விருந்தினர்களாகத் தங்கியிருந்தார்கள்.

அயர்லாந்தில் அதிகச் செல்வாக்குள்ளவர் டி. வாலரா தான் என்பதில் ஐயமில்லை. அவருடைய தியாகமும் நேர்மையும், சுதந்திர உணர்ச்சியும் அயர்லாந்தைச் சிறந்த நாடாகச் செய்யுமென்று பல ஐரிஷ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அயர்லாந்தைக் குடியரசு நாடாகச் செய்ய வேண்டுமென்பது அவருடைய கொள்கை. சுதந்திர நாடாக இருப்பதே போதுமானது என்பது எதிர்க்கட்சியார் கொள்கை. ஐரிஷ் பார்லிமெண்டுக்கு 'டேய்ல்' என்று பெயர். அதன் மொத்த அங்கத்தினர் 138 பேர்.

ஐரிஷ் மொழி, பள்ளிக்கூடங்களில் கட்டாய பாடமாக ஆக்கப்பட்டிருந்தது. பெரியவர்களுக்கு ஐரிஷ் மொழி தெரியாது. ஆனால் புதிய தலைமுறையினர் ஐரிஷ் மொழி பேசுவர். பொதுவாக நாடகம், பத்திரிகை, சம்பாஷணை எல்லாம் ஆங்கிலத்தில்தான். சாலைகள், கட்டிடங்கள் முதலியவற்றின் பெயர்கள் ஐரிஷ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் எழுதப் பெற்றுள்ளன.

ஐரிஷ் நாணயமும் பிரிட்டிஷ் நாணயமும் ஒரே மதிப் புள்ளவைதான்; ஆனால், இரண்டுக்கும் தோற்றத்தில் வித்தியாசமுண்டு. இரண்டு விதமான நாணயங்களும் இங்கு உபயோகத்திலிருந்தன.

டப்ளின் நகரத்தில் மூன்றே மூன்று நாள் தங்கிவிட்டு அயர்லாந்தைப் பற்றி நான் என்ன எழுதக் கூடும்? சுதந்திர அயர்லாந்து வாழ்க!

# உலகில் அழகிய பாரிஸ்

உலகத்திலுள்ள மிக அழகான நகரம் பாரிஸ். உலக அற்புதங்களில் ஒன்ருன ஈபல் (Effel) கோபுரத்தை யுடைய நகரம் பாரிஸ். சகல கலைகளிலும் சிறப்புற்று விளங்கும் நகரம் பாரிஸ். நிற வேற்றுமையே யில்லாத நாகரிகமான நகரம் பாரிஸ். அந்நிய நாட்டு யாத்திரிகர் களின் மெக்காவாக விளங்கும் நகரம் பாரிஸ். எத்தனை முறை சென்ருலும் தெவிட்டாத நகரம் பாரிஸ். மேனுட்டுப் பெண்களின் உடையிலே தினந்தோறும் புதிய புதிய பாணிகளை உண்டாக்கும் நகரம் பாரிஸ். கேளிக்கை களுக்கும் களியாட்டங்களுக்கும் உலகப் பிரசித்தி பெற்ற நகரம் பாரிஸ்.

1939 ஆம் ஆண்டு ஜூலை மாதத்து இரவில், பத்தரை மணிக்கு, ரயில் பாரிஸ் நகரத்தை யடைந்தது. அமெரிக் காவில் என்னுடன் தங்கியிருந்த ஒரு கிரேக்க மாணவர் என்னை வரவேற்பதற்காக ரயில் நிலையத்துக்கு வந்திருந் தார். சாமான்களை எடுத்துக் கொண்டு, மாணவர்கள் வசிக்கும் 'லட்டீன் குவார்ட்டர்' என்ற பகுதியிலுள்ள ஓர் உணவு விடுதிக்குச் சென்ருேம். வாடகை மோட் டாரின் 'மீட்டரை'ப் பார்த்ததும் திகிலடைந்தேன்.

பிரெஞ்சுக்காரரான அந்த மோட்டார் ஓட்டுபவர் அரைகுறையான ஆங்கிலத்தில் "இரவு பதினெரு மணிக்கு மேல் இரட்டிப்புக் கட்டணம்" என்ருர். எவ்வளவு கட்டணம் கொடுக்கிருேமோ அதில் குறைந்தது நூற் றுக்குப் பத்து வீதம் இனமும் கொடுப்பது அந்த நாட்டு வழக்கம். எனவே கட்டணத்தையன்றி வாடகை மோட்

டார் ஓட்டுபவருக்கும் 'இரட்டிப்பு இனும்' கொடுக்கும் படி நேர்ந்தது.

மறுநாள் காலையில் எனது வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினேன். பாரிஸ் நகரத்துப் படத்தை வைத்துக் கொண்டு, எங்கெந்த பஸ் எங்கெந்தப் பக்கம் செல்கிறது என்பதைக் குறித்துக் கொண்டேன். பாரிஸ் நகரத்து பஸ்களில் முதலாவது இரண்டாவது வகுப்புக்கள் உண்டு.

பாரிஸில் பஸ் நிற்கும் இடங்களிலெல்லாம் அங்குள்ள ஓர் இரும்புத் தூணில் இரும்புப் பெட்டி ஒன்று வைத்திருப்பார்கள். வரிசைக் கிரமமாக எண் அச்சிட்ட சீட்டுச் சுருள் அதில் இருக்கும். ஒரு சீட்டைக் கிழித்தால், மறு சீட்டின் ஒரு பகுதி தானே வந்து நிற்கும். ஒவ்வொரு பிரயாணியும் ஒவ்வொரு சீட்டைக் கிழித்துக்கொள்ள வேண்டும். அதற்குப் பணம் ஒன்றும் கிடையாது. ஏனெனில், பஸ் நிற்குமிடத்திற்கு யார் முன்னே வந்தார்கள் என்பதைக் காட்டுவதற்காக அந்தச் சீட்டு ஏற்படுத்தப் பட்டிருந்தது. பஸ்ஸில் இடமிருந்தால் அந்தச் சீட்டைக் காட்டாமலே எல்லோரும் ஏறிக்கொள்ளலாம். ஆனுல் கூட்டம் அதிகமாயிருந்தால், சீட்டு எண் வரிசைப்படி, யார் யார் முன்னுல் வந்தார்களோ அவர்கள்தான் ஏறிக் கொள்ளவேண்டும்.

மிகவும் குறைவான கட்டணமுள்ள போக்குவரத்துச் சாதனம், பூமிக்குக் கீழ் ஓடும் 'மெட்ரோ' என்ற ரயில் தான். அந்த 'மெட்ரோ' ரயில்கள் லண்டன் ரயில்களைப் போல் சுத்தமாக இல்லாவிட்டாலும். நியூயார்க் ரயில்களைப் போல் அதிவேகமாக ஓடாவிட்டாலும், கூடிய வரையில் சௌகரியமாகவே அமைந்திருந்தன. பூமிக்குக் கீழ் ஓடும் ரயில்களுக்குள்ளே இங்கேதான் இரண்டு வகுப்புக்கள் இருந்தன.

பாரிஸில் முதன் முதலாக வயது முதிர்ந்த ஒரு பிரெஞ்சு அம்மையாரைச் சந்தித்தேன். அவ்வம்மையாரின் விருந்ினராகத்தான் காந்திஜி பாரிஸில் தங்கியிருந்தார். அவ்வம்மையாரின் முயற்சியால் ஏற்படுத்தப்பெற்ற 'இந்திய நண்பர்கள் சங்க' விருந்துக்குச் சென்றேன். உணவுக்குப் பேர் பெற்ற பாரிஸ் நகரத்தின் ஒரு மூலையிலே, சிறிய வீட்டின் இரண்டாவது மாடியில், அச் சங்கத்தினர் கூடி மிக எளிய சைவ உணவை அருந்தினர். கூட்டத்தில் சுமார் பதினைந்து பேர்தான் இருந்தனர். அன்றைய பிரசங்கியாரான மொரீன் அம்மையார் எனக்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பெற்றார். அந்த அம்மையாரின் பிரசங்கம் பிரெஞ்சு மொழியில் இருந்ததனால், எனக்கு ஒன்றுமே புரியவில்லை. பிரசங்கம் முடிந்தபிறகு, பலரும் பிரசங்கத்தில் கூறப்பட்ட விஷயங்களைப் பற்றி விவாதித்தனர். 'ஹரிஜன்' பத்திரிகையிலிருந்து சில பகுதிகள் மொழிபெயர்க்கப்பட்டு அங்கத்தினர்களுக்கு வழங்கப் பெற்றன. இந்தியாவின் உண்மை நிலையைப் பத்திரிகைகள் மூலமாகவும் புத்தகங்கள் மூலமாகவும் பரப்புவதே அவர்கள் செய்யும் முக்கியமான தொண்டு.

பாரிஸிலுள்ள பழமையான 'ஸ்டுடியோ'க்களில் 'எக்ளேர் ஸ்டுடியோ'வும் ஒன்று. இந்தியாவிலுள்ள ஒரு பிரெஞ்சு நண்பர் அந்த 'ஸ்டுடியோ'வுக்கு என்னிடம் ஓர் அறிமுகக் கடிதம் கொடுத்தார். அந்த ஸ்டுடியோவிலேயே ஆங்கிலம் பேசுவோர் இரண்டு பேர்தான். அவர்களில் ஒருவருக்கு என்னை உபசரிக்கும் பொறுப்பு அளிக்கப்பட்டது.

பாரிஸிலுள்ள சிறந்த உணவுச்சாலைகள், 'ஸ்டுடியோ'க்கள், திரைப்படக்காட்சிசாலை இவற்றுக்குப் போவதுதான் பெரும்பாலும் எனது தினசரி வேலை. இந்தியாவிலிருந்து திரும்பிய சில பிரெஞ்சுப் பாதிரிகள் இந்தியாவின்

குறைகளை மட்டும் காட்டும் பல சிறிய திரைப்படங்களைத் தயாரித்து வந்து, அதன் மூலம் பிரான்ஸில் இந்தியாவைப் பற்றி இழிவாகப் பிரசாரம் செய்து, தங்கள் வேலைகளுக்குப் பணம் சேர்க்கிறார்களென்று தெரிந்துகொண்டேன். இந்தியாவின் கலை, நாகரிகம், இயற்கை வனப்பு முதலியவற்றைப் பற்றிய படங்களைத் தயார் செய்து வெளிநாடுகளுக்கு அனுப்பினால் தான், இத்தகைய தவறான பிரசாரங்களைத் தடுக்க முடியுமென்று உணர்ந்தேன்.

பாரிஸில் திரைப்படக் காட்சிசாலைகள் மிகவும் நாகரிகமானவை. ஆனால் ஒரே ஒரு தொந்தரவு மட்டும் உண்டு. நாம் அனுமதிச் சீட்டு வாங்கிக்கொண்டு உள்ளே நுழைந்ததும், அங்கே வேலை செய்யும் பெண், நம்முடைய சீட்டை வாங்கிக்கொண்டு, நாம் உட்கார வேண்டிய இடத்தைக் காண்பித்துவிட்டு, நமது சீட்டை நம்மிடம் திருப்பிக் கொடுப்பாள். அப்பொழுது நாம் அவளுக்கு ஏதாவது இனாம் கொடுப்பது அந்த நாட்டு வழக்கம். கொடுக்காதிருந்தால் 'ஸெர்விஸ்' என்று கூறி இனாம் கொடுக்கும்படி நம்மைக் கட்டாயப்படுத்துவாள்.

'ஆபரா ஹவுஸு'க்கு அருகே 'நாயுடு ரெஸ்டாரண்ட்' என்ற உணவுச்சாலை ஒன்றிருந்தது. அதை நடத்தும் நாயுடு ஒரு தமிழர். அவர் ஒரு ஜெர்மானியப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டிருந்தார். அந்த உணவுச்சாலையில் சோறு, கறி, பருப்பு, சப்பாத்தி முதலியவை கிடைக்கும். ஆனால் விலை மட்டும் அதிகம்.

இந்த உணவுச்சாலையில் பல இந்தியர்களைச் சந்தித்தேன். ஒரு நாள் என் அருகில் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒரு முதிய பிரெஞ்சுக்காரர் என்னுடன் அரைகுறையான தமிழில் பேசினார். அவர் புதுச்சேரியில் ஒரு நீதிபதியாக இருந்தவராம்.

பாரிஸ் நகரத்தில் உலகப்பிரசித்தி பெற்ற பல கலாசாலைகள் இருந்தன. உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும்

மாணவ மாணவிகள் அங்கே பயில வருவார்கள். ஒரு நாள் 'இந்திய மாணவர் சங்க' விருந்துக்குச் சென்றேன். அன்று லண்டனிலிருந்து ஸ்ரீ கிருஷ்ணமேனன் வந்திருந்தார். மாணவ மாணவிகளின் எண்ணில்லாத கேள்விகளுக்கு அவர் சாந்தமாகவும் ஆணித்தரமாகவும் பதிலளித்தார்.

பாரிஸ் நகரின் இரவுத் தோற்றம் மிக அழகாயிருக்கும். நீண்ட 'புல்வார்டு' வீதிகள், வீதிகளின் இருமருங்கிலுமுள்ள சிற்றுண்டிச்சாலைகள், விளக்குகளால் அலங்கரிக்கப்பெற்ற வியாபார நிலையங்கள் முதலியன பார்க்க ரமணீயமாயிருக்கும்.

பாரிஸ் நகரத்து இரவு வாழ்க்கை பேர் போனது. அதைக் கொண்டு பிரெஞ்சுக்காரர்களை நாம் மதிப்பிடலாகாது. அது பாரிஸ் நகர வாழ்க்கையின் ஒருபுறம்தான்.

சங்கீதத்துக்கும், சித்திரத்துக்கும், நாட்டியத்துக்கும், இன்னும் பற்பல கலைகளுக்கும் சிறந்த இருப்பிடம் பாரிஸ். சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் ஆகிய உன்னதமான கொள்கைகளுக்காக உலகப் பிரசித்திபெற்ற 'பிரெஞ்சுப் புரட்சியை'த் தோற்றுவித்து, அதில் வெற்றிபெற்ற சுதந்திர வீரர்களான பிரெஞ்சுக்காரர்களின் தலைநகரம் பாரிஸ். உலகத்திலுள்ள பெரிய வியாபார நகரங்களில் ஒன்று பாரிஸ்.

பிரெஞ்சுக்காரர்கள் மிக நல்லவர்கள். அவர்களிடம் நிற வேற்றுமை கிடையாது. பிறரை எப்பொழுதும் சமத்துவமாகவும் அன்பாகவும் நடத்துவார்கள்.

# ரோமா ரோலா

ரோமா ரோலா சிறந்த பிரெஞ்சு அறிஞர். உலகப் புகழ்பெற்ற எழுத்தாளர்களில் ஒருவர். நோபல் பரிசு பெற்றவர். மகாத்மாவின் வாழ்க்கைச் சரிதையை எழுதி, முதன் முதலில் வெளிநாடுகளில் பரப்பியர் அவர் தான். எனவே, மகாத்மாவைப் பற்றி அவ் அறிஞரின் கருத்தை 'டாகுமெண்டரி' படத்தில் எடுத்துச் சேர்க்க வேண்டுமென்று தீர்மானித்தேன்.

வருடத்தில் ஆறு மாதம் ஜினிவாவுக்கு அருகிலுள்ள வில்லினாவ் என்னுமிடத்திலும், ஆறு மாதம் பிரான்ஸ் தேசத்தில் வெஸிலே என்னும் கிராமத்திலும் ரோமா ரோலா வசித்து வந்தார். அவருக்கு ஆங்கிலம் தெரியாது. அவருடைய மனைவியும் சகோதரியும் ஆங்கிலம் பேசுவார்கள்.

முதலில் வில்லினாவுக்குக் கடிதம் எழுதினேன். ரோமா ரோலா வெஸிலேயிலிருப்பதாகவும், அங்கு கடிதம் எழுதும்படியும் ரோமா ரோலானின் சகோதரி பதில் எழுதினர்.

வெஸிலேக்கு ரயில் கிடையாது. அந்த ஊருக்கு எப் படிச் செல்லவேண்டுமென்று தெரியவில்லை. கடைசியாக, அவ்வூர் அவல்லான் ரயில் நிலையத்திலிருந்து பதினறு மைல் தூரத்திலிருக்கிறதென்று தெரிந்து கொண்டேன். பாரிஸிலிருந்து சுமார் இருநூறு மைல்.

வெஸிலே, குன்றின் மேலமைந்த ஒரு குக்கிராமம். குன்றின் உச்சியிலே புராதனப்பெருமை வாய்ந்த கிறிஸ்து ஆலயம் ஒன்றிருந்தது. அங்கு தினந்தோறும் பல யாத்திரி கர்கள் வருவார்கள். தேவாலயத்துக்குச் செல்லும்

வழியில் இயற்கை வனப்புள்ள ஓர் அழகிய தோட்டத்தினிடையே இருந்தது ரோமா ரோலானின் வீடு.

கதவைத் தட்டினேன். வயது முதிர்ந்த வேலைக்காரி ஒருத்தி கதவைத் திறந்து, புலித்தோல் விரிக்கப் பெற்ற ஓர் அறையில் உட்காரும்படிக் கூறினாள். சிறிது நேரத்திற்கெல்லாம் ரோமா ரோலானின் மனைவி அவ் வறைக்கு வந்து என்னை வரவேற்று உபசார வார்த்தைகள் கூறினார்.

ரோமா ரோலா காலை முழுவதும் பூஜை செய்வார் என்றும், மாலையில்தான் அவரைப் பார்க்கலாம் என்றும் சொல்லி, நான் தங்குவதற்காக அருகிலுள்ள ஓர் உணவு விடுதியில் ஏற்பாடு செய்தார்.

மாலையில் மீண்டும் சென்றேன். ரோமா ரோலானைச் சந்தித்தேன். பிரெஞ்சு மொழியில்தான் பேசினார். அவருடைய மனைவியே எங்களுடைய சம்பாஷணைகளை மொழிபெயர்த்துச் சொன்னார்.

ரோமா ரோலானைச் சந்தித்த உடனேயே என்னை யறியாமல், அவரிடத்தில் எனக்குப் பெருமதிப்பு உண்டாயிற்று.

படத்தைப் பற்றிய விவரங்களை எல்லாம் ரோமா ரோலா ஆவலுடன் விசாரித்தார். "நீங்கள் செய்யும் காரியம் மிகவும் நல்லது. இதற்கு அடுத்தபடி சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கையைப் படம் பிடித்தால் மிக நன்றாயிருக்கும்" என்றார்.

அவர் என்னிடம் பேசப் பேச, அவர் சந்தித்த இந்தியர்களைப் பற்றிய நினைவுகள் எல்லாம் அவருக்கு வந்தன.

"பாவம்! லஜபதிராய் இறந்துவிட்டார். அவரைப் போன்ற கம்பீரமான இந்தியரை நான் பார்த்ததே கிடையாது" என்றார்.

பிறகு காலஞ்சென்ற ஜே. ஸி. போஸைப்பற்றியும், அப்பொழுது காங்கிரஸ் தலைவராயிருந்த சுபாஷ் சந்திர போஸைப் பற்றியும் சில விஷயங்களைக் கூறினார்.

இவை எல்லாம் முடிந்ததும் தேநீர் அருந்தினோம். அப்பொழுது மகாத்மாவின் படத்தில் அவருடைய அபிப்பிராயத்தைக் கூறவேண்டுமென்று கேட்டேன்.

"நான் பேசுகிறேன். நீங்கள் ஒலியை வேண்டுமானால் பதிவு செய்யுங்கள். ஆனால் தயவு செய்து எனது படத்தை மட்டும் எடுக்காதீர்கள். நான் படத்தில் விகாரமாய்த் தோன்றுவேன்" என்றார்.

"உங்களைப்பற்றி இந்தியர்கள் எவ்வளவோ கேள்விப்பட்டிருக்கிறார்கள். நீங்கள் காந்திஜியைப் பற்றி எழுதிய புத்தகம் இந்தியாவில் பல மொழிகளில் மொழி பெயர்க்கப் பெற்றிருக்கிறது. உங்களுடைய படத்தைப் பார்க்க இந்தியர்கள் பெரிதும் மகிழ்ச்சியடைவார்கள்" என்று கூறினேன்.

பிறகு அவருடைய மனைவியிடம், எனது வேண்டுகோளை வற்புறுத்துமாறு கேட்டுக் கொண்டேன். அம்மையார் கடைசியாக வெற்றி பெற்றார். உடனே பாரிஸுக்கு டெலிபோன் செய்தேன். மறுநாள் சார்லஸ் மாட்டீன் என்ற பிரபல செய்திப் படம் பிடிப்பவர், புகைப் படக் கருவி, ஒலிப்பதிவு இயந்திரங்களைக் கொண்ட மோட்டாரில் வந்து சேர்ந்தார்.

ரோமா ரோலா இருமுறை பேசினார். பிறகு அவரிடம் விடை பெற்றுப் பாரிஸுக்குச் சென்றேன்.

# பின்லந்தில்

ஸ்வீடனின் தலைநகரான ஸ்டாக்ஹோமிலிருந்து அழகிய ஒரு சிறு கப்பலில் பின்லாந்துக்குப் பிரயாண மானேன். இரவு ஏழு மணிக்குக் கப்பல் புறப்பட்டது. கப்பல் நிறையப் பிரயாணிகளிருந்தனர். அவர்கள் பல மொழிகளில் பேசினார்கள். அவற்றில் ஒன்றுகூட எனக்கு விளங்கவில்லை.

கப்பலில் நான் அங்கும் இங்கும் செல்லும் பொழு தெல்லாம் பிரயாணிகள் என்னை உற்று நோக்குவார்கள். இரவு ஒன்பது மணிக்குக் கப்பலில் சாப்பிடும் இடத்திற் குச் சென்றேன். அங்கு மத்தியில் ஒரு பெரிய மேசை இருந்தது. அதில் சூடு இல்லாத சுமார் இருபது விதமான உணவு வகைகள் பெரிய தட்டுகளில் பரப்பப் பெற் றிருந்தன. பிரயாணிகள் அங்கிருந்த தட்டுகளில் ஒன்று, ஒரு கத்தி, ஒரு 'போர்க்' முதலியவற்றை எடுத்துக் கொண்டு மேசையை வலம் வந்தனர். அக்காட்சி மிகவும் வேடிக்கையாக இருந்தது. வலம் வரும் பொழுது தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை எடுத்துக் கொண்டு தங்களிடத்திற்குச் செல்லுவார்கள். இம்மாதிரி எத்தனை முறை வேண்டுமானாலும் வலமாக வந்து, தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை எடுத்துக் கொள்ளலாம். அது மட்டுந்தான் சாப்பாடு என்று நினைக் காதீர்கள். அது முடிந்ததும் வழக்கப்படி பல உணவுகளை வேலைக்காரிகள் பரிமாறுவார்கள்.

இரவு பன்னிரண்டரை மணி. சிறு தீவு ஒன்றில் கப்பல் சில நிமிஷ நேரம் தங்கிற்று. அதன் பெயர் ஓலண்டு (Oland).

மறுநாள் காலையில் பின்லந்தை அடைந்தோம். ஆபோ (Abo) என்னும் துறைமுகத்தில் இறங்கினோம். பின்லந்திலுள்ள இரண்டாவது பெரிய துறைமுகம் அது தான். அதனைத் துர்க்கு (Turku) என்று கூறுவார்கள்.

அங்கிருந்து ஹெல்சிங்கிக்கு ரயிலில் சென்றேன். சுமார் நான்கு மணிநேரப் பிரயாணம். ரயிலில் சாப்பிடுமிடத்தில் ஒரு பெண் எனக்குக் காலை ஆகாரம் கொடுத்தாள். அவளிடம் நான் கப்பலில் கற்றுக்கொண்ட சில பின்னிஷ் வார்த்தைகளைத் தைரியமாக—ஆனால் தப்பும் தவறுமாக—கூறினேன். அதற்கவள் தான் பின்னிஷ் பெண் அல்லவென்றும், ஸ்வீடிஷ் பெண் என்றும், கரையோரத்தில் வசிப்பவர்களுக்குப் பின்னிஷ் மொழியே தெரியாதென்றும் அரைகுறையான ஆங்கிலத்தில் கூறினாள்.

சிறுபான்மையோர் பிரச்னை இந்தியா ஒன்றில்தான் அதிகம் என்று நினைத்திருந்தேன். ஆனால் பின்லந்திலும் இப்பிரச்னை மிகப் பெரியதாகவும், முக்கியமானதாகவும் இருந்தது. அந்தப் பிரச்னை பின்னிஷ் மக்கள் சுதந்திரம் பெற்றதை எந்த விதத்திலும் தடுக்கவில்லை.

ரயில் ஹெல்சிங்கியை அடைந்தது. ரயில் நிலையம் மிகச் சுத்தமாகவும், அழகாகவும் இருந்தது. பின்லந்தில் பார்க்க வேண்டிய முக்கியமானவற்றுள் ஹெல்சிங்கி ரயில் நிலையக் கட்டிடமும் ஒன்று. அக்கட்டிடத்தின் அமைப்பும் வனப்பும் பின்லந்துக்கே சிறப்பானது. ரயில் நிலையத்தில், வெளிநாட்டு யாத்திரிகர்களுக்கு உதவி செய்வதற்காக ஒரு காரியாலயம் இருந்தது. அங்குள்ளவர்கள் மிக அன்பாக உபசரித்து உதவி செய்தார்கள்.

நேராக ஓர் உணவு விடுதிக்குச் சென்றேன். முன்னரே நான் அறிவிக்காமலிருந்ததால், அதன் நிர்வாகி என்னைக் கண்டு ஆச்சரியப்பட்டார். அன்று காலையில் ஒரு

'கறுப்பு மனிதன்' தமது உணவு விடுதிக்கு வரக்கூடும் என்று அவர் கனவிலும் நினைத்திருக்க மாட்டார்!

நிர்வாகி என்னை மேல்மாடிக்கு அழைத்துச் சென்று, ஓர் அறையைக் காண்பித்தார். உணவு விடுதிக்குள் நான் நுழைந்த உடனேயே ஒரு பரபரப்பு உண்டாயிற்று. விடுதியில் தங்கியிருந்த பெண்களும், விடுதியின் வேலைக்காரப் பெண்களும், ஜன்னல் வழியாகவும், மூலைமுடுக்குகளில் நின்று கொண்டு மறைவாகவும் எனது 'தரிசன'த்திற்குக் காத்திருந்தனர். சில வேலைக்காரப் பெண்கள் ஓடி ஒளிந்து கொள்வார்கள். அக்காட்சி மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது.

விடுதியில் தங்கிய நாற்பத்தெட்டு மணி நேரத்திற்குள் நான் பழைய மனிதனாகிவிட்டேன். ஆனால் வீதியில் செல்லும் பொழுதெல்லாம் உருண்டை முகமுடைய பின்னிஷ் மக்கள் என்னை ஆச்சரியத்தோடு பார்த்தனர்.

ஹெல்கிங்கி மிகவும் அழகான நகரம். இரண்டரை லட்சம் ஜனத்தொகையுள்ள அந்த நகரத்திலே குடிசைகளோ, குட்டிச்சுவர்களோ கிடையாது. உலகத்திலேயே அம்மாதிரியான நகரம் அது ஒன்றுதான் என்று கூறுகின்றனர். எல்லாம் புத்தப்புதிய கட்டிடங்கள். மூன்று முக்கியமான கட்டிடங்களைக் குறிப்பிடலாம். பார்லிமெண்டு, தபால் நிலையம், ரயில் நிலையம். அவற்றில் பார்லிமெண்டுக் கட்டிடம் மிக நன்றாக இருந்தது. எத்தனையோ தேசங்களிலுள்ள பார்லிமெண்டுக் கட்டிடங்களைவிட அக்கட்டிடம் கம்பீரமாகவும் வசதியுள்ளதாகவும் இருந்தது.

பின்லந்து ஒரு குடியரசு. தலைவர் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படுவார். பார்லிமெண்டில் இரண்டு சபைகள் கிடையாது. ஒரே ஒரு சபைதான். அந்தப் பார்லிமெண்டில் அப்பொழுது ஆறு கட்சிகளிருந்தன. விவசாயிகள்

கட்சியும், தொழிலாளர் கட்சியுமே முக்கியமானவை. ஸ்வீடிஷ் மைனாரிட்டிகளின் கட்சியொன்று இருந்தது. கன்சர்வேடிவ், லிபரல், சோஷியலிஸ்ட் கட்சிகளும் இருந்தன.

பின்லந்து பல ஆண்டுகளாக ருஷ்யாவின் ஏகாதிபத்தியத்தில் இருந்தது. நான் சென்றபோது அந்நாடு சுதந்திரம் பெற்றிருந்தது. பின்னியர், ருஷ்யர்களேயும் பொது உடைமைக் கொள்கைகளேயும் வெறுத்தனர். "உலகத்திலே, ருஷ்யா ஒன்றைத் தவிர, மற்றெல்லாத் தேசங்களேயும் அவற்றின் மக்களேயும் நாங்கள் நேசிக்கிருேம். ருஷ்யர் பின்லந்தை விட்டுச் சென்றுவிட்டனர். இந்த நாட்டில் அவர்கள் விட்டு விட்டுப்போனது இரண்டு ருஷ்ய தேவாலயங்கள் தான்" என்று ஒரு பின்னிஷ் ஆசிரியர் அப்போது என்னிடம் கூறினுர்.

ஸ்காண்டிநேவியா என்று சொல்லப்படுகிற நான்கு நாடுகளில் பின்லந்தும் ஒன்று. ஆனுல் மற்ற மூன்று நாட்டினர்களான நார்வீஜியர், ஸ்வீடிஷ்காரர், டேனிஷ்காரர் ஆகியோர் பின்லந்தைப் பூகோள முறைப்படித்தான் ஸ்காண்டிநேவிய நாடாகக் கொண்டனர். பின்லந்தைத் தவிர மற்ற மூன்று தேசத்தினர்களும் ஒரே இனத்தைச் சேர்தவர்கள். பின்னிஷ்காரர்களின் உருவம், மொழி, பழக்க வழக்கம் எல்லாமே மற்றவர்களிடமிருந்து வித்தியாசப்பட்டன. பின்னிஷ்காரர்கள் வெள்ளேக்காரர் அல்லவென்றும் பிரசாரம் செய்யப்பட்டது. பின்னிஷ்காரர் ஸ்லோவக் (Slovak) என்ற வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்பட்டது. பின்னிஷ்காரர் நல்ல வெள்ளே நிறமுடையவர்; எல்லோரும் உருண்டை முகத்தினர்; செம்பட்டை மயிரினர்.

பின்னிஷ் தேசத்தின் நாணயம் பின்னிஷ் மார்க் என்பது. பவுனுக்கு 227 மார்க். ஒரு ரூபாய்க்குச்

சுமார் பதினேழு மார்க். சாமான்களின் விலை எல்லாம் மலிவு. யாத்திரிகர் குறைந்த செலவிலே பிரயாணம் செய்யக் கூடிய நாடுகளில் பின்லந்தும் ஒன்று.

*  *  *  *

ஒலிம்பிக் விளையாட்டுக்கள் மட்டும் நடக்குமானால், ஏழை நாடான பின்லந்தின் பொருளாதார நிலை சிறிதளவு உயரும். ஒலிம்பிக் விளையாட்டுக்களை நடத்தியது ஜெர்மனி. ஒலிம்பிக் நடத்த ஏற்பாடு செய்தது ஜப்பான். ஒலிம்பிக் ஏற்பாடுகளையெல்லாம் முடித்துத் தயார் செய்தது பின்லந்து.

பின்லந்தில் அறுபத்து மூவாயிரம் ஏரிகள் இருப்பதாகக் கூறுவர். அதே கணக்குப்படித்தானோ என்னவோ அறுபத்து மூவாயிரம் மக்கள் உட்காரும்படி வசதியுள்ள ஒலிம்பிக் ஸ்டேடியத்தை அமைத்தனர். அந்த ஸ்டேடியத்தில் ஹெல்சிங்கியிலுள்ள ஜனத்தொகையில் நான்கில் ஒரு பங்கினர் உட்காரலாம்.

மற்றப் பல நாடுகளைவிட, பின்லந்துக்கு ஒலிம்பிக் விளையாட்டை நடத்த உரிமையுண்டு. பின்னிஷ் மக்கள், ஆண்களாயினும், பெண்களாயினும், தேகப் பயிற்சியில் அளவுகடந்த ஆர்வமுள்ளவர்கள். ஒவ்வொரு கிராமத்திலும் ஸ்டேடியங்கள் இருந்தன. ஒரு கிராமத்திலுள்ள ஸ்டேடியத்திற்கு வேடிக்கை பார்க்கச் சென்றேன்.

அப்பொழுது அரைகுறையான ஆங்கிலம் பேசிய ஒரு பின்னிஷ் இளைஞன், என்னை இந்தியன் என்று தெரிந்து கொண்டு, "ஹாக்கியில் உலகப் புகழ் படைத்தது நீங்கள் தானே! வருகிற ஒலம்பிக் விளையாட்டிலும் இந்தியா ஹாக்கியில் வெற்றி பெறவேண்டுமென்பதுதான் எங்கள் ஆசை" என்று கூறினான்.

பின்னிஷ்காரர் நன்ருகச் சாப்பிடுவார்கள். தயிர் சாப்பிடுவதிலே அவர்களுக்குப் பிரியமதிகம். தயிருக்கு,

பின்னிஷ் பாஷையில் 'வீலி' என்று பெயர். தயிரே ஓர் ஆகாரம்போல. தயிருடன் சர்க்கரை, இஞ்சி முதலியவற்றைச் சாப்பிடுவார்கள்.

கோடைகாலத்தில் பின்லந்தில் சூரியன் காலையில் ஒரு மணிக்கே உதயமாகிவிடும். இரவு பதினொரு மணிக்குத்தான் அஸ்தமிக்கும். இரவு பன்னிரண்டு மணிக்குக் கூடப் போதுமான வெளிச்சம் இருக்கும். அந்த வெளிச்சத்திலே சில சமயங்களில் புத்தகம் படிக்கலாம்; கடிதமும் எழுதலாம்.

* * * *

பின்லந்தில் வீதிகளுக்குக் 'காட்டு' (Kattu) என்று பெயர். ஒவ்வோர் இடத்திற்கும் இரண்டு மொழிகளில் பெயர் இருக்கும். ஒன்று பின்னிஷ்; மற்றொன்று ஸ்வீடிஷ். ஹெல்சிங்கி என்பது பின்னிஷ்; ஹெல்சிங்போர்ஸ் என்று ஸ்வீடிஷ்காரர்கள் கூறுவர். பின்னிஷ்காரர்கள் 'ஸ்வோமி' (Suomi) என்று தங்கள் நாட்டைச் சொல்கிறார்கள்.

பின்னிஷ் மொழி உச்சரிக்க நன்றாக இருக்கும்; சில வார்த்தைகள் :

| | | |
|---|---|---|
| சீத்தோஸ் | = | வந்தனம் |
| கௌனிஸ் | = | அழகானது |
| பெய்வா | = | நமஸ்காரம் |
| யுக்ஸ் | = | ஒன்று |
| ஹோத்தேலி | = | ஹோட்டல் |

இம்மாதிரி நான் கற்றுக்கொண்ட வார்த்தைகளைத் தப்பும் தவறுமாக உச்சரித்தபொழுது அவர்கள் ஆனந்தம் அடைந்தனர்.

ஹெல்சிங்கியிலிருந்து வால்கியாகோஸ்கி என்னும் இடத்திற்கு ரயிலில் சென்றேன். சுமார் நூறு மைல். வால்கியாகோஸ்கி ஒரு சிறு கிராமம். அங்கு ஒரு பெரிய

U8·1
N54-6
108047



காகித ஆலை இருந்தது. ஹெல்சிங்கியிலுள்ள உணவு விடுதியின் நிர்வாகி, வால்கியாகோஸ்கியிலுள்ள ஒரே உணவு விடுதியின் நிர்வாகியான தம் நண்பருக்கு, எனது வருகையைப் பற்றி டெலிபோன் செய்திருந்தார்.

ரயில் பிரயாணம் சுகமாக இருந்தது. நான் இருந்த வண்டியில் சுமார் இருபது சாரணர் பிரயாணம் செய்தனர். கையெழுத்துச் சேகரிக்கும் புத்தகத்தை ஒருவர் எடுத்தார். அவ்வளவுதான். அந்த வண்டியிலிருந்த அத்தனை பேருடைய புத்தகங்களிலோ அல்லது காகிதங்களிலோ நான் கையெழுத்துப் போட வேண்டி நேர்ந்தது.

வால்கியாகோஸ்கி ரயில் நிலையத்துக்கு, உணவு விடுதி நிர்வாகி வந்திருந்தார்; என்னைக் கண்டதும் புன்முறுவல் பூத்தார். அவர் பின்னிஷ் மொழியில் பேசினார். அவர் பேசியது எனக்கு விளங்கவில்லை. நான் ஆங்கிலத்தில் பேசினேன். நான் பேசியது அவருக்கு விளங்கவில்லை. ஆனால், நாங்களிருவரும் பேசிக்கொண்டே விடுதிக்குச் சென்றோம்.

அப்பொழுது மாலைநேரம்; வேலையை விட்டு வீட்டுக்குத் திரும்பும் நேரம். என்னைக் கண்டதும் விடுதியைச் சுற்றிக் கூட்டம் கூட ஆரம்பித்துவிட்டது. அடிக்கடி மேல்மாடி முகப்புக்கு வந்து 'காட்சி'யளித்தேன். என்றாலும் பயனில்லை. அந்நியன் ஒருவன் வந்திருக்கும் செய்தி மிக விரைவாகப் பரவிற்று.

அந்த விடுதியில் தங்கியிருந்தது நான் ஒருவன்தான். நிர்வாகியும் ஒருவர்தான். அவர்தான் நிர்வாகி; அவர்தான் 'பட்லர்'; அவர்தான் 'போர்ட்டர்'. நான் பேசியது ஒன்றுமே அவருக்கு விளங்கவில்லை. எனவே ஹெல்சிங்கிக்கு டெலிபோன் செய்து, எனக்கு என்ன வேண்டுமென்பதை ஆங்கிலத்தில் கூறினேன். ஹெல்சிங்கி உணவு விடுதியின் நிர்வாகி அதை வால்கியாகோஸ்கி நிர்வாகிக்கு

பின்னிஷ் மொழியில் கூறினர். அப்படியிருந்தது எனது நிலைமை.

மறுநாள் காலை அங்குள்ள பெரிய காகித ஆலைக்குச் சென்றேன். அங்கு இரண்டு பெரிய உத்தியோகஸ்தர்கள் மிக நன்ருக ஆங்கிலம் பேசினர். இந்தியனொருவன் தங்கள் ஆலைக்கு வரக்கூடுமென்று அவர்கள் எதிர்பார்க்கவேயில்லையாம்.

காகித ஆலை மிகப் பெரியது. மூவாயிரத்து ஐந்நூறு பேர் வேலை செய்தார்கள். அதனைப் பார்வையிட்டதும் மோட்டார்ப் படகில் சுமார் மூன்று மணி நேரம் வால்கியாகோஸ்கியின் சுற்றுப்புறக் காட்சிகளைக் காண்பித்தனர். பிறகு, அவர்களுடைய சங்கத்தில் ஒரு விருந்தளித்தனர். காந்தியடிகளைப்பற்றியும், சாதுக்களைப் பற்றியும் ரசமான கேள்விகள் கேட்டனர்.

வால்கியாகோஸ்கி வாழ்க்கை எனக்கு மிக்க உற்சாகமாயிருந்தது. பின்லந்தை விட்டு வரும்பொழுது எனக்கு உண்மையிலேயே வருத்தந்தான்.

# கோப்பன்ஹேகன் மகாநாடு

டென்மார்க்கு தேசத்தில் 1939 ஆம் ஆண்டு நடைபெற்ற சர்வதேச வியாபார மகாநாட்டுக்கு, பர்மாச் செட்டியார்கள் சங்கப் பிரதிநிதியாகச் சென்றிருந்தேன்.

பாரிஸ் நகரத்திலிருந்த சர்வதேச வியாபாரச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில், பிரதிநிதிக் கட்டணம் ஐந்நூறு பிராங்கைச் செலுத்திவிட்டு, பெர்லினுக்குச் சென்றேன். பெர்லினிலிருந்து ஒரு ஸ்வீடிஷ் விமானத்தில், டென்மார்க்கின் தலைநகரான கோப்பன் ஹேகனுக்குப் பிரயாணமானேன். சுமார் ஒன்றரை மணி நேரத்தில், விமானம் கோப்பன்ஹேகன் விமான நிலையத்தை யடைந்தது. கோப்பன்ஹேகன் நகரத்துக்கும் விமான நிலையத்துக்கும் இடையிலுள்ள தூரம் சுமார் இருபது மைல். நியூயார்க் நகரில் என்னுடன் தங்கியிருந்த டேனிஷ் இளைஞரான ஜான் ஜார்னவும், அவர் மனைவியும், எங்களுடைய பழைய நண்பனான கென் என்ற அமெரிக்க மாணவனும், விமான நிலையத்துக்கு வந்திருந்தனர். பெர்லினிலிருந்து கோப்பன்ஹேகனுக்கு நான் புறப்பட்ட அதே நேரத்தில் தான், அந்த நண்பர்கள் கோப்பன்ஹேகன் நகரத்திலுள்ள தங்கள் வீட்டிலிருந்து விமான நிலையத்துக்குப் புறப்பட்டார்கள். விமானம் வருவதற்குப் பத்து நிமிஷங்களுக்கு முன்பாக நிலையத்தை அடைந்தார்கள்.

என்னைக் கண்டதும் ஜானுக்கும் அவர் மனைவிக்கும் உண்டான சந்தோஷத்திற்கும் பெருமைக்கும் அளவேயில்லை. ஆயிரக் கணக்கான மைல்களுக்கப்பாலிருந்து,

தங்களுக்குப் பழக்கமான ஓர் இந்தியன் தங்கள் வீட்டிற்கு வருவதை நினைக்கும்பொழுது அவர்கள் பெருமித மடைந்தார்கள். ஆயிரக்கணக்கான மகாநாட்டுப் பிரதிநிதிகள் உணவுவிடுதிகளில் தங்கியிருந்தபொழுது, ஒரு நண்பர் வீட்டில் தங்கும் பாக்கியம் கிடைத்ததில் எனக்கும் அளவு கடந்த மகிழ்ச்சியுண்டாயிற்று.

ஜான், கப்பல் கம்பெனி யொன்றில் வேலையிலிருந்தார். அவர் மனைவி ஆஸ்பத்திரியில் வேலை பார்த்து வந்தார். கென் என்ற அமெரிக்க மாணவனும் அவர்கள் வீட்டிலேயே தங்கியிருந்தார். நான் அவர்களுக்கு அன்பளிப்பாகக் கொடுத்த பொருள்களை அவர்கள் கண்ணாடி அலமாரியில் காட்சியாக வைத்திருந்தார்கள். அவை என்ன தெரியுமா? ஓலைப் பெட்டி, கறிப்பவுடர், டின்னில் அடைத்த மாம்பழம், குடகு நாட்டுத் தேன், மைசூர் ஊதுவத்தி.

நாற்பத்தொரு தேசங்களிலிருந்து ஆயிரத்துக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் டென்மார்க்கில் கூடினர். அவர்களுடன் வந்த, அவர்கள் குடும்பத்தினர் தொகையைக் கணக்கிட்டால் இரண்டாயிரம் பேர்களுக்கு மேல் ஆகும். மகாநாடு, ஒரு நாள் காலையில் நகரமண்டபத்தில் ஆரம்பமாயிற்று. அரச குடும்பத்தினர் வந்திருந்தனர். பிரதம மந்திரி, பலருக்கும் புரியாத டேனிஷ் மொழியில் பேசினார். அவர் பேசி முடிந்ததும், அவர் எங்களை அன்போடு வரவேற்றதாக எங்களுக்கு ஆங்கிலத்தில் அறிவிக்கப்பெற்றது.

அன்று பிற்பகல், பார்லிமெண்டுக் கட்டிடத்தில் மகாநாடு ஆரம்பமாயிற்று. பார்லிமெண்டுக் கட்டிடத்துக்குச் செல்லும் பாதையில் வழிநெடுகப் புகைப்படம் பிடிப்பவர்களும், தங்கள் புத்தகங்களில் கையெழுத்து வாங்கும் மாணவ மாணவிகளும் அணிவகுத்து நின்றனர்.

அவர்களுடைய பார்வையிலிருந்து தப்பிப் பார்லிமெண்டுக் கட்டிடத்துக்குச் செல்வதே பெரிய கஷ்டமாகிவிட்டது. பார்லிமெண்டுக் கட்டிடத்துக்குள் நுழைந்ததும் நூற்றுக் கணக்கான அழகிய இளம் பெண்களும் சுறுசுறுப் பான வாலிபர்களும் புன்முறுவலோடு வரவேற்றார்கள்.

ஒரு வாலிபன் எங்களிடம் வந்து ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் முதலிய மொழிகளில் பேசினான். எங்களுக்குத் தெரிந்த மொழியில் பதில் சொன்னதும், அந்த மொழி தெரிந்த வாலிபனிடமோ அல்லது பெண்ணிடமோ எங்களை ஒப்புவித்தான். அவர்கள் எங்களை ஒரு மேசையருகில் கூட்டிச் சென்றார்கள். எங்கள் பெயர்களைப் பதிவு செய் ததும் மற்றொரு மேசைக்கு நாங்கள் அழைத்துச் செல்லப் பட்டோம். அங்கிருக்கும் பெண் எங்கள் பெயர்களைத் தப்பும் தவறுமாக உச்சரித்துவிட்டு, ஒரு பெரிய காகிதப் பையைக் கொடுத்தாள். பையில் என்ன இருக்கிறதோ என்று சந்தேகம். பிரித்துப் பார்த்தபொழுது, 'சாக்லட்' இல்லையென்று தெரிந்தது. பல வர்ணங்களில் அச்சடித்த ஏராளமான அழைப்புக்களே இருந்தன. மகாநாடு நடை பெறும் ஏழு தினங்களுக்கும் ஏற்பாடுசெய்திருக்கும் விருந் துகள். எத்தனை விருந்துகள்! எத்தனை நாட்டியங்கள்! கப்பல் கம்பெனியார் விருந்து! வியாபாரச் சபையார் விருந்து! நகர சபை உபசாரம்! பத்திராதிபர் உபசாரம்! விளையாட்டுச் சபைகள் விருந்து! எல்லாவற்றிற்கும் மேலாக அரச குடும்பத்தாரின் நந்தவனத்தில் தேநீர் விருந்து!

டென்மார்க்கிலே மிக்க அழகுள்ள நூற்றுக் கணக் கான மாணவிகளும், சுறுசுறுப்பும் பணிவுமுள்ள நூற்றுக் கணக்கான மாணவர்களும், அம் மகாநாட்டில் தொண் டாற்றுவதற்காகத் தெரிந்தெடுக்கப் பெற்றிருந்தார்கள். ஆயிரக்கணக்கான அந்நியர்கள் டென்மார்க்கைப் பற்றி நல்ல அபிப்பிராயத்தோடு திரும்பியதற்குக் காரணம், அம்

மாணவ மாணவிகளின் அன்பும், உபசாரமும், பணிவும்தான்.

எனது சட்டையின் மேல் அணிந்திருந்த அடையாளச் சீட்டைக்கண்ட ஒரு மாணவன் என்னை நேராக எசூல்கரிடம் அழைத்துச் சென்றான். எசூல்கர் இந்தியாவைச் சேர்ந்த யூதர். சிந்தியா கம்பெனியின் பிரதான நிர்வாகி. லண்டனில் வசிப்பவர். அவர்தான் இந்தியப் பிரதிநிதி கோஷ்டியின் காரியதரிசி. பிரதிநிதிகள் பன்னிரண்டு பேர் வருவதாக அறிவித்திருந்த போதிலும், ஆறுபேர் தான் வந்திருந்தார்கள். தலைவர் வால்சந்த் ஹீராசந்த், கராச்சியில் பிரபல பணக்காரரான கவாஸ்ஜி என்ற பார்ஸிக்காரர், தென்னிந்தியாவிலிருந்து குண்டூர் நரசிம்ம ராவ், மட்டி சுதர்சனம் என்ற இரு ஆந்திர வியாபாரிகள்.

பார்லிமெண்டுக் கட்டிடத்திலேயே, ஒவ்வொரு நாட்டினருக்கும் தனிக் காரியாலயம் உண்டு. மகாநாட்டுக்குச் செல்வதற்கு முன் அங்கு அனைவரும் கூடினோம். ஒவ்வொருவரும், மற்றவர்களுக்குத் தங்களைத் தாங்களே அறிமுகம் செய்துகொண்டோம்.

வால்சந்த் ஹீராசந்த், மிகவும் அமைதியாக எங்களுக்கு ஒரு சிறு பிரசங்கம் செய்தார். அதன் சாரம்: "இந்த மகாநாட்டில் வோட்டுப் போடுவதைக் குறித்து நீங்கள் எனது யோசனைகளுக்காகக் காத்திருக்க வேண்டாம். எந்தத் தீர்மானம் வந்தாலும் விரோதமாக வோட்டுப் போடுங்கள். ஏனென்றால் இம் மகாநாட்டில் நிறைவேற்றப்படும் தீர்மானம் ஒன்று கூட நமக்குச் சாதகமாயிராது."

வால்சந்த் கூறியது முற்றிலும் உண்மை என்பதை அம் மகாநாட்டின் தீர்மானங்களிலிருந்து அறிந்து கொண்டோம். பார்லிமெண்டுக் கட்டிடத்தில் மகாநாடு ஆரம்பமாயிற்று. தேர்ந்தெடுக்கப்படாமலேயே டேனிஷ் பார்லிமெண்டில் உட்கார்ந்தோம்.

ஒவ்வொரு மேசையிலும் ஒவ்வொரு 'ஹெட் போனும்', மூன்று 'ஸ்விட்சு'களும் உண்டு. பிரசங்கங்கள் ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்சு மொழிகளில்தான் நடைபெறும். ஒருவர் ஜெர்மன் மொழியில் பிரசங்கம் செய்தால், அப்பிரசங்கத்தின் ஆங்கில, பிரெஞ்சு மொழி பெயர்ப்புக்களை, இருவர் தனித்தனிக் கண்ணாடிப் பெட்டிகளுக்குள்ளிருந்து படிப்பார்கள். மூன்று 'ஸ்விட்சு'களும் மூன்று மொழிகளுக்கு. நமக்கு எந்த மொழி வேண்டுமோ அந்த மொழிக்குரிய 'ஸ்விட்சை'ப் போட்டால், அந்த மொழியில் நடைபெறும் பிரசங்கத்தைக் கேட்கலாம். இதனுல் எவ்வளவோ காலம் மீதமாயிற்று.

அம்மகாநாடு யுத்தத்துக்கு முன் நடைபெற்றது. எனவே நேசக்கட்சியின் விரோதிகளும், விரோதியின் நேசக் கட்சியினரும் சரியாசனத்தமர்ந்து அம் மகாநாட்டை நடத்தினுர்கள். அம் மகாநாட்டின் முக்கிய தீர்மானம் வோட்டுக்கு வந்தது. உலகத்தில் சண்டை வராமல் தடுப்பதற்கு, உலகத்திலுள்ள மூலப் பொருள்களைச் சரியான படி பங்கீடு செய்ய வேண்டுமென்றும், அதற்கு அமெரிக்கா, இங்கிலாந்து, இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான் ஆகிய வல்லரசுகளை ஒன்று கூட்டி, பங்கீட்டு முறையை நிர்ணயம் செய்ய வேண்டுமென்பதும் தீர்மானத்தின் சாரம்.

மூலப் பொருள் உற்பத்தியில் இந்தியாவுக்கு நிறையப் பங்குண்டு. இத்தாலியைவிட, ஜப்பானைவிட அதிகமாக மூலப்பொருள் உற்பத்தி செய்யும் இந்தியாவுக்கு மேற்படி வல்லரசு சபையில் பிரதிநிதித்துவம் இல்லை. வால்சந்த் சண்டை போடுவதிலே சமர்த்தர். ஆறு வல்லரசுகளுடன் இந்தியாவையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ருர். காரியம் பலிக்கவில்லை. மூலப் பொருள் பங்கீடு விஷயத்தில், ஆறு வல்லரசுகளின் நல்லெண்ணத்தில் இந்தியர்களுக்கு

நம்பிக்கை இல்லை என்றும் வால்சந்த் எடுத்துக் காட்டினார். இந்தியா மட்டும் விரோதமாக வோட்டளிக்க, மற்ற நாற்பது தேசப் பிரதிநிதிகளும் ஏகமனதாக அத் தீர்மானத்தை ஆதரித்தனர். உலக சகோதரத்துவம் வாழ்க !

* * * *

பொதுவாக மகாநாட்டில் கண்ட பலன் விருந்துகள் தான். உள்ள விருந்துகள் போதாவென்று, கோப்பன் ஹேகனிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகர் இந்தியப் பிரதி நிதிகளை விருந்துக்கழைத்தார். இந்தியப் பிரதிநிதிகள் அனைவரும், விருந்தை ஏற்றுக்கொள்ள இயலாதெனத் தலைவர் வால்சந்த் மூலம் தெரிவித்தோம். அன்றைய டேனிஷ் பத்திரிகைகளுக்கு அது முக்கியமான செய்தி.

* * * *

பெர்லினில் நடைபெற்ற சர்வதேச வியாபார மகா நாட்டில் ஒரு ருசிகரமான சம்பவம் நிகழ்ந்தது. ஒவ்வொரு நாடும் தனது பிரதிநிதிகளை அனுப்பிற்று. இந்திய வியாபாரச் சபைகள் இந்தியப் பிரதிநிதிகளை அனுப்பின. ஆனால் ஆங்கிலேயர்கள் சூழ்ச்சிசெய்து, தங்கள் நாட்டுப் பிரதிநிதிகளை யனுப்பியதோடு, ஓர் ஆங்கிலேயரைப் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகளின் பிரதிநிதியென்று அனுப்பினார்கள். வால்சந்த் வழக்கப்படி சண்டை போட்டு, அந்த ஏகாதிபத்தியப் பிரதிநிதியை மகாநாட்டை விட்டு வெளியேற்றிய பின்னர்தான் மகாநாட்டில் கலந்துகொண்டார்.

* * * *

மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்கும், அவர்களுடைய உறவினர்களுக்கும் அரச தம்பதிகள், தங்கள் அரண்மனை நந்தவனத்தில் தேநீர் விருந்தளித்தனர். பிரதிநிதிகள் அனைவரும் உறவினர்களுடன் சுமார் இருநூறு நல்ல பஸ்களில் அரண்மனைக்குச் சென்றனர். வழிநெடுக, மைல்

கணக்காக, ஆண்களும், பெண்களும், குழந்தை குட்டிகளும் கூடிநின்று, டேனிஷ் கொடிகளை வீசி ஆர்ப்பரித்த காட்சி இன்னும் என் மனத்தில் பசுமையாகவே இருக்கிறது.

அரச தம்பதிகள் இரண்டாயிரம் பேரோடு கைகுலுக்கினர்கள். அரசி இரண்டாயிரம் பேரையும் "சௌக்கியமா? சௌக்கியமா?" என்று விசாரித்தார். ஆனால் இரண்டாயிரம் பேரோடு நின்ற இடத்திலேயே நின்று கைகுலுக்கிய அரச தம்பதிகளை, "சௌக்கியமா?" என்று ஒருவரும் கேட்கவேயில்லை.

அறுபது வயதான டென்மார்க் அரசர், இந்தியப் பிரதிநிதிகளோடு அரைமணி நேரம் அளவளாவியது சில வெள்ளையர்களுக்குப் பிடிக்கவே இல்லை.

# ஜெர்மனியில் ஒரு தமிழ்ப் புலவர்

தமிழருக்குத் தாய்மொழிமீது குன்றாத காதலுண்டு. யாராவது அந்நியர்கள் தமிழில் பேசுவதைக் கண்டால் ஆனந்தமடைகிறோம். அந்த ஆனந்தத்தில், சில சமயங்களில் நம்மையும் நாம் மறந்துவிடுகிறோம். ஜெர்மனியின் தலைநகரான பெர்லின் நகரில், பைதான் சாஸ்திரியாரைச் சந்தித்தபொழுது நான் ஆனந்தங் கொண்டது இயற்கையே யாகும்.

பெர்லின் நகரில் இந்திய மாணவர் சங்கக் கூட்ட மொன்றிலே நண்பரொருவர் பைதான் சாஸ்திரியாரை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

"உங்களைச் சந்திக்க நிரம்ப சந்தோஷம்!" என்று வெகு சீக்கிரமாக ஒரு நிமிஷத்திற்குள் கூறி, என் கைகளைக் குலுக்கினார் சாஸ்திரியார். தமிழிலே பேச வகையின்றித் தவித்துக் கொண்டிருந்த எனக்கு, தமிழ் பேசுவதற்கு ஓர் ஆள் அகப்பட்டாரே என்று சந்தோஷம்.

"தமிழ் நாட்டுக்கு நீங்கள் எப்பொழுது சென்றீர்கள்?" என்றேன்.

"முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்னே; அதாவது சுமார் மூன்று மகா மகங்களுக்கு முன்னே" என்றார் சாஸ்திரியார்.

"நீங்கள் மீண்டும் தமிழ் நாடு சென்று ஏன் கிறிஸ்தவப் பிரசாரம் செய்யக்கூடாது?" என்று நான் கேட்ட பொழுது, "நான் அதை விரும்பவில்லை. நீங்கள் நம்பும் கொள்கையை நீங்கள் ஆதரியுங்கள்; மத மாற்றத்திலே எனக்கு அக்கறையில்லை. எல்லா மதங்களும் உயர்ந்தவை என்று நான் நம்புகிறேன்" என்றார்.

பைதான் சாஸ்திரியார் ஒரு கிறிஸ்தவ மதப் பிரசாரகராக எட்டு ஆண்டுகள் தமிழ் நாட்டில் தங்கியிருந்த பொழுது முறையாகத் தமிழ் பயின்றார். தமிழ்க் கலையில் உண்டாகும் இன்பத்தை ரசிக்கும் தன்மை அவருக்கு உண்டு.

“நீங்கள் என் வீட்டுக்கு ஞாயிற்றுக்கிழமை வந்து சாப்பிட வேண்டும்” என்றார் சாஸ்திரியார்.

குறிப்பிட்ட ஞாயிற்றுக்கிழமை சாஸ்திரியார் வீட்டுக்குச் சென்றேன். அவருடைய மனைவியாரும் மகனும் என்னை வரவேற்றனர். தமிழ் நாட்டுப் படங்கள், கூஜா, செம்பு, மணி முதலிய பொருள்கள், ஏராளமான தமிழ்ப் புத்தகங்கள், சில தமிழ்ப் பத்திரிகைகள் ஆகியவற்றை அங்கு கண்டேன்.

* * * *

பைதான் சாஸ்திரியார் தில்லை நகரசபையில் அங்கத்தினராயிருந்தவர்.

இந்தியாவிலிருந்து இவர் ஜெர்மனிக்கு வந்ததும், சர்வ கலாசாலையில் அந்நிய நாட்டு மாணவர்கள் சம்பந்தமானவற்றைக் கவனிக்கும் அதிகாரியிடத்தில் சென்று, “இந்தியாவிலிருந்து யாராவது தமிழ் மாணவர் வந்தால் தயவு செய்து தெரிவியுங்கள்” என்று கூறினாராம். பல ஆண்டுகள்வரை ஒரு தமிழரையும் அவர் சந்திக்கவில்லை. பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் அவ்வதிகாரி “தமிழ் என்று ஒரு மொழியிருப்பதாக நான் நம்பவில்லை” என்று கூறினாராம்.

* * * *

சாஸ்திரியாருக்கு, என்னிடம் பேசப் பேசத் தமிழ் நாட்டு நினைவுகள் அதிகமாயின. இட்டலி, சாம்பார், அப்பம், அப்பளம் முதலியவற்றைப்பற்றி அவர் கூறிய பொழுது எனது நாக்கில் ஜலம் ஊறிற்று. அதை நினைத்துப் பரஸ்பரம் இருவரும் வருந்தினோம்.

"அந்தக் காலத்திலேயே அரசியல் உணர்ச்சி வலுக்க ஆரம்பித்து விட்டது. பரங்கிப்பேட்டையில் நான் பிரசங்கம் செய்து கொண்டிருந்தபொழுது இளைஞர்கள் பலர் 'வந்தே மாதரம்' என்று கூறிக் கொண்டு கூட்டத்திற்கு வந்து என்மீது கல்லை விட்டெறிந்தனர். நான் ஓர் ஆங்கிலேயன் என்று அவர்கள் தவருகக் கருதியதுதான் அதற்குக் காரணம்" என்றார்.

அவர் தரங்கம்பாடியில் வசித்த காலத்தில் அங்கு ரயில் கிடையாதாம். சீர்காழி ஸ்ரீமான் ப. அ. முத்துத் தாண்டவராய பிள்ளையிடம் அவர் பாடங் கேட்டாராம்.

* * * *

எங்கள் சம்பாஷணையின் மத்தியில் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கும் பிரச்னையைப்பற்றி விவாதித்தோம்.

"ஹிந்தியைக் கட்டாய பாடமாக்குவது நல்லது. ஹிந்தியால் தமிழுக்குத் தீங்குண்டாகும் என்று கருதுவது தவறு. தேசத்திற்குப் பொதுவான மொழி அவசியம். எவ்விதமாகப் பார்த்தாலும் ஹிந்திதான் அந்த ஸ்தானத்தை ஏற்றுக்கொள்ளக் கூடும். அடுக்களையில் ஆங்கிலத்தை, உபயோகிப்பதுபோல ஹிந்தியைத் தமிழர்கள் உபயோகிக்கக்கூடாது. இவ்விரண்டு மொழிகளையும் தமிழர்கள் தேவைக்குத்தான் உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டும். தமிழனேடு தமிழன் ஆங்கிலத்தில் பேசுவதை விட ஹிந்தியில் பேசுவது எந்த விதத்தில் தீமை பயக்கும்? ஐரோப்பாவிலுள்ள பலரும் இரண்டு மூன்று மொழிகள் பேசுகின்றனர். அதனல் அவர்களுக்குத் தாய்மொழிப் பற்றுக் குன்றுவதில்லை. ஹிந்தியைக் கண்டு மருள்வதிலே அர்த்தமில்லை" என்றார் சாஸ்திரியார்.

சாஸ்திரியாருக்கு ஹிந்தியிலும் போதிய பயிற்சியுண்டு என்பதை வாசகர்களுக்குக் கூற விரும்புகிறேன்.

சாஸ்திரியார் அந்தப் பிரச்னையை ஆவலோடு கவனித்து வந்தார். அது சம்பந்தமான 'நவசக்தி'யின் தலையங்கத்தைப் பெரிதும் பாராட்டினார்.

* * * *

தமிழ்க் கதைகள் சிலவற்றை ஜெர்மன் மொழியில் எழுதிப் புத்தகமாக வெளியிட்டிருந்தார். திருக்குறள், பெரிய புராணம், தாயுமானவர் திருப்பாடற்றிரட்டு முதலிய நூல்களிலே அவருக்கு அதிக விருப்பம்.

பாரதியார் நூல்களிலே அவருக்குப் பேரார்வம். பாரதியாரைப் பற்றித் தெரிந்து கொள்ளவும், அவரைப் பற்றி ஜெர்மன் இலக்கியப் பத்திரிகைகளில் எழுதவும், பாடல்களை ஜெர்மன் மொழியில் மொழிபெயர்க்கவும் விரும்பினார். சர்வகலாசாலையில் அவர் தமிழாசிரியராக இருந்ததால் அவர் எழுத்துக்கு அங்கு மதிப்புண்டு.

அவர் ஒரு சித்திரக்காரர். கன்னியாகுமரியை ஞாபகத்தில் கொண்டு அவர் தயாரித்த படம் மிக நன்றாயிருந்தது. அவர் புத்தகத்திலுள்ள படங்கள் அனைத்தும் அவர் தீட்டியனவேயாகும்.

# பிராஹா

இரண்டாவது மகாயுத்தத்தில் சிறகிழந்த பறவை போலத் துடித்தது செக்கோஸ்லோவக்கியா. முதல் மகா யுத்தத்திற்குப் பின் உருவான அந்தத் தேசத்தில் தாமஸ் மஸாரிக் தலைவராயிருந்தார். இரண்டாவது மகா யுத்தத்தின் விளைவாக ஏற்பட்ட துர்பாக்கியமான நிலைமையைப்பற்றி எண்ணுமலேயே அவர் காலமானுர்.

1937 ஆம் ஆண்டில் அந்நாட்டுக்குச் சென்றிருந்தேன். அங்கெழுந்த நினைவுகளெல்லாம் நேற்று நடந்தவைபோலவே இருக்கின்றன. பாரிஸ் நகரச் சிற்றுண்டிச் சாலை ஒன்றில் ஆரஞ்சுப் பழச்சாற்றைச் சுவைத்துக் கொண்டிருந்தபொழுது, அருகிலிருந்த ஒரு வெள்ளைக்காரரிடம் ஆங்கிலத்தில் பேசினேன். அவர் சரியாகப் பதில் பேச முடியாமல் திணறினுர். வெள்ளைக்காரர் எல்லோருக்கும் ஆங்கிலம் தெரியுமா, என்ன ?

என் அருகிலிருந்த அந்த வெள்ளைக்காரர் ஒரு செக்கோஸ்லோவக்கியர். அவர் பேசிய அரைகுறையான ஆங்கிலம் நான் அறிந்து கொள்வதற்குப் போதுமானதாக இருந்தது.

நான் ஓர் இந்தியன் என்று தெரிந்து கொண்டதும் காந்தியடிகளைப் பற்றிய நினைவுதான் அவருக்கு உதித்தது.

"மகாத்மா காந்தி செளக்கியமாக இருக்கிருரா?" என்று அவர் கேட்டார்.

ஆங்கிலமே தெரியாத அவர் மனைவியும் சகோதரியும் 'காந்தி' என்ற பெயரைக் கேட்டதும் என்னைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தனர்.

"ஐரோப்பாவிலேயே எங்கள் நாடு ஒன்றுதான் உண்மையான ஜனநாயக நாடு. நீங்கள் அவசியம் அங்கு வாருங்கள்" என்று அவர் சொல்லித் தமது பெயரும் விலாசமும் அச்சிடப்பெற்ற சீட்டைக் கொடுத்தார். அவர் பெயர் புஸ்மென் என்று அதிலிருந்து தெரிந்தது. அதைப் பார்த்ததும் அவர் ஒரு வழக்கறிஞர் என்று தெரிந்துகொண்டேன். புஸ்மென் தம்பதிகள் சம்பிரதாய முறையிலல்லாமல் மிக்க அன்பாகப் பழகினர்கள். அந்தத் தம்பதிகளின் விருந்தினனாகத் தங்க வேண்டுவது அவசியமெனத் தீர்மானித்தேன்.

அந்தச் சம்பவத்திற்குப் பிறகு சுமார் பத்து வாரம் ஹிட்லரின் ஜெர்மனியில் தங்கியிருந்தேன். ஜெர்மன் இளைஞர்களோடு பழகப் பழக அவர்களுடைய அபிலாஷைகள் தெரியவந்தன. இழந்துபோன குடியேற்ற நாடுகளைப் பற்றியும் வெளி நாட்டிலுள்ள ஜெர்மானியர்களைப் பற்றியுமே அவர்கள் கனவு கண்டனர். செக்கோஸ்லோவக்கிய நாட்டின் மொத்த ஜனத்தொகை ஒன்றரைக்கோடியென்றும், அதில் ஐந்தில் ஒரு பகுதியினரான ஜெர்மானியர் உரிமையின்றி வாழ்வதாகவும் ஜெர்மன் பத்திரிகைகள் கிளர்ச்சி செய்து கொண்டிருந்தன. ஜெர்மனிக்குள் நுழையும் செக்கோஸ்லோவக்கியர் மற்ற அந்நிய நாட்டினரை விடக் கடுமையாக நடத்தப்பட்டார்கள்.

ஜெர்மனியில் தங்கியிருந்தபொழுது செக்கோஸ்லோவக்கியாவைப் பற்றித் தினந்தோறும் புதுப்புது விஷயங்கள் தெரிந்து கொண்டேன். கடைசியாக ஒருநாள் செக்கோஸ்லோவக்கியாவின் தலைநகரை யடைந்தேன். அந்நகரை 'பிராஹா' என்று செக்கோஸ்லோவக்கியர்கள் சொல்வார்கள். ஆங்கிலத்தில் 'பிரேக்' என்று பெயர். பழமையும் பெருமையும் நிறைந்த அந்த அழகிய தலைநகரை நாமும் செக்கோஸ்லோவக்கியர்களைப் போலவே 'பிராஹா' என்றே அழைப்போம்.

அந்த நாட்டின் நாணயம் குரோனர். ஒரு பவுனுக்கு, அப்பொழுது, சுமார் நூற்றுநாற்பத்தைந்து குரோனர்கள். ஐந்து, பத்து, ஐம்பது, நூறு குரோனருக்கு நோட்டுக்கள் உண்டு.

ஏற்கெனவே ஏற்பாடு செய்யப்பெற்றிருந்த உணவு விடுதிக்குப் போய்ச் சேர்ந்தேன். சிறிது நேரங் கழித்து உணவு விடுதிச் சிப்பந்தியைக் கொண்டு டெலிபோன் செய்தேன். சில நிமிஷங்களுக்கெல்லாம் டாக்டர் புஸ்மென் வந்து சேர்ந்தார். அவரும் நானும் வெளியில் நின்ற அவருடைய மோட்டாருக்குச் சென்றோம். அது 1928 ஆம் வருஷத்து 'மாடல்.' விசையை அழுத்திப் புறப்படச் செய்ததும் 'கடகட' என்று சத்தமிட ஆரம்பித்தது. சரியாக வீடு போய்ச் சேர்வேனோ என்று எனக்குச் சந்தேகம். நான் இம்மாதிரி நினைத்தபொழுது வண்டி திடீரென்று நின்றது.

புஸ்மென் அதைக் குறித்து ஆச்சரியமோ, கவலையோ கொள்ளவில்லை. அவருக்கு அது ஒரு சர்வ சாதாரணமான சம்பவம். அருகிலிருந்த மோட்டார் பழுதுபார்ப்பவனை அழைத்து வந்தார். அவன் "இங்லண்டர் எங்கே?" என்றான். புஸ்மென் திருப்புளி ஒன்றை அவனிடம் கொடுத்தார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. "திருப்புளியை ஏன் இங்லண்டர் என்று சொல்கிறீர்கள்?" என்றேன்.

அவர் சிரித்துக்கொண்டே, "இது ஒரு காரணப் பெயர்" என்றார்.

"அந்தக் காரணத்தை நான் தெரிந்துகொள்ளலாமா?" என்றேன்.

"இந்தத் திருப்புளியைக்கொண்டு எல்லாவிதமான ஆணிகளையும் முடுக்கலாம். அதைப்போல, ஐரோப்பாவில் ஏற்படும் சிக்கல்களை ஒழுங்கு படுத்துகிறவர்கள் ஆங்கிலேயர்கள். அதனால் தான் ஆங்கிலேயர்களுக்கு இந்தக் காரணப்பெயர் வந்தது" என்றார்.

"இது ஆங்கிலேயர்களுக்குக் கௌரவமா? அல்லது அவமதிப்பா?" என்றேன்.

"உங்கள் மனத்திற்கு எப்படித் தோன்றுகிறதோ அப்படி வைத்துக் கொள்ளுங்கள்" என்றார் புஸ்மென்.

ஒருவாறாக வீடுபோய்ச் சேர்ந்து உணவருந்தினோம். அங்கிருந்த வேலைக்காரிக்கு என்னைப் பார்க்கப் பார்க்க வியப்பு அதிகரித்தது. அவள் 'செக்' நாட்டு முறைப்படி மரியாதை செய்யும்போதெல்லாம் எனக்குச் சிரிப்பாக இருக்கும்.

டாக்டர் புஸ்மெனின் மனைவி என்னைப் பல கேள்விகள் கேட்டார். புஸ்மெனுக்கு அன்றிரவு வழக் கறிஞர் உத்தியோகம் போய், மொழிபெயர்க்கும் உத்தி யோகம் கிடைத்தது.

இரவு பத்து மணி ஆயிற்று. "சரி, போய் ஊர் சுற்றிப் பார்க்கலாம், வாருங்கள்" என்றார் புஸ்மென்.

"இந்த அர்த்தராத்திரியில் எப்படி ஊர் சுற்றுவது?" என்றேன்.

"பிராஹாவின் அழகை நீங்கள் இரவில்தான் அனு பவிக்க வேண்டும்" என்றார்.

இரண்டு மணிநேரம் சுற்றியபின் ஆற்று நடுவேயுள்ள ஒரு சிற்றுண்டிச்சாலையில் சூடான தேநீர் அருந்தினோம். அன்றிரவு புஸ்மென் தம்பதிகளிடம் விடைபெற்றுக் கொண்டேன்.

* * * *

பிராஹாவில் ஒரு வீட்டின் ஐந்தாவது மாடியில் ஒரு பெரிய அறை. கதவை மெள்ளத் தட்டினேன். கன்னங் கறேலென்றிருந்த ஓர் 'அகஸ்தியர்' வந்து கதவைத் திறந் தார். அவர்தான் ஸ்ரீ நாராயண நம்பியார்.

நம்பியார் ஒரு சிறந்த அரசியல் அறிஞர். இந்தியா விலுள்ள சில முக்கியமான ஆங்கிலத் தினசரிகளுக்கு

பிராஹாவிலிருந்து கட்டுரைகள் எழுதி வந்தார். ஜெர்மனியில் பல ஆண்டுகள் தங்கி 'சோஷலிஸ்டு'க் கட்சியில் முக்கியஸ்தராக விளங்கினர். ஹிட்லர் ஆட்சிக்கு வந்ததும் நம்பியார் சிறைப்பட்டார். சுபாஷ் பாபு முதலியோரின் முயற்சியால் அவர் விடுதலையடைந்தார்.

பிராஹாவிலுள்ள இந்தோ-செக்கோஸ்லோவக்கியச் சங்கக் கூட்டமொன்றுக்கு நம்பியார் என்னை அழைத்துச் சென்றார். வித்தல்பாய் படேல், சுபாஷ் போஸ் முதலியவர்களின் முயற்சியால் மத்திய ஐரோப்பாவில் அம்மாதிரியான பல சங்கங்கள் தோன்றியிருந்தன. அன்றிரவுக் கூட்டத்திற்குச் சுமார் முப்பது பேர் வந்திருந்தார்கள். அவர்களுள் பத்துப் பேர் பெண்கள். கூட்டம் முடிந்ததும் தலைவர் பேராசிரியர் லெஸ்னி, நம்பியாரையும் என்னையும், அங்கு வந்திருந்த மற்றுமோர் இந்தியரான சிங் என்பவரையும் ஓர் உணவுச்சாலைக்கு அழைத்துச் சென்றார். பேராசிரியர் லெஸ்னி ஐரோப்பாவிலேயே சிறந்த சம்ஸ்கிருதப் பண்டிதர். இந்தியக் காவியங்களை நன்கு ஆராய்ந்த அறிஞர். ஐரோப்பாவில் அவருக்கு நல்ல மதிப்பு. பண்டித ஜவாஹர்லால் நேரு பிராஹாவுக்குச் சென்றபொழுது அவரை அவ்வறிஞர் வரவேற்றார்.

மறுநாள் நம்பியார் மற்றொரு நண்பரை அறிமுகப்படுத்தினர். நான் தமிழன் என்று தெரிந்ததும் அந்த செக்கோஸ்லோவக்கியருக்கு ஆனந்தம் தாங்கவில்லை. தாமும் தமிழ் படிப்பதாக அவர் கூறினர். அவர் பேசிய இரண்டொரு வார்த்தைகள் 'தமிழ்' என்று அவர் கூறிய பின்னர்தான் எனக்குத் தெரிந்தது. தமிழர்களில் பலர் ஆங்கிலத்தில் பேசும்போது, பாவம், செக்கோஸ்லோவக்கியராவது தமிழ் பேசட்டும்!

பிராஹாவுக்கு வந்து நாலைந்து நாட்களாகியும் ஒரு திரைப்படத்தைக் கூடப் பார்க்கவில்லையே என்று வருத்தப்

பட்டேன். ஊருக்கு நடுவே போனேன். ஒரு திரைப்படக் காட்சிசாலைகூடக் கண்ணுக்குத் தென்படவில்லை. நான் ஆங்கிலத்தில் கேட்டது யாருக்கும் புரியவில்லை. கடைசியாக ஒருவர், பூமிக்குக் கீழே செல்லும் ஒரு வழியைக் காட்டினார். என்ன ஆபத்து நேரப் போகிறதோ என்ற அச்சத்துடன் கீழிறங்கினேன்.

என்ன ஆச்சரியம்! பூமிக்கு கீழே ஒரு பட்டணமா? சிற்றுண்டிச்சாலைகள், நடன மண்டபங்கள்! ஆயிரம் பேர், உட்காரக்கூடிய திரைப்படக் காட்சி சாலைகள்.

ஐரோப்பாவிலுள்ள சிறந்த திரைப்படக் காட்சிசாலைகளோடு பிராஹாவில் உள்ளவற்றையும் ஒப்பிடலாம். படங்களிலிருந்து செக்கோஸ்லோவக்கியர்களின் வாழ்க்கை ஒருவாறு தெரிந்தது.

ஜனநாயக உணர்ச்சியும், உடலமைப்பும், கட்டுப்பாடும், நல்ல உழைப்பும் உள்ள மக்கள் செக்கோஸ்லோவக்கியர். பிரபலமான ஸ்கோடா தொழிற்சாலையும், பாட்டா தொழிற்சாலையும் அந்நாட்டிலுள்ளவையே.

செக்கோஸ்லோவக்கியர்களுக்குள் சகோதர உணர்ச்சியையும், தேசபற்றையும் வளர்ப்பது 'சொக்கோல்' என்னும் உடற்பயிற்சிச் சங்கம். அப்பொழுது ஆண்களும் பெண்களுமாக அதில் எட்டு லட்சம் அங்கத்தினர்கள் இருந்தார்கள்.

# இத்தாலியில்

வெனிஸ் துறைமுகத்தை யடைந்ததும் எல்லோரது முகத்திலும் மகிழ்ச்சிக் குறி காணப்பட்டது; கரையை அடைந்தோமென்ற மகிழ்ச்சி. அதிலும் வெனிஸை அடைந்தோமென்ற மகிழ்ச்சி!

கப்பலிலிருந்து சிறு படகில் இறங்கினோம். அந்தப் படகிலேயே ஊர்சுற்றிப் பார்க்கச் சென்றோம். வெனிஸ் நகரத்தில் வீதிகளே கிடையாது. எல்லாம் கால்வாய்கள் தான். ஒரு வீட்டிலிருந்து எதிர்ப்புறத்திலுள்ள வீட்டிற்குச் செல்லவேண்டுமென்றால், படகில்தான் செல்ல வேண்டும். சில முக்கியமான இடங்களில் பாலம் அமைத்திருந்தார்கள்.

*　　　*　　　*　　　*

பழைய ரோமாபுரி ராஜ்யத்தின் சின்னங்கள் பல அங்கிருந்தன. ஊரின் மத்தியில் பழமையான தேவாலயமும், அரண்மனையும் இருந்தன. வெளி நாட்டறிஞர் சிலரும், பிரபுக்கள் சிலரும் வெனிஸைத் தங்கள் வாசஸ்தலமாகக் கொண்டிருந்தனர். ராபர்ட் பிரௌனிங் என்ற ஆங்கிலக் கவி அங்குதான் காலமானார். அவர் வீட்டைச் சுற்றிப் பார்த்தோம்.

*　　　*　　　*　　　*

வெனிஸில் கண்ணாடித் தொழிலும் பூவேலைத் தொழிலும் அதிகம். ஒவ்வொரு தொழிற்சாலையிலும் ஆங்கிலம் தெரிந்த ஒருவனிருப்பான்.

ஒரு முறை ஓர் இத்தாலியனை, குறிப்பிட்ட ஒரு வியாபார நிலையம் எப்பொழுது திறக்கப்படும் என்று கேட்டேன்.

அதற்கு அவன், "எனக்குத் தெரியாது. நான் ஒரு கண்ணாடித் தொழிற்சாலையின் முதலாளி" என்று தன்னைத்தானே அறிமுகப்படுத்திக் கொண்டான்.

* * * *

அந்த அழகான வெனிஸ் நகரத்தில்—வீதிகளெல்லாம் ஆறுகளாக விளங்கும் அந்த அபூர்வமான வெனிஸ் நகரில்—குடிப்பதற்கு நல்ல தண்ணீர் கிடையாது. வெகு தூரத்திலிருந்து குழாய் வழியாக நல்ல தண்ணீர் கொண்டு வந்தார்கள்.

* * * *

புதிதாக மணம் செய்துகொண்ட தம்பதிகள் சந்தோஷமாகச் சில நாட்களைக் கழிப்பதற்கு வெனிஸ் நகரத்திற்குச் செல்வதுண்டு.

* * * *

வெனிஸிலிருந்து சில மணி நேரத்தில் ரோமாபுரிக்குச் செல்லலாம். பழமையும், பெருமையும் வாய்ந்த அந்நகரம் அன்று பாஸிஸ இத்தாலியின் தலைநகராக இருந்தது. ஊருக்கு நடுவேயுள்ள பழைய அரண்மனையொன்றில், சர்வாதிகாரி முசோலினியின் காரியாலயம் இருந்தது. ஊரையடுத்துச் சில மைல் தூரத்திலுள்ள ஒரு மாளிகையில் அவர் வசித்து வந்தார்.

அவர் காரியாலயத்தைக் காவல் புரியும் ஆயுதபாணிகளான காவலாளர் காலையிலும் மாலையிலும் மாற்றப்படுவார்கள். அந்நிகழ்ச்சி, மற்றப் பல நாடுகளைப்போல, ஒரு சடங்காக நடந்தது. அதைப் பார்க்கச் சில சமயங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடுவார்கள். அம்மாதிரியான கூட்டங்களில் உற்சாகம் நிறைந்திருக்கும். 'விவா டூச்சே, விவா சியானோ' என்று ஜனங்கள் ஆரவாரம் செய்வார்கள் (விவா—ஜே என்பது போல.)

* * * *

மார்க்கோனியும், மக்ரோனியும் பிறந்தது அந்த நாட்டில்தான். மார்க்கோனியை உங்களுக்குத் தெரியும்.

அவர் காலஞ்சென்ற ஒரு விஞ்ஞான நிபுணர். மக்ரோனி என்பது ஓர் உணவுப் பொருள். இத்தாலியர், ஏழை முதல் பணக்காரர் வரையில் தினந்தோறும் விரும்பியுண்ணும் உணவு. அதில் பலவகை உண்டு.

பொதுவாக இத்தாலியர் உணவு சாதாரணமானது, ஏழ்மையானது. நேப்பிள்ஸ், பிரிண்டிஸி போன்ற துறை முகங்களில், பகட்டான உடையணிந்த போலீஸ்காரர் களையும், பசியால் இரங்கி நிற்கும் ஏழைக் குழந்தை களையும் பார்க்கலாம். பல சமயங்களில், வயதுவந்த அழகிய சிறு பெண்கள் வீதியிற் செல்லும் அந்நியர்களிடம் பிச்சை கேட்பதுண்டு. ஆனால், அந்த நிலை ரோமாபுரியில் இல்லை.

* * * *

இத்தாலியரில், பெரும்பாலோர் பழுப்பு நிறத்தவர். கரையோரங்களில் ஏறக்குறைய கறுப்பு நிறமுள்ள இத்தாலியர்களையும் காணலாம்.

* * * *

முசோலினியின் அரசாங்கம் தேகப் பயிற்சியில் அதிகக் கவனம் செலுத்தியது. அந்தத் தேகப் பயிற்சி வெறும் உடற்பயிற்சி யல்ல—யுத்தப் பயிற்சி. அவர்கள் பயிற்சி பெறும் இடத்திற்கு 'முசோலினி ஸ்டேடியம்' என்று பெயர். அபூர்வமான அந்தப் பெரிய ஸ்டேடியம் முழுதும் பளிங்குக் கற்களால் அமைக்கப் பெற்றிருந்த தைப் பார்த்து ஆச்சரியப்பட்டேன். ஆனால் பளிங்குக் கற்கள் இத்தாலியில் மலிவு என்று தெரிந்தபொழுது எனது ஆச்சரியம் குறைந்தது. அங்குள்ள நீச்சல் தடா கத்தை நாள் முழுதும் பார்த்துக் கொண்டிருக்கலாம். அவ்வளவு அழகாக அமைக்கப்பட்டிருந்தது.

* * * *

சினி சிட்டா என்பது இத்தாலியிலுள்ள மிகச் சிறந்த ஸ்டுடியோ. அதனை ஹாலிவுட்டிலுள்ள நல்ல ஸ்டுடியோ

ஒன்றிற்கு ஒப்பிடலாம். ரோமாபுரிக்கு அருகே அந்த அழகான ஸ்டுடியோவை அமைத்திருந்தார்கள். அது அரசாங்கத்தாருக்குச் சொந்தம். முசோலினியின் இரண்டு குமாரர்களில் ஒருவர் திரைப்படத் தொழிலில் ஈடுபட்டிருந் தார். அவர்தான் அந்த இலாகாவின் தலைவர்.

அதில் ஒரே சமயத்தில் ஏழு படங்கள் பிடிக்க வசதி செய்திருந்தார்கள். எல்லாம் புதிய கருவிகள். அவ்வளவு பெரிய அழகான ஸ்டுடியோவை மிகச் சுத்தமாக வைத் திருந்தார்கள். ஒலிப் பரீட்சைக்காக அவர்கள் செய்திருந்த ஏற்பாடுகள் மிக நன்றாக இருந்தன. ஸ்டுடியோக்களில் ஒரு குறிப்பிட்ட இடம் முழுதும் அங்குள்ள சுவர்களிலோ அல்லது அட்டைகளிலோ, வெனிஸ் நகரில் பின்னிய மெல்லிய கண்ணாடிக்கயிறுகளை அமைத்திருந்தனர்.

* * * *

பழைய சரித்திரச் சின்னமான கட்டிடங்கள் பல ரோமாபுரியை அலங்கரித்தன. அவையெல்லாம் ரோமர் களின் நாகரிகத்தை நினைவூட்டின. யாத்திரிகர் கண்களுக்கு அச் சின்னங்கள் சிறந்த விருந்தாகும். அவற்றைக் கண்டு களிக்க ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான யாத்திரிகர் ரோமாபுரிக்குச் சென்றனர்.

# பொருட்காட்சிக்குத் தக்க மாளிகை

ஜினிவாவில் சர்வதேச சங்கத்திற்கு முன்னால் நின்று கொண்டிருந்தேன். முறையிடுவதற்காக அல்ல, அதனைப் பார்ப்பதற்காக.

மணிக்கொரு முறை பார்வையாளர்களை அழைத்துக் கொண்டுபோய்ச் சுற்றிக் காண்பித்தார்கள். அதற்கெனக் கட்டணமும் வசூலித்தார்கள். அக்கட்டிடத்தைச் சுற்றி வரும்போது, அங்கு வேலை செய்யும் பல தேசத்து மனிதர்களைப் பார்ப்போம். அப்பொழுது அது சர்வதேச பொருட்காட்சிசாலையோ என்ற சந்தேக முண்டாகும்.

கட்டிடத்தைச் சுற்றிக் காண்பிக்க அழைத்துச் சென்ற மனிதன் மிக வேகமாகப் பேசினான். அவன் பேசியது எங்களுக்கு விளங்கவே இல்லை. இக்கட்டிடம் கட்டச் செலவான கோடிக்கணக்கான தொகையை இங்கிலீஷ், அமெரிக்க, பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலி முதலிய நாட்டு நாணயங்களில் அவன் ஒரே மூச்சில் கூறிய பொழுது சிறிது ஆச்சரியப்பட்டோம்.

நாங்களெல்லோரும், தனித்தனியாகப் பிரிந்து அந்தப் பெரிய சபாமண்டபத்தைச் சுற்றிப் பார்க்கத் தொடங்கினோம். அந்த மனிதன் சபா மண்டபத்தை பற்றிக் கூறிய விவரத்தைக் கேட்க அருகில் யாருமே இல்லை. ஆனால், அதற்காக அவன் பேச்சை நிறுத்தவில்லை.

அந்த மண்டபத்திலுள்ள ஒவ்வொரு மேசையிலும் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ஏழு 'ஸ்விட்சு'கள் இருந்தன. கூட்டம் நடைபெறும்போது அங்கத்தினர் தமது 'ஹெட்-போனை' (Head Phone) வைத்துக் கொண்டு, தமக்கு

எந்த மொழி தெரியுமோ, அந்த மொழிக்குரிய விசையை அழுத்தி, அந்த மொழியில் மொழிபெயர்த்துச் சொல்லப் படும் பிரசங்கத்தைக் கேட்பார்.

சர்வதேச அங்கத்தினர்கள் உட்காரும் மண்டபத்தின் மேலே ஸ்பானியர்கள் செய்த, தங்க முலாம் பூசப் பெற்ற, பல அரிய சித்திர வேலைப்பாடுகளைப் பார்த்தோம். அவற்றைப் பார்த்துக்கொண்டிருந்தபொழுது, சர்வதேச சங்கத்திலிருந்து ஸ்பெயின் விலகியது என்ற செய்தி கிடைத்தது. உடனே ஸ்பெயின் அரசாங்கத்தார், அந்தத் தங்கம் பூசிய சித்திர வேலைகளையெல்லாம் தங்கள் தேசத்துக்கு எடுத்துக் கொண்டு போய்விடுவார்களோ என்ற சந்தேகம் தோன்றிற்று. ஏனெனில், இத்தாலிய அரசாங்கம், சர்வதேச சங்கத்திலிருந்து விலகிக்கொள்ளுகையில், தான் சங்கத்திற்களித்த கட்டிடங்களையெல்லாம் திரும்பவும் எடுத்துக் கொண்டது.

சுமார் ஒரு மணி நேரம் சங்கக் கட்டிடத்தைச் சுற்றிப் பார்த்தோம். சங்கக் கட்டிடத்திலுள்ள ஓர் அழகிய திரைப்படக் காட்சிசாலையில் பதினைந்து நிமிஷ நேரம் பார்த்த படம்தான் உற்சாகமாயிருந்தது. அந்தப் பதினைந்து நிமிஷ நேரமும், அந்த மனிதன் பேசாதிருந்ததே எங்களுக்கு மகிழ்ச்சியை அளித்தது. சர்வதேச சங்கம் சாதித்த—சாதிக்கப் போகிற—விஷயங்களை யெல்லாம் ஒரு பிரசாரப் படமாகக் காண்பித்தார்கள். முடிவில் படம் என்ன என்பதே எங்களுக்கு விளங்கவில்லை.

சர்வ தேச சங்கத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த இந்திய நண்பர் ஒருவரோடு ஏரிக்கரைக்கு உலாவச் சென்றேன். ஜினிவா ஏரியின் அமைப்பையும் அழகையும் அதைப் பார்த்தவர்களே அனுபவிக்க முடியும்.

# தென்னுப்பிரிக்காவில்

லண்டனிலுள்ள கப்பல் கம்பெனியொன்றில் தென்னுப்பிரிக்கா செல்லுவதற்குப் பிரயாணச்சீட்டுக் கேட்டேன். பிரயாணச்சீட்டுக் கொடுத்தார்கள். ஆனால் கப்பலில் ஏற்ற மறுத்துவிட்டார்கள். 'தென்னுப்பிரிக்கா அரசாங்கத்தாரிடமிருந்து அனுமதி கிடைத்தால்தான் கப்பலில் ஏற அனுமதிப்போம்' என்றார்கள். இம்பீரியல் ஏர்வேஸுக்குச் சென்றேன். அவர்களும் அதே பதிலைத்தான் கூறினார்கள்.

பிறகு லண்டனிலுள்ள தென்னுப்பிரிக்க அரசாங்கப் பிரதிநிதிக் காரியாலயத்துக்குச் சென்றேன். அங்கிருந்த அதிகாரியொருவர் எனது நிலையைக் குறித்துப் பரிதாபப்பட்டார்.

"நீங்கள் ஒரு பிரிட்டிஷ் இந்தியப் பிரஜை. சட்டப்படி நீங்கள் தென்னுப்பிரிக்கா செல்வதைத் தடைசெய்ய முடியாது. ஆனால் நடை முறையில் தடை செய்கிறார்கள். தென்னுப்பிரிக்க அரசாங்கத்தின் இந்த விபரீதமான போக்கை என்னால் அறிந்து கொள்ள இயலவில்லை" என்றார்.

"நான் எப்படியும் தென்னுப்பிரிக்கா செல்ல வேண்டும். ஒரு வேளை என்னைத் தென்னுப்பிரிக்காவில் இறங்க அனுமதிக்காவிட்டால், அங்கிருந்து லண்டனுக்குத் திரும்பி வருவதற்குள்ள கப்பல் கட்டணத்தை ஈடுதொகையாகக் கொடுத்துவிடுகிறேன். எனக்குக் கப்பலில் இடம் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும்" என்றேன்.

சில நிமிஷ நேரம் கப்பல் கம்பெனிக்காரர்களோடு டெலிபோனில் பேசினார். அவருடைய புன்னகையிலிருந்து காரியம் வெற்றி என்பதையறிந்தேன்.

1938 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 10ந் தேதி, சவுதாம்ப்டன் துறைமுகத்திலிருந்து 'வின்ட்ஸர்காஸில்' என்னும் கப்பலில் தென்னுப்பிரிக்காவுக்குப் புறப்பட்டேன். வசதியான பெரிய கப்பல். சுமார் இருபதாயிரம் டன். இரண்டாவது வகுப்பில் சுமார் அறுபது பிரயாணிகள். பெரும்பாலோர் ஆங்கிலேயர். மற்றவர்கள் யூதர்கள். எல்லோரும் நிறத்திமிர் கொண்டவர்கள். அவர்களிடையே பிரயாணம் செய்வது மிகவும் சங்கடமாக இருந்தது. கப்பல் புறப்பட்ட முதலாவது இரவிலிருந்தே நிறவேற்றுமை தலை காட்ட ஆரம்பித்துவிட்டது. இரண்டாவது வகுப்புப் பிரயாணிகள் சாப்பிடுமிடத்தில் சுமார் இருநூறு பேர் உட்காரலாம். ஒரே இடத்தில் இரண்டு பிரிவாகப் பிரித்திருந்தார்கள். ஒரு பிரிவில் என்னைத் தனியாக உட்கார வைத்தார்கள். மற்றப் பிரயாணிகள் எல்லோரும் மற்ருெரு பிரிவில். அந்த அவமானத்தை என்னுல் சகிக்க முடியவில்லை. தென்னுப்பிரிக்காவை அடைவதற்கு முன்னமேயே கஷ்டங்களும் அவமானங்களும் நேரத் தொடங்கிவிட்டன.

நான்காவது நாள் கப்பல் மதீரா என்னும் தீவையடைந்தது. புன்ஷல் என்பது துறைமுகம். அது போர்த்துகீஸியர் வசமுள்ளது. அழகான மலை. அதை அடைய ஒரு மலை ரயில். அதுதான் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான யாத்திரிகர்களை அங்கு கொண்டு சென்றது. எனது கப்பலில் பிரயாணம் செய்த ஒரு ஸ்காட்லந்து என்ஜினியர் என்னுடன் ஊர் சுற்ற வந்தார். அவர் தென்னுப்பிரிக்காவுக்குச் செல்வது அதுதான் முதல் முறையாம். எனவே, அவருக்கு நிறவேற்றுமை அப்பொழுது வளரவில்லை.

ஆகஸ்ட் 24-ந் தேதி காலை ஆறு மணிக்குக் கப்பல் கேப்டவுன் துறைமுகத்தை யடைந்தது. கப்பலை விட்டு

இறங்குவதற்குத் துடித்துக் கொண்டிருந்தேன். ஒரு வேளை என்னை இறங்க அனுமதிக்காவிட்டால், லண்டனுக்குத் திரும்பிச் செல்லவேண்டுமே என்று எண்ணிய பொழுது அச்சமாக இருந்தது. ஏழு மணிக்குக் குடியேற்றப் பதிவு அதிகாரிகள் கப்பலுக்கு வந்தனர். நல்ல வேளையாகத் தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்திய அரசாங்கப் பிரதிநிதி ஸ்ரீ ராமராவ் எனது வருகையைப் பற்றி அந்த அதிகாரிகளுக்குத் தெரிவித்திருந்தார். என்னிடம் இருபத்தைந்து பவுன், ஈடுதொகை வாங்கிக்கொண்டு அந்நாட்டில் ஒரு மாதம் தங்குவதற்கு அனுமதி கொடுத்தார்கள். எனது சாமான்களை யெல்லாம் கப்பலிலேயே டர்பனுக்கு அனுப்பிவிட்டு, புகைப் படக் கருவியுடன் கரையைச் சேர்ந்தேன்.

ரயில் தயாராகக் காத்துக்கொண்டு நின்றது. ஆனால் இந்தியர் மற்றப் பிரயாணிகளோடு ஒன்றாகப் பிரயாணம் செய்யமுடியாது. 'ரிஸர்வ்' என்ற தனி வண்டியில்தான் பிரயாணம் செய்யவேண்டும். தென்னாப்பிரிக்கா ரயில் வண்டிகள் மிகவும் மெதுவாகச் செல்லும். அமெரிக்காவில் மணிக்கு எண்பது மைல் வேகம் செல்லும் ரயிலில் பிரயாணம் செய்து விட்டு, தென்னாப்பிரிக்காவில் பிரயாணம் செய்வது ஒரு மாதிரியாக இருக்கும். மெதுவாகச் செல்லும் ரயிலில், அவமானங்களைச் சகித்துக் கொண்டு நாள்கணக்காகப் பிரயாணம் செய்ய நான் விரும்பவில்லை. எனவே ஆகாய விமான நிலயத்திற்குச் சென்றேன். எட்டரை மணிக்கு புறப்பட்ட விமானத்தில் எனக்கு இடம் கிடைத்தது. கேப்டவுனிலிருந்து டர்பன் சுமார் ஆயிரத்து இருநூறு மைல்.

ஆகாயவிமானப் போக்குவரத்தை தபால் இலாகாவே நடத்தியது. போதுமான வருமான மில்லாததால், இந்தியர்களையும் விமானத்தில் பிரயாணம் செய்ய அனுமதித்

தார்கள். கேப்டவுனிலிருந்து இரண்டரை மணி நேரத்தில் எலிஸபெத் துறைமுகம் என்ற இடத்தை யடைந்தோம். என்னுடன் இரண்டு பேர் பிரயாணம் செய்தனர். எலிஸபெத் துறைமுகத்திலிருந்து கிழக்கு லண்டன் செல்லும் வரையிலும், பதினான்கு பேர் உட்காரக் கூடிய விமானத்தில் தனியாகப் பிரயாணம் செய்தேன். கிழக்கு லண்டனில் ஐந்தாறு பிரயாணிகள் வந்தனர். அவர்களில் ஒருவர் என்னைப் பார்த்து, "நீங்கள்தான் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியா?" என்றார். அரசாங்கப் பிரதிநிதிதான் விமானத்தில் பிரயாணம் செய்யமுடியும் என்பது அவர் கருத்துப்போலும்!

மாலை நான்கு மணிக்கு டர்பனைச் சேர்ந்தேன். பிரபல இந்தியத் தலைவர்களும், என்னுடைய நண்பர் டாக்டர் லாஸரஸும் மலர்ந்த முகத்தோடு வரவேற்றார்கள். அங்கிருந்து எல்லோரும் நேராக டாக்டர் டாடு வீட்டிற்குச் சென்று தேநீர் அருந்தினோம். டாக்டர் டாடு சீமையில் வைத்தியப் பயிற்சி பெற்ற இந்திய முஸ்லிம். இளம் வயது. நல்ல தோற்றம். சமதர்மக் கொள்கையுடைய ஒரு தேசீய வாதி. சத்தியாக்கிரக இயக்கத்தைத் தொடங்குவதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார்.

டாக்டர் லாஸரஸ் இந்தியக் கிறிஸ்தவர். தமிழர். அவருடைய தாய் தந்தையர், காந்தியடிகளின் சத்தியாக்கிரக இயக்கத்திலே சிறை சென்றவர்கள். அவருடைய வீடுதான், சத்தியாக்கிரகிகளின் தலைமைக் காரியாலயமாயிருந்தது. தென்னாப்பிரிக்காவிலுள்ள இரண்டரை லட்சம் இந்தியர்களில் அவரும் அவர் மனைவியுந்தான் அமெரிக்கா சென்று படித்துத் திரும்பியவர்கள். டாக்டர் லாஸரஸ் ஏல் சர்வகலாசாலையில் படித்தவர். அவர் சாஸ்திரி கலாசாலையில் ஓர் ஆசிரியராயிருந்தார்.

சாஸ்திரி கலாசாலை டர்பனிலுள்ள ஒரு சிறந்த ஸ்தாபனம். மகாகனம் சாஸ்திரியார் தென்னாப்பிரிக்காவில்

இந்திய அரசாங்கப் பிரதிநிதியாக இருந்தபொழுது பல நல்ல காரியங்கள் செய்திருக்கிறார். அந்த உருப்படியான காரியங்களுள் சாஸ்திரி கலாசாலையும் ஒன்று. அந்தக் கலாசாலை ஆரம்பிப்பதற்கு முன் இந்திய மாணவர்களின் உயர்தரப் படிப்பிற்கே வழியில்லாமலிருந்தது. சாஸ்திரியார், அங்குள்ள இந்திய வியாபாரிகளிடம் சுமார் இரண்டரை லட்ச ரூபாய் வசூல் செய்து, சாஸ்திரி கலாசாலைக் கட்டிடங்களைப் பூர்த்தி செய்தார். பிறகு அரசாங்கத்தாருக்கு, அக் கலாசாலையை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாம். சாஸ்திரி கலாசாலையில் சுமார் முந்நூறு மாணவர்கள் பயின்றார்கள். பதினாறு ஆசிரியர்கள். அவர்களுள் எட்டுப் பேர் ஐரோப்பியர், எட்டுப் பேர் இந்தியர். கலாசாலைக் கட்டிடத்தில் இந்திய ஆசிரியர்களுக்குத் தனியறை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஐரோப்பிய ஆசிரியர்களுக்கும் இந்திய ஆசிரியர்களுக்கும் தகுதி ஒன்றாய் இருந்தபோதிலும், சம்பளத்தில் வித்தியாசம்.

ஒரு நாள் மாலையில் சாஸ்திரி கலாசாலை மாணவர் சங்கத்தாரின் தேநீர் விருந்தில் கலந்து கொண்டேன். அப்பொழுது மாணவர்கள் இந்தியாவைப்பற்றி விநோதமான கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தனர். அந்த மாணவர்கள் இரண்டாவது, மூன்றாவது தலைமுறைகளைச் சேர்ந்தவர்கள். அவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் இந்தியாவுக்கே வராதவர்கள். ஒரு மாணவன் 'சந்சி' என்றால் என்னவென்று கேட்டான். 'கிப்ளிங்' புத்தகத்தில் படித்தானாம். சந்நியாசியைப்பற்றி இந்திய மாணவனொருவன் 'கிப்ளிங்' மூலமாகத் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது.

டர்பன் நகரத்தில் மட்டும் எண்பதினாயிரம் இந்தியர் இருந்தார்கள். அவர்களில் பெரும்பாலோர் தமிழர்.

டர்பன் நகரத்தில் பெரிய இந்தியச் சந்தை ஒன்று இருந்தது. காய்கறி, பழம், பூ முதலியவற்றை விற்ருர்கள். அங்கு வியாபாரம் செய்யும் சகோதரிகள் தமிழ்பேசுவது மிகவும் வேடிக்கையாக இருக்கும். அவர்கள் பேசுவது 1860 ஆம் வருஷத்துத் தமிழ். அவர்கள் பேசும் ஆங்கிலம் தமிழை விட நன்ருக இருந்தது.

காந்தியடிகள் ஆரம்பித்த 'பீனிக்ஸ் ஸெட்டில் மெண்டு', டர்பனிலிருந்து சுமார் பத்து மைல் தூரத்தி லிருந்தது. காந்தியடிகளின் புதல்வரான மணிலால் காந்தி யும், அவருடைய மனேவியான சுசீலா தேவியும், அவர் களுடைய இரு குழந்தைகளும் அங்கு வசித்தார்கள். காந்தியடிகள் ஆரம்பித்த 'இந்தியன் ஒபினியன்' என்னும் பத்திரிகை இன்னும் நடைபெற்று வருகிறது. சுசீலா தேவி விருந்தினர்களை மிக்க அன்பாக உபசரித்தார். நன்ருய் ஆங்கிலம் பேசினுர்.

டர்பனிலிருந்து, பீட்டர் மாரிட்ஸ்பர்க், நியூகாஸில், சார்ல்ஸ் டவுன், வால்கர்ஸ்ட் முதலியவற்றின் வழியாக ஜோகன்னஸ்பர்க் சென்றேன். காந்தியடிகளின் சத்தியாக் கிரகம் சம்பந்தமான இடங்கள் ஒவ்வொன்றையும் படம் பிடித்தேன். எந்த வீட்டில் பார்த்தாலும் காந்தியடிகள் படந்தான்.

'காந்தி' என்பது மந்திரச் சொல். அந்த வார்த் தையை எந்த இந்தியனிடமாவது உச்சரித்தால், உடனே அவன் முகத்தில் ஒரு பிரகாசத்தைக் காணலாம். அவன் உள்ளத்திலே பொங்கும் உணர்ச்சியை, முகத்தோற்றத் திலே காண்போம்.

சத்தியாக்கிரக இயக்கம் ஒரு புராணம்போல ஆகி விட்டது. பெரியவர்கள் தங்கள் குழந்தைகளுக்குக் கதை யைப்போலக் கூறுகிருர்கள். ஜோகன்னஸ்பர்க் சென்ற பொழுது, முதன் முதலில் சிறை சென்ற வீரத் தமிழ்

அன்னைகள் சிலரைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது. பி. கே. நாயுடுவின் மனைவி, தம்பி நாயுடுவின் மனைவி முதலியோரைச் சந்தித்தேன். அந்தக் கண்காணாத தேசத்திலே, காந்தியடிகளின் சத்தியாக்கிரகப் போரில் பலியான இளந்தமிழரான வள்ளியம்மையையும் நாகப்பனையும் யார் மறக்க முடியும்? அவர்களின் ஞாபகார்த்த இடங்களுக்குச் சென்று எனது வணக்கத்தைச் செலுத்தினேன்.

பிரிட்டோரியா சென்றபொழுது தலைவர் குரூகர் வீட்டைப் படம் பிடித்தேன். அப்பொழுது காந்தியடிகளை ஒரு போலீஸ்காரன் அடித்து அவமானப்படுத்திய காட்சிகளெல்லாம் என் மனக் கண்ணிலே தோன்றின.

தென்னாப்பிரிக்காவில் தங்கிய சுமார் மூன்று வாரங்களில் தமிழர்களிடையேதான் அதிகம் பழகினேன். சில தமிழ்ப் பெண்கள் பாரதி பாடல் சிலவற்றைப் பாடிய பொழுது என் உள்ளம் குளிர்ந்தது. தமிழர்கள் தமிழை மறக்கவில்லை; ஆனால் வளர்க்கவுமில்லை. பெரும்பாலான தமிழர் ஆங்கிலத்திலேதான் நினைப்பார்கள். பிறகு அதைத் தமிழிலே கூறுவார்கள்.

தமிழரில் பெரும்பாலோர் தோட்ட வேலை செய்பவர்கள். வியாபாரம் குஜராத்திகளிடமும், முஸ்லிம்களிடமும்தான் இருந்தது. இந்தியர்களின் உரிமைப் போராட்டங்களிலே கலந்து அதிகமாகத் தியாகம் செய்தது தமிழர்கள்; காந்தியடிகள் ஆரம்பித்த சத்தியாக்கிரகத்திலே கடைசிவரை போராடி எல்லாவற்றையும் தியாகம் செய்தவர்களில் பெரும்பாலோர் தமிழர்கள்தான்.

தமிழரின் வாழ்க்கைநிலை உயரவில்லை. வயிறு நிறைய உணவு கிடைக்கிறதென்ற திருப்தியைத் தவிர வேறொன்றுமில்லை. உரிமை என்ற பேச்சே கிடையாது.

கலியாணம் முதலிய விசேஷங்களுக்கு மிக அதிகமாகச் செலவு செய்தனர். கடன் வாங்கிக் கலியாணம் செய்து கெட்ட குடும்பங்கள் எத்தனையோ.

தமிழருடைய பெயர்களும் வரவர மாறிக்கொண்டே வந்தன. பட்டப் பெயர் மிக அதிகம். 'டிக், டூடி' என்றெல்லாம் கூப்பிடுவார்கள். காந்தியடிகள் தமது புத்தகத்தில் எழுதியுள்ள 'மூன்லைட்' குப்புசாமியைப் பார்த்தேன். தமிழிலே ஆறுமுகம் என்ற பெயரை 'ஹாரி மார்க்கன்' என்றும், மங்கமாரி என்பதை 'மாண்ட்கோமரி' என்றும் வைத்துக்கொள்வார்கள்.

தென்னுப்பிரிக்கா, பொதுவாக ஒரு நல்ல நாடு. டிரான்ஸ்வால் பொன் விளையும் பூமி. ஜோகன்னஸ்டார்க் நகரம் மிகவும் நாகரிகமானது; நியூயார்க் நகரத்தின் ஒரு பகுதிபோலத் தோன்றுகிறது. பிரிட்டோரியாவும் ஓர் அழகான நகரம். டர்பன் மிகவும் சுத்தமான நகரங்களில் ஒன்று.

அந்நாட்டின் நீக்ரோக்கள் மிகவும் பிற்போக்கானவர்கள். இந்தியர் வீட்டிலும், வெள்ளையர் வீட்டிலும் வேலை செய்து வந்தார்கள். அவர்கள் வாங்கும் சம்பளம் மிகமிகக் குறைவு. நீக்ரோக்களை முன்னுக்கு வர விடாமல் செய்வதில் வெள்ளையரும் இந்தியரும் ஒரே மாதிரிதான்.

நிறவேற்றுமையினல் இந்தியர் படும் கஷ்டங்கள் மிக அதிகம். அங்குள்ள இந்தியருக்கு அவையெல்லாம் பழக்கமாகி விட்டது. டர்பனில் சில வீதிகளில் இந்தியர் நடந்து செல்லமுடியாது. திரைப்படக் காட்சி, நாடகம் முதலிய இடங்களில் இந்தியர்களை அனுமதிக்கமாட்டார்கள். டிராம், பஸ் முதலியவற்றில் இந்தியர்களுக்கு, மேல் தட்டில் கடைசி மூன்று ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருக்கும்.

இந்தியர்களை ஆங்கிலேயர் உணவு விடுதிகளுக்கோ அல்லது உணவுச்சாலைக்கோ அனுமதிப்பதில்லை. ஜோகன்னஸ்பர்க்கில் ஐரோப்பியரல்லாதார்களுக்குத் தபால் நிலையங்கள் கூடத் தனியாக இருந்தன. பாங்குகளில் ஐரோப்பியரல்லாதாருக்குத்தனிக் 'கெளண்டர்' வைத்திருந்தனர்.

இந்தியர் தனி இடங்களில் (சேரிகள் மாதிரி) தான் வசிக்கவேண்டும். டிரான்ஸ்வாலில், இந்தியர்களுக்குச் சொத்து வாங்க உரிமையில்லை.

ஜோகன்னஸ்பர்க்கில் நான் தங்கி இருந்தபொழுது யுத்தம் ஆரம்பித்த செய்தி கிடைத்தது. அன்று ஜோகன்னஸ்பர்க்கில் ஒரே குழப்பம். அங்கிருந்த ஜெர்மானியர், போர்த்துகீஸிய ஆட்சியிலுள்ள லோரன்ஸோ மார்க்கீஸ் என்ற நகரத்திற்குச் சென்றனர். வெறி பிடித்த சில ஆங்கில இளைஞர்களும், யூத இளைஞர்களும், ஜெர்மன் ஸ்தாபனங்களையும் ஜெர்மன் சாமான்களையும் நாசமாக்கக் கூட்டமாகக் கிளம்பினர். அந்தக் கூட்டங்களைக் கலைப்பதற்கு, போலீஸார் தடியடிப் பிரயோகம் செய்யவில்லை; கண்ணீர்ப் புகை உபயோகித்தனர். ஒரு முறை காரில் சென்று அதன் மத்தியில் அகப்பட்டுக் கொண்டேன். கண்ணீர்ப் புகை கண்களுக்குள் போய்விட்டதால் மோட்டாரை நிறுத்த வேண்டியதாயிற்று. சுமார் மூன்று நிமிஷம் கண்களிலிருந்து ஜலம் வந்தது. கண்ணெல்லாம் ஒரே எரிச்சல். ஆனால் பரிமளமான வாசனை. இது தான் கண்ணீர்ப் புகை. அந்தத் தொந்தரவுகளையெல்லாம் விட்டு விட்டு விமானத்தில் ஏறி டர்பன் சென்றேன். மறுபடியும் கப்பல் கம்பெனியில் தகராறு. இந்தியர்களுக்கு முதலாவது வகுப்பு பிரயாணச் சீட்டு கொடுப்பதில்லையென்று எல்லாக் கப்பல் கம்பெனிக்காரர்களும் (ஜப்பானியர் உள்பட) கூறிவிட்டனர். கடைசியாக இந்திய அரசாங்கப் பிரதிநிதியின் உதவியால் பிரயாணச் சீட்டு கிடைத்தது.

தென்னப்பிரிக்காவைப் பற்றி நினைக்கும்பொழுதெல்லாம், 'நமது பாரத மக்கள் அங்கு சென்று படும் பாடுகள்' தான் நினைவுக்கு வருகின்றன.

# கப்பல் பிரயாணம்

கப்பல் பிரயாணம் என்றதும் பலருக்கு மகிழ்ச்சியுண்டாகும்; சிலருக்கு அளவு கடந்த வெறுப்பு உண்டாகும். கடல் நோய் ஒன்றுமட்டும் இல்லாவிட்டால் கப்பல் பிரயாணத்தைப் போலச் சௌகரியமானது வேறொன்றுமே இல்லை.

பிரயாணம் செய்வதற்குப் புதிய புதிய சாதனங்களையெல்லாம் கண்டுபிடித்து வருகிறார்கள். வேகத்தை மட்டும் முக்கியமாகக் கருதினால், ஆகாய விமானமும் ரயிலுமே சிறந்தவை. ஆனால், சௌகரியத்தை மட்டும் முக்கியமாகக் கருதினால், கப்பல் பிரயாணத்துக்கு இணையானது வேறெதுவுமில்லை.

ரயிலிலே பிரயாணம் செய்யும்போது, வேகமாக ஓடும் ரயில்களையே நாம் விரும்புகிறோம். கைகாட்டிகளைக் காணும் இடங்களிலெல்லாம் நிற்கும் ரயில்களைக் கண்டால் நமக்கு வெறுப்பு உண்டாகிறது. ஆனால் கப்பல் ரயிலைப்போல வேகமாகச் செல்லாது; மணிக்குப் பத்து மைல் முதல் முப்பது மைல் வரைதான் செல்லும். கப்பலைப் பொறுத்தவரையில் அதன் வேகத்தைவிட, அதன் அளவும் எடையும்தான் முக்கியமானவை. கப்பல் எவ்வளவுக்கெவ்வளவு சிறிதாக இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு நமது பிரயாணமும் கஷ்டமாயிருக்கும். கப்பல் பெரிதாக இருந்தால், அதிகமாக ஆடாமல் அசையாமல் சந்தோஷமாகப் பிரயாணம் செய்யலாம்.

நமது நாட்டில் ஒரு மாதம் அல்லது இரண்டு மாதம் விடுமுறை கிடைத்தால், அதுவும் சம்பளத்தோடு

விடுமுறை கிடைத்தால், சிலர் வெளியூர் சென்று சுகமாய்க் காலங்கழிக்கிருர்கள் அல்லவா? மேலே நாடுகளிலே சிலர், இவ்வாறு விடுமுறை கிடைத்தால், கப்பல் பிரயாணத்தி லேயே அதன் பெரும் பகுதியையும் செலவிடுவார்கள். அப்படியானல் கப்பல் பிரயாணத்தில் எவ்வளவு இன்ப மிருக்க வேண்டும்!

ஒரு நல்ல கப்பலில் பிரயாணம் செய்தால், மிதக்கும் அரண்மனை யொன்றில் இருப்பதாகவே நமக்கு உணர்ச்சி உண்டாகும். ஆயிரக்கணக்கான மக்களுடன், பல நாள் கப்பலில் பிரயாணம் செய்வதால் பலருடன் பழகும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. தூய கடற் காற்று; தூசி என்பதையே பார்க்க முடியாது; நினைத்தபொழு தெல்லாம் கடல் நீரில் குளிக்கலாம். நீந்தும் தடாகம் வேறு. கப்பலுக்குள்ளேயே மைல் கணக்காக நடக்கலாம். ஓட்டாட்டம் முதல் 'டென்னிஸ்' வரை ஆடலாம். பொழுது போவதற்கு வானொலி, திரைப்படம் முதலியவை உண்டு. அவற்றில் விருப்பமில்லாதவர்களுக்குப் புத்தகசாலையும் உண்டு. ஏராளமான மாதப் பத்திரிகைகள், பிரசாரப் புத்தகங்கள் ஒவ்வொரு மாடியிலும் காணப்படும். சில கப்பல்களுக்கு ஆறு மாடிகள் உண்டு. மாடிகளுக்குச் செல்ல மின்சார 'லிப்டு' களும் உள்ளன.

கப்பலில் முக்கியமானது சாப்பாடு. சாப்பாட்டு விவரங்களை அச்சடித்துக் கொடுப்பார்கள். அதற்கு ஆங்கிலத்தில் 'மெனு' என்று பெயர். சில மெனுக்களைப் படிப்பதற்கே கால்மணி நேரம் ஆகும். அந்த மெனுவில் இல்லாத சாப்பாட்டு வகைகளும், வேண்டுமென்று கேட்டால் கிடைக்கும். எந்த நாட்டு உணவும் தயார் செய்து கொடுப்பார்கள். உதாரணமாக ஒரு நாள் சாப்பாட்டைக் கவனியுங்கள். காலை படுக்கையை விட்டு எழுந்திருக்கும் போதே தேநீர் அல்லது காப்பி, ரொட்டி, பழம் முதலியன.

காலை எட்டரை மணியிலிருந்து ஒன்பதரை மணிக்குள் காலை ஆகாரம். பதினொரு மணிக்குச் 'சூப்'பும் ரொட்டியும். பகல் ஒரு மணிக்குச் சாப்பாடு. மாலை நாலு மணிக்கு டீயும் 'கேக்'கும். இரவு ஏழு மணிக்கு இராச் சாப்பாடு. இரவு பத்து மணிக்குச் 'சாண்ட்விச்சும்,' காப்பியும். அதில் முக்கியமான மூன்று உணவு சாப்பிடுவதற்கு ஒவ்வொரு முறையும் ஒரு மணி நேரம் ஆகும். அந்தச் சமயங்களில், கப்பல் வாத்தியக் கோஷ்டியார் வாத்தியம் வாசிப்பார்கள். பிரயாணிகள் தண்ணீரை அருந்திக் கெட்டுப் போகாமல் இருப்பதற்காக, குடிவகைகள் நிறைய வைத்திருப்பார்கள்.

கப்பல் குறிப்பிட்ட துறைமுகத்தை அடைவதற்கு முதல் நாள் இரவு பிரிவுபசார விருந்து நடைபெறும். அதில் ஒவ்வொரு பிரயாணியின் மேசையிலும், காகிதத்தில் சுற்றப்பட்ட வர்ணக் காகிதக் குல்லா ஒன்றிருக்கும். அந்தக் குல்லாக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதிரி விநோதமாயிருக்கும். அத்தனை பிரயாணிகளும் தங்கள் மேசையிலுள்ள வர்ணக் குல்லாவை அணிந்துகொண்டு ஆர்ப்பாட்டம் செய்வார்கள். அதை ஒரு கோமாளிக் கூத்து என்றுதான் கூறவேண்டும். சில பிரயாணிகள் அந்த உற்சாகத்தில் உணவுப் பொருள்களைக் கையிலெடுத்துக் கொண்டு. ஆடிக்கொண்டே சாப்பிடுவார்கள். அவற்றைப் பார்க்கும்பொழுது, பிரயாணிகள் பிரயாணம் செய்வதற்காகச் சாப்பிடுகிறார்களோ அல்லது சாப்பிடுவதற்காகப் பிரயாணம் செய்கிறார்களோ என்ற சந்தேகம் உண்டாகும்.

கப்பல்களிலே பல ரகங்களுண்டு. புகையைக் கக்கும் கரிக்கப்பலையும், நாகரிகமான மோட்டார்க் கப்பலையும் இங்கே குறிப்பிடவில்லை. ஒன்று முதல் நான்கு வகுப்புக்கள்வரை உள்ள கப்பல்கள் சில. அந்தக் கப்பல்களில் உயர் வகுப்புப் பிரயாணிகள் சிலரை நாம் அடிக்கடி

பார்க்கலாம்; அவர்களால் நம்மைப் பார்க்க முடியாது. ஏனெனில் அவர்களில் பெரும்பாலோர் ஆகாயத்தைப் பார்த்துத்தான் நடப்பார்கள்.

ஒரே வகுப்புள்ள கப்பல்கள் சில உண்டு. அந்தக் கப்பல்களிலே ஒரே வகுப்பில் நம்பிக்கையுடைய பிரயாணி களைப் பார்க்கலாம். வகுப்பு வித்தியாச மில்லாததால், அவர்கள் அனைவரும் மனிதத் தன்மையுடன் நடந்து கொள்வார்கள்.

கப்பல்களில் சிறந்தவை அட்லாண்டிக் மகா சமுத் திரத்தில் ஓடும் கப்பல்கள்தான். ஒவ்வொரு நாட்டினரும் போட்டி போட்டுக்கொண்டு, தங்கள் தேசப் பெருமையை நிலைநாட்டப் பிரமாண்டமான கப்பல்களை ஓட்டு கிறார்கள். ஒவ்வொரு நாட்டு மக்களும் பெரும்பாலும் தங்கள் நாட்டுக் கப்பல்களிலேயே பிரயாணம் செய்வார் கள். பெரிய கப்பல்களில் அதிக லாபம் கிடைப்பதில்லை. லாபம் எல்லாம் சிறிய கப்பல்களில்தான். பேருக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டே பெரிய கப்பல்களை ஓட்டு கிறார்கள்.

நாட்கணக்காகக் கப்பல்களில் பிரயாணம் செய்தால் உலக சமாசாரங்களே தெரியாமல் போய்விடும் என்று கருதவேண்டாம். உலகச் செய்திகளைச் சேகரித்து, தினந் தோறும் பத்திரிகையாக அச்சடித்துப் பிரயாணிகளுக்கு இலவசமாக வழங்குகிறார்கள். அதிக விவரம் தெரிய விரும்புவோர் வானொலி கேட்பார்கள்.

கப்பல்களில் நாடகம் நடக்கும் என்றால் ஆச்சரியப் படுவீர்கள்! நாடகத்தைப் பற்றியல்ல; நடிகர்களைப் பற்றி. கப்பல்களில் பல திறப்பட்டவர்களும் பிரயாணம் செய் வார்கள் அல்லவா? அவர்களில் சிலர் ஒன்று கூடி ஒரு குழு நியமிப்பார்கள். ஒன்றிரண்டு சிடு மூஞ்சிகளைத் தவிர, பெரும்பாலான பிரயாணிகள் அந்த விஷயத்தில்

சேர்ந்து உழைப்பார்கள். நாலைந்து நாள் ஒத்திகை நடைபெறும். பிறகு நாடகம் நடைபெறும். பிரயாணிகளில் சிலர், நாடகத்தில் சிறப்பாக நடிப்பவர்களுக்குப் பரிசுகளும் வழங்குவார்கள்.

விளையாட்டிலும் அப்படித்தான். ஒவ்வொரு விளையாட்டுக்கும் பந்தயங்கள் நடைபெறும். 'டெக்டென்னிஸ்' 'பிங்பாங்,' நீச்சல், குறிபார்த்துச் சுடுதல், ஓட்டப் பந்தயம் முதலிய பல விளையாட்டுக்கள். பந்தயங்கள் நடைபெறும்பொழுது ஏராளமான பிரயாணிகள், விளையாடுபவர்களை உற்சாகப்படுத்திக்கொண்டே இருப்பார்கள்.

நடனத்துக்காகவே ஓர் இரவு ஒதுக்கி வைப்பார்கள். மேலை நாட்டினர் ஆடும் சாதாரண நடனங்களைத் தவிர, ஒவ்வொரு நாட்டினரும், தமது நாட்டுக்கென்று தனியாக உள்ள நாட்டியத்தை ஆடிக் காண்பிப்பார்கள். உதாரணமாக ஹங்கேரிக்காரர்களும், ருமேனியர்களும், போலந்து வாசிகளும், சுவிட்சர்லாந்துக் குழந்தைகளும் தங்கள் நாட்டு உடையணிந்து ஆடும் நாட்டியங்கள் மிகவும் நன்றாயிருக்கும். கிராமபோன் சங்கீதத்தைப் பின்னணியாகக் கொண்டு சில நாட்டியங்கள் நடைபெறும். நடனக் கலையில் புகழ்பெற்ற யாராவது ஒரு பிரயாணி இருந்து விட்டால் அன்றிரவு முழுவதும் சிவராத்திரிதான்.

கப்பலிலே சில சமயம் பிரசங்கங்களும் நடைபெறும். பொதுவாகக் கலகமூட்டும் அரசியல் விஷயங்களைப் பேசக் கப்பலதிகாரி அனுமதிக்கமாட்டார்.

யாருக்கும் தீங்கிழைக்காத இலக்கியப் பிரசங்கங்கள் நடைபெறும். பலருக்குப் புரியாத மொழிகளில் பிரசங்கிகள் சில சமயம் பேசுவார்கள். அந்தப் பிரசங்கங்களைப் பொறுத்தவரை ஒரே ஒரு நன்மை உண்டு; பொழுது போகாத பிரயாணிகள், தாங்கள் பேசாமல், மற்றொருவரைப் பேசச்சொல்லிக் கேட்டுக் கொண்டே இருக்கலாம்

ஞாயிறுதோறும் பிரார்த்தனை உண்டு. சில கப்பல்களில் கிறிஸ்தவப் பாதிரிகளைச் சம்பளம் கொடுத்தே வைத்திருப்பார்கள். கப்பல்களிலே சில சமயங்களில் கல்யாணங்கள் நடைபெறும்; குழந்தை பிரசவமாகும்; பிறந்த தினங்கள் கொண்டாடப்படும்; சாவுகளும் நேரும். அவற்றில் சில சடங்குகளுக்குப் பாதிரிகள் அவசியமல்லவா? மதப் பிரசாரம் செய்வதிலே கிறிஸ்தவ மதப் பாதிரிகளுக்கு இணையாருமேயில்லை. சமுத்திரங்களில் செல்லும் கப்பல்களில் கூடத் தங்கள் பிரசாரத்தை விடாமல் நடத்துவார்கள்.

கப்பலில் மற்றொரு வசதியுண்டு. சூரிய உதயத்தையும் அஸ்தமனத்தையும் கண்டு களிக்கலாம். அதைப்போலவே சந்திரோதயத்தையும் கண்டு மகிழலாம். ஆனால் வாழ்க்கை முழுவதும் சூரிய உதயத்தைப் பார்க்கக் கொடுத்துவைக்காதவர்கள், கப்பலிலும் தூங்கத்தான் செய்வார்கள்.

கடல் நீர் பல இடங்களில் பலவிதமாகத் தோன்றும். கறுப்பாகவும், பச்சையாகவும், நீலமாகவும் தோன்றும். கடலில் துள்ளி விளையாடும் பெரிய சுறு மீன்களையும், கரையோரங்களில் நம்மை வரவேற்க வரும் பட்சிகளையும் பார்த்துக்கொண்டேயிருந்தால், நேரம் போவதே தெரியாது. நள்ளிரவிலே, சந்திரன் ஒளியிலே கப்பலின் மேல் தட்டில் தனிமையாக நின்று கடற்காற்றை அனுபவிப்பதே ஓர் ஆனந்தம். கப்பல் பகல் நேரத்தைவிட இரவு நேரத்தில் தான் அதிக வேகமாகச் செல்லும். கப்பல் எவ்வளவு வேகமாகச் செல்லுகிறதோ அவ்வளவு அதிகமாக ஆட்டம் கொடுக்கும். காற்றும் மழையும் கலந்து வருமானால், அது ஒன்றே கப்பல் பிரயாணத்தைக் கெடுப்பதற்குப் போதுமானது.

# கப்பல் ஞாபகங்கள்

சிங்கப்பூரிலிருந்து ஒரு கப்பலில் ஹாங்காங்குக்குப் பிரயாணமானேன். ஆருவது நாள் காலையில் கப்பல் துறைமுகத்தை யடைய வேண்டும். ஆனால், ஐந்தாவது நாள் இரவில் பெரும் புயற் காற்று அடிக்கத் தொடங்கிற்று. கப்பல் தொட்டிலைப்போல ஆடிற்று. எங்கும் ஒரே கூச்சல்; அழுகை. கப்பலின் தலைமை அதிகாரி பிரயாணிகளைப் பார்த்து, "இனி நீங்கள் உங்கள் இஷ்ட தேவதைகளைப் பிரார்த்தனை செய்து கொள்ளலாம்" என்று கூறினர். கப்பலில் பல மதத்தினர் பிரயாணம் செய்ததால், ஒரு மதத்துத் தேவதை இல்லாவிட்டாலும், மற்றொரு மதத்துத் தேவதையாவது கப்பலைக் காப்பாற்றலாம் என்று கப்பல்அதிகாரி எண்ணியிருக்கக்கூடும். கப்பலில் உள்ள அத்தனை பேரும், ஒரேமுகமாக, கரை சேர வேண்டுமென்று பிரார்த்தித்தனர். ஆண்டவன் வேறு விதமாக எங்களைக் கரைசேர்த்துவிடாமல், மறுநாள் காலையில் ஹாங்காங் துறைமுகத்திலேயே கரை சேர்த்து விட்டார்.

* * * *

கப்பல் துறைமுகத்துக்கு வந்தால் ஒவ்வொரு துறைமுகத்திலும் குறைந்தது சில மணி நேரமாவது தங்கும். இந்த இடைக்காலத்தில் ஏராளமான வியாபாரிகள், கப்பலுக்குள் வந்து கடையை விரித்து விடுவார்கள். பேரம் செய்வதில் இவர்களுக்கு அதிகமான லாபமுண்டு. ஹாங்காங் துறைமுகத்தில் ஒருமுறை ஒரு சீனன் கப்பலில் கடை விரித்திருந்தான். ஓர் அமெரிக்கப் பெண், அந்தக் கடையிலுள்ள ஓர் அழகிய பொம்மையைப் பார்த்து, 'இதன் விலை என்ன?' என்ருள். 'எட்டு டாலர்' என்று சீனன் பதில் கூறினன். அமெரிக்கப் பெண், 'சாமான் வேண்டாம்

என்று கூறிவிட்டாள். ஆனால், சீனன் விடவில்லை. 'உங்களுக்கு இஷ்டமான விலைக்குக் கேளுங்கள்' என்று கூறினான். ஒரு தடவை சாமானை விலைக்குக் கேட்டுவிட்டால், பிறகு லேசில் விடமாட்டார்கள். இந்த அமெரிக்கப் பெண், சீனனின் தொந்தரவு பொறுக்க முடியாமல், சாமான் வேண்டாம் என்ற கருத்துடன், ஒரு டாலருக்குக் கேட்டாள். சீனன், சிறிதும் யோசியாமல் 'சரி, எடுத்துக் கொள்ளுங்கள்' என்று கூறிவிட்டான்.

சில மணி நேரத்துக்குப் பிறகு, கப்பல் துறைமுகத்தை விட்டு நகர்ந்தது. அமெரிக்கப் பெண், தான் வாங்கிய சாமானை மற்றப் பிரயாணிகளிடம் காண்பித்து, தான் அதை ஒரு டாலருக்கு, அதாவது மிகவும் குறைந்த விலைக்கு, வாங்கிவிட்டதாகப் பெருமையடித்துக் கொண்டாள். வயதும் அனுபவமும் நிறைந்த பிரயாணி ஒருவர், அந்தப் பெண்ணைப் பார்த்து, 'அம்மா, இந்தச் சாமான் விலை அரை டாலர்தான். உங்களைக் கடைக்காரன் ஏமாற்றி விட்டானே!'' என்றார்.

* * * *

அமெரிக்கர்கள், அமெரிக்கத் துறைமுகங்களுக்கிடையே பிரயாணம் செய்யவேண்டுமானால், அமெரிக்கக் கப்பலில் தான் பிரயாணம் செய்யவேண்டும். அவ்வாறில்லாமல் வேறு நாட்டுக் கப்பல்களில் பிரயாணம் செய்தால், இரட்டிப்புக் கட்டணம் செலுத்தவேண்டும். இதில் ஒரு கட்டணம் அமெரிக்க அரசாங்கத்துக்கும், மற்றொரு கட்டணம் அந்த அந்நிய நாட்டுக் கப்பலுக்கும் சேரும். அமெரிக்கர் மட்டும் செழித்து வளர்வதற்கும், சுதந்திரமாயிருப்பதற்கும் இந்த ஏற்பாடும் ஒரு முக்கிய காரணமாகும். ஆனால், நமது நாட்டில் நாம் என்ன செய்கிறோம்? 'கதர் விலை அதிகம்' என்றுதான் இன்னும் சொல்லிக் கொண்டிருக்கிறோம்!

# பிரயாண நினைவுகள்

ஆயிரக்கணக்கான புத்தகங்களை அடுக்கிவைத்திருக்கும் அழகைப் பார்த்துக் கொண்டிருப்பதிலே எனக்கு ஆசை உண்டு. பொழுது போகாத நேரங்களிலே புத்தகக் கடைக்குச் செல்வேன். ஜப்பான் நாட்டின் தலை நகரான டோக்கியோவில் பழைய புத்தகம் விற்கும் இருநூறு கடைகள் ஒரே வரிசையாக அமைந்திருந்தன. இங்கு லட்சக் கணக்கான புத்தகங்கள் வைத்திருந்தார்கள். அவற்றில் 'ஆங்கில ஆசான்' புத்தகமொன்றும் காணப் பட்டது.

இங்குள்ளவர்களுக்குப் பெரும்பாலும் ஆங்கிலம் தெரியாது. புத்தகங்களை எடைபோட்டு விற்கும் புதுமையை அந்த நாட்டில் கண்டேன். பெர்னுடு ஷா எழுதிய சிறந்த சிறிய புத்தகமொன்று நான்கணுவுக்குக் கிடைத்துவிடும். ஆனல் கிழிந்துபோன பழைய 'சேம்பர்ஸ் டிக்ஷனரி'க்கு ஐந்து ரூபாய் கொடுக்கவேண்டும்.

* * * *

'கழுதை தேய்ந்துக் கட்டெறும்பு ஆயிற்று' என்பார்கள். இப்பழமொழி நாணய மாற்றுதலுக்கு மிகவும் பொருந்தும். ஒரு ரூபாய் நாணயத்தைப் பத்துப் பதினைந்து நாடுகளில் மாற்றினல் அது அரை ரூபாய் ஆகிவிடும். இப்படி மாற்றிக் கொண்டே போனல் கடைசியில் ரூபாயே மறைந்துவிடும். நாணயத்தை மாற்றும்பொழுது வியாபாரிகளின் நாணயமே மாறி விடுகிறது.

ஷாங்காயில் ஒரு காலத்தில் சிறிய பணம், பெரிய பணம் என்று இரண்டிருந்தன. ஒரு ஷாங்காய் டாலருக்கு முந்நூறு 'காப்பர்'கள். ஒரு 'காப்பர்' என்பது காலணு

நாணயம் அளவில் இருக்கும். ஒரு டாலருக்குச் சில்லறை மாற்றும்பொழுது இருநூற்று நாற்பது 'காப்பர்'களை ஒரு கடைக்காரன் என்னிடம் கொடுத்தான். ஒரு டாலருக்கு அவ்வளவு சில்லறையா என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டே கப்பலுக்குச் சென்றேன். கப்பலிலுள்ள ஒரு நண்பரிடம் எனக்கு வாய்த்த அதிருஷ்டத்தைக் குறித்துப் பெருமையோடு கூறினேன். அதற்கு அவர் "அட பாவமே! உங்களை அறுபது 'காப்பர்கள்' ஏமாற்றிவிட்டானா?" என்றார்.

* * * *

ரங்கூன் சென்றிருந்தபொழுது ஒரு சம்பவம் நிகழ்ந்தது. திரைப்படக் கம்பெனி முதலாளி ஒருவர், தமது படத்தை மறுநாள் காலை எட்டரை மணிக்குத் தமது திரைப்படக் கொட்டகையில் எனக்குமட்டும் காட்ட ஏற்பாடு செய்வதாகவும், பிறகு எனக்கு டெலிபோன் மூலம் தகவல் தெரிவிப்பதாகவும் கூறினர். அவர் எனக்குத் தெரிவிக்க மறந்துவிட்டபோதிலும், அந்தக் கொட்டகையிலுள்ள படம் போட்டுக் காட்டும் சிப்பந்திக்கு மட்டும் தகவல் தெரிவித்துவிட்டார்.

மறு நாள் காலை சரியாக எட்டரை மணிக்குச் சிப்பந்தி கொட்டகையின் எல்லாக் கதவுகளையும் தாழிட்டுவிட்டு, முதலாளியின் உத்தரவுப்படி படத்தை ஆரம்பித்து விட்டார். கொட்டகையில் சிப்பந்தியைத் தவிர வேறு யாருமே இல்லை. படம் மட்டும் ஓடிக்கொண்டிருந்தது!

அன்றையதினம் ஒன்பதரை மணிக்கு இந்தப் படக் கம்பெனி முதலாளி காரியாலயத்துக்குச் சென்றேன். அவர் என்னைப் பார்த்ததும், "உங்களுக்காக இன்று படம் ஓடுகிறது" என்றார்.

"எனக்காகவா?" என்றேன்.

அவருக்குத் தூக்கி வாரிப்போட்டது. "என்ன நீங்கள் இல்லாமலா உங்களுக்குப் படத்தைக் காட்டு

கிறார்கள்?" என்று கூறிவிட்டு, கொட்டகைக்கு டெலிபோன் செய்து படத்தை நிறுத்தும்படி கூறினார்.

* * * *

வெந்நீர் மழையை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அல்லது கேள்விப் பட்டிருக்கிறீர்களா?

ஹாலிவுட்டில் ஒரு ஸ்டுடியோவுக்குச் சென்ற பொழுது, மழையில் நடக்கும் காட்சியொன்றைப் படம் பிடித்தார்கள். ஹாலிவுட் 'டைரக்டர்'களுக்கு நினைத்த பொழுது மழை பெய்யவேண்டும். அதற்காக ஸ்டுடியோக் காரர்கள் ஏராளமான தண்ணீர்த் தொட்டிகளை அமைத்து, அவற்றை மின்சார விசையால் இணைத்துத் தேவையான பொழுது மழை கொட்டும்படி ஏற்பாடு செய்திருந்தார்கள்.

மழை 'சோ' என்று பெய்யும். நடிகர்கள் குளிரால் நடுங்குவர். 'டைரக்டர்' உத்தரவிடுவார். படம் பிடிக்கப்படும்.

என்னை அழைத்துச் சென்ற நண்பர், "இதோ மழை பெய்கிறதே, இது தண்ணீர் அல்ல; வெந்நீர்" என்றார். அவரை ஆச்சரியத்தோடு நோக்கினேன்.

மேலும் அவர், "தண்ணீர் மழையாயிருந்தால் சில நட்சத்திரங்களுக்கு ஜலதோஷம் பிடிக்கலாம். அப்படி நேர்ந்தால் சில நாட்கள் படம் பிடிப்பதை நிறுத்த வேண்டி யிருக்கும். படம் பிடிக்காத ஒவ்வொரு நாளும் ஸ்டுடியோக்களுக்குப் பல ஆயிரம் டாலர்கள் நஷ்டம். அதனால் தான் சொற்பச் செலவில் வெந்நீர் மழை கொட்டு கின்றனர்" என்றார்.

அந்த வெந்நீர் மழைகூட எனக்கு அவ்வளவு ஆச்சரிய மாகத் தோன்றவில்லை. ஆனால் அந்த வெந்நீர் மழையில், குளிரில் நடுங்குவதைப் போல நடிகர்கள் நடித்தார்களே, அதுதான் எனக்கு மிக ஆச்சரியமாயிருந்தது.

* * * *

நியூயார்க் நகரில் மாணவர்கள் விருந்து ஒன்றில் கலந்துகொண்டேன். அந்த விருந்தில் மாணவர்களே பரிமாறினார்கள். அங்கு கூடியிருந்த மாணவர்கள் ஐம்பத்திரண்டு தேசங்களைச் சேர்ந்தவர்கள். அவர்கள் எந்த நாட்டினரென்று ஓர் அச்சடித்த காகிதத் துண்டைச் சட்டையின் மேல் குத்திக் கொள்வதென்று ஓர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எனது மேசையில் ஒரு குறும்புக்கார கிரேக்கப் பெண் உட்கார்ந்திருந்தாள். ஒவ்வொரு மொழியிலும் வந்தனம் என்ற வார்த்தையைக் கற்றுக்கொள்வது எனது வழக்கம். அந்தக் கிரேக்கப் பெண்ணைப் பார்த்து, வந்தனம் என்பதற்குக் கிரேக்க மொழியில் என்ன சொல்வது என்று கேட்டேன்.

அதற்கவள், "பியினே பினிக்ஸ்" என்று கூறினாள்.

ஒரு கிரேக்க மாணவன் எனக்குப் பரிமாறியபொழுது, அவனைப் பார்த்துப் புன்முறுவலுடனும் அன்புடனும் 'பியினே பினிக்ஸ்' என்றேன்.

அவன் முகம் சட்டென்று மாறிவிட்டது. அவன் என் காதோடு, "இனி இந்த மாதிரி வார்த்தையைக் கூறாதே. 'பியினே பினிக்ஸ்' என்றால் 'குளத்தில் விழு' என்று அர்த்தம். இந்தத் தடவை உன்னை மன்னித்து விடுகிறேன்" என்றான்.

அந்தச் சம்பவம் நிகழ்ந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பாரிஸுக்குச் சென்றேன். அதே கிரேக்கப் பெண் பாரிஸில் படித்துக்கொண்டிருந்தாள். என்னை வரவேற்பதற்காக ரயில் நிலையத்துக்கு வந்திருந்தாள். அவளைக் கண்டதும் நான் முதலில் கூறிய வார்த்தை என்ன தெரியுமா?

'பியினே பினிக்ஸ்!'